கடவுள் துணை.

# டிரான்ஸ்வால் யுத்த சரித்திரம்

(படங்களுடன்.)

# THE TRANSVAAL WAR

COMPILED BY

J. D. DORASAWMY PILLAY,

*Sub-Editor of the "Maha Vigadathootham"*

இஃது

சென்னை மஹா விகடதூதன் பத்திரிகையின்

உதவிபத்திராதிபர்

**J. D. துரைசாமி பிள்ளையால்**

பல அங்கிலேய பத்திரிகைகளினின்று மொழிபெயர்த்து

சரித்திரத் தோரணையாய் எழுதப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE VICTOR PRESS,

1900.

*Registered Copy Right.*

# திராஸ்ஸ்வால் யுத்த சரித்திரம்.

## இராஜ்ஜிய விவரம்; யுத்தத்தின் காரணம்.

இப்போது உலகத்தின் எத்திசையிலும் யாவரது வாயிலும் புழங்குகிற திரான்ஸ்வால் யுத்தமானது தென்னுபிரிக்காவிலுள்ள குடியரசு நாடுகளாகிய பர்கர்ஸ் அல்லது போயர் என்பவர்கள், பெரும்பவர்சு அதாவது வல்லமை அரசுகளுள் ஒன்றாகியதும் இப்பூச்சக்கரவாளமெங்கணும் கெடிபெற்றுவிளங்க கொடிகட்டி ஆளும் பெருமை வாய்ந்ததுமான பிரிட்டிஷ் அரசை எதிர்த்து, தங்களுக்குச் சுயாதினம் கிடைக்கும்படியாக மல்லாடுகிற ஆச்சரியமான ஒரு பெருஞ்சண்டையே. இநத போயர்கள் உற்பத்தியானதெல்லாம் கூடி கடந்த 60-வருஷங்களாகத்தானென்று சரித்திரங்களால் தெரியவருகிறது. தென்னுபிரிக்காவின் சரித்திரத்தைக் கவனிக்கும்போது, தென் ஆப்பிரிக்காவுக்கு ஸர் ஜான் ராபின்ஸன் என்பவர் முதல் தடவையாக கப்பற் பிரயாணஞ் செய்கதில், தான் லண்டனிலிருந்து நெட்டாலுக்குப்போக 117-நாள்களும், ப்ளிம்வுத்திலிருந்து டர்பானுக்கு 98-நாள்களும்சென்றதாம். அத்தனைநாளுக்கிடையில் ஒரே முறைதான் தென் கிழக்கு ஆப்பிரிக்காவுக்குமுன் ஏதோ பூமி காணப்பட்டதாம். கப்பல் யாத்திரை யென்றால் அக்காலத்தில் வெகு அசங்கிதமாக விருந்தது. யாத்திரை செய்தான வெகுநாள் வரைக்கும் கப்பலின் நாற்றம் மூக்கிலிருக்கிறப்போலவே தோன்றுமாம். நெட்டால் தேசம் அக்காலத்தில் குன்றுகளாலும், நீரோடைகளாலும், அடர்ந்த புதர்களாலும், விருக்ஷங்களாலும் சூழ்ந்து வெகு பயங்கரமும் அழகுமாக விருந்தது. ஆயினும் அவ்விடம் வாசஞ்செய்ய வெகு யோ[illegible] தையானதாகக் காணப்பட்டது. ஆதலால் மேற்[illegible] நெட்டாலுக்குச்சென்றகாலத்தில் அதற்குமு[illegible] தான் அத்தேசம் ஆங்கிலேய ஆதரவுக்குட்[illegible] ப்பிரிக்காதேசம் அக்காலத்தில் நாகரீகமு[illegible] ளென்று நினைக்கப்பட்ட அவ்விட[illegible]

அம்மணமாக இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அக்காலத்தில் காப்பிரிகளென்று பெயர். டர்பான்தேசம் வெகு சொற்பமாக விருந்தது. அவ்விடத்தில் பிரிட்டிஷ் அரசாட்சியைப் பாதுகாக்க ஐந்நூறு சோல்ஜர்கள்தான் போதுமானதாக விருந்தது. நாலைந்து ஓலை வீடுகளும் மத்தியில் கற்கட்டடமான கஸ்டம்அவுஸ் கட்டடமும் அவ்விடத்திய வியாபாரத்திற்கும் நாகரீகத்திற்கும் அத்தாட்சியாயிருந்தன. டர்பான் தேசமெல்லாம் கூடி புதர்களடங்கிய பிரதேசத்தில் போட்டிருக்கப்பட்ட சுமார் இருபது ஓலைவீடுகளாகத்தானிருந்தன. வீடுகளின் தரை, மண்ணும் சாணமும் கூட்டிமெழுகி கெட்டிப்படுத்தப்பட்டிருந்தது. சுவர்கள் சுண்ணும்படிக்கப்பட்டாலும் படும், அல்லது இல்லவேயில்லை. பலகணிகளும் அப்படியே; கஸ்டம் அவுஸ் கலெக்டரே மாஜிஸ்திரேட் வேலையும் பார்த்துவந்தார். இவருக்கு சகாயமாக அழுக்குத்துணிகளுடன் விகார ரூபமான போலீஸ் கான்ஸ்டேபில் ஒருவன் துணையாயிருப்பான். அவ்விடத்தில் முதலில் ஜெயிலேயில்லை; அப்பால் ஒரு சிறு குடிசையை சிறைச்சாலையாக ஏற்படுத்தப்பட்டது. அதின் சுவர்கள் களிமண்ணாலும் கொடிகளாலும் கட்டப்பட்டவை. கொஞ்சம் பலசாலியாயிருக்கும் கைதி வெகு சுலபமாக அந்த சுவரைக் கையாலேயே தள்ளிவிடலாம், ஆனால் சிறைச்சாலையில் நிர்ப்பந்தங்கள் அதிகமில்லாமையால் கைதிகள் தப்பி யோடினதில்லை; கட்டுக்கடங்காத கைதிகளை தொழுவில் மாட்டுவதும் விலங்கிடுவது முண்டு. ஒருமுறை குற்றஞ் செய்தவனை இன்னொரு முறை அப்படி செய்வானாகில் அவனை கட்டிவிட்டடிக்கும் அவ்விடத்திய பழக்கமானது வெகு நன்மை செய்து வந்தது. இப்படி இருந்த தேசமானது இப்பொழுது ஐரோப்பியரால் குடியேறப்பட்டும் வியாபாரத்தில் விர்த்திபெற்றும்; பலபேர்சென்று பிழைக்க ஏதுவாகவுமிருக்கிறது.

இஃதிங்ஙனமிருக்க, இந்த போயர்கள் 1836-ம் வருஷத்தில் மு... முதலாக தங்களது தாய் தேசமான உலாந்து (Holland) தேசத்... கூட்டம் கூட்டமாக வந்து கேப்காலனியில் சேர்ந்தனர். ...சு வம்சத்தைச்சேர்ந்தவர்களென்றும் கடந்த ...கத்தான் போயர்களென்னும் பேர்புனைந்து ...கிறார்களென்றும் சரித்திரங்கள் கூறுகிற ...ம் உழவுத்தொழில் இவைகளைத்தான்

அங்கு நடத்திவந்தனராம். இதிலிவர்கள் அங்கத்தியசுதேசிகளை நடத்திவந்த அகிருத்தியங்களும் அக்கிரமங்களும் மிகப்பொல்லாததாயிருந்ததென்றுசொல்லப்படுகிறது. அச்சமயத்தில் இங்கிலாந்து பார்லிமென்ட்சபையில் அடிமை வியாபாரத்தைப்பற்றியவிவாதம் தோன்றியதில் முடிவாக அடிமைவியாபாரமே இல்லாதபடி புதிய பிரமாணம்(Law) ஒன்று உண்டாய்விடவும், போயர்கள் தங்கள்பிழைப்புக்கு ஹானிநேரிட்டுவிட்டதாகத் தெரிந்து இதுபற்றி முக்கிமுரணிக்கொண்டேயிருந்து கடைசியாக பிரிட்டிஷ்கவர்ணமெண்டின் உதாரத்வமான ராஜரீகத்தில் அதிருப்திகொண்டு தங்களது தட்டுமுட்டு தளவாடங்களையெல்லாம் வாரி கட்டிக்கொண்டு ஒரு கூட்டத்தார் ஆரெஞ்சி பிரீஸ்டேட்பக்கமும் மற்றொரு கூட்டத்தார் வயால்நதியைக் கடந்தும் தங்கள் நிலையை ஸ்தாபகஞ்செய்துகொண்டனர். இப்படி இவர்கள் நதியைக் கடந்து சென்றதை முன்னிட்டுத்தான் (வயால்—வபால நதியை, திரான்ஸ்—கடந்தது) என்னும் அர்த்தங்கொண்ட திரான்ஸ்வால் எனப் பெயரடைந்தது.

இப்படியாக இவர்கள் திரான்ஸ்வாலில் குடியேறினபிறகும், அங்கேயும் தாங்கள் சுயாதீனமாயிருக்க வியலாமல், மாடாபிலி ஜாதியாரின் தலைமைக்காரனான மொசிலிகாட்ஸ் (Mosilikatse) என்பவனது அநேக கூட்டத்தாரால் அடிக்கடி தாக்கப்பட்டு சிலமாதங்களுக்கெல்லாம் தங்களுள் அநேகர் மாண்டுமடிய நேர்ந்ததோடு சுமார் 50-ஆயிரம் கால்நடைகள் வரையில் கொள்ளையாடப்பட்டனர். போயர்களின் பலக்ஷயத்தினால் இப்படியான அபஜெயங்களுண்டாய்க்கொண்டிருந்ததில் கடைசியாக இவர்களது ஜெனரலான ஆன்டிரஸ் பிரிடோரியஸ் (Andries Pretorius) என்பவரது பெருமுயற்சியால் 1840-ம்வருஷத்தில் மிகக்கொடிதான ஒரு போர்விளைந்து அதிலே இவர்களுக்குப் பூரணவெற்றி யுண்டானது. 1848-ம் வருஷத்தில் கேப்காலனியின் பிரிட்டிஷ் கவர்னரான ஸர் ஹாரிஸ்மித் (Sir Harry Smith) [illegible]
ரெஞ்சு நதியையடுத்த தேசமுழுதும் பிரிட்டி[illegible] ராஜ்[illegible]
வெளிப்படுத்தவும், உடனே போயர்கள் [illegible]
டோரியஸ்ஸினால் நடத்தப்பட்டு அநே[illegible]
து ஸர் ஹாரிஸ்மித்தை எதிர்க்க 29[illegible]
Boomplatz) என்னுமிடத்தில் பி[illegible]

யால்நதிக்கு வடக்கே ஓடிவிட்டனர். இவர் அடிக்கடி பிரிட்டிஷாருக்கு தொந்தரையைக் கொடுப்பவராயிருந்ததால் இவரைப் பிடிப்பவர்களுக்கு 20-ஆயிரம் பவுன் பரிசு கொடுப்பதாக பிரசித்தஞ் செய்யப்பட்டது. ஆயினும் பிரிட்டிஷார் அடிக்கடி அங்கத்திய சுதேசிகளான காப்பிரி, பாசுடாஸ் இந்த ஜாதியாருடன் கொடிய யுத்தங்களைச் செய்துகொண்டேயிருக்க வேண்டியதா யிருந்தமையாலும், போயர்களுக்கு பாசுடா ஜாதியாரின் தலைவனான மோஷெஸ் (Moshes) மிகுந்த உபகாரியா யிருந்தமையாலும் அதுகொண்டு பிரிடோரியஸைப் பிடிக்கும் எண்ணத்தைத் தள்ளிவிட்டனர். இதற்குள் ஸர் ஹாரிஸ்மித்துக்குப் பதிலாக ஸர் ஜியார்ஜ் காத்கார்ட் (Sir George Cathcart) வந்துவிட 1852-ம் வருஷத்தில் ஸான்ட் நதி உடன்படிக்கை செய்து திரான்ஸ்வாலுக்கு சுயாதீனம் கொடுக்கப்பட்டுவிட்டது. அந்நாளில், யுத்தத்தில் தோற்றோடிய பிரிடோரியஸுடன் போயர்களும் ஓடிவிட்டதில் ஆரெஞ்சிபிரீஸ்டேட்டுள்ளும் பிரிட்டிஷார்புகுந்துவிட அது பிரிட்டிஷாருக்குச் சேர்ந்துவிட்டது. அப்புறமும் இந்த போயர்கள் ஷை ஆரஞ்சிபிரீஸ்டேட்டையும் தங்களுக்கு விட்டுவிடும்படியாக போராடிக்கொண்டேயிருக்க; பிரிட்டிஷாரிலும் சிலர் போயர்களுக்காக வாதித்ததில் அதுவும் 1854-ம் வருஷத்தில் புளோய்ம்பாண்டின் உடன்படிக்கையின்பேரில் விட்டுவிடப்பட்டு குடியரசாய்விட்டது.

இப்படியாக இவர்களுக்கு சுயாதீனம் கிடைத்துவிடவும், தங்களுக்கு ஒரு பிரஜாதிபதியைத் தேடிக்கொள்வதில் பெரும் சச்சரவுகளெல்லாம் நேர்ந்து கடைசியாக பேர்போன கமான்டென்ட் ஜெனரலாகவிருந்து 1853-ல் இறந்துபோன ஆன்டிரீஸ் பிரிடோரியஸின் மகனான மார்த்தியூஸ் வெஸல்ஸ் பிரிடோரியஸை 1856-ம் வருஷம் ஜனவரிமாதம் திரான்ஸ்வால் நாட்டின் வயால்நதி யோரமாயுள்ள
ட்செப்ஸ்ரூம் (Potchefstroom) பட்டணத்தில் பிரஜாதிபதியாக
ன்பிறகு 4-வருஷமானதும் 1860-ம் வருஷத்தில்
பிரிடோரியா பட்டணம் ராஜதானி பட்ட
ரியஸ் பிரஜாதிபதியின் பெயரின் காரணத்
ராஜதானி பட்டணத்திற்கு பிரிடோரியா
மயத்தில் இரண்டு நாடுகளையும் ஒரே

பிரஜாதிபதியின் கீழமைக்க பிரயத்தனப்பட்டதில் அப்படி வேண்டாமென குடிக்கலகமொன் றுண்டாய்விடவும், இக்கலகத்திற்குக் காரணமாகவிருந்த கமான்டென்ட் ஜெனரலான ஸ்கோமனை தற்காலம் பிரசிடென்டாகவிருக்கும் பால் குருகர் அப்போது ஒரு கமான்டன்டாக விருந்ததால் இவர் அவரை துரத்திச்சென்று கலகத்தை யடக்கினர். போயர்களின் ஏற்பாட்டின்படி ஐந்துவருஷத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு பிரசிடென்டைத் தெரிந்துகொள்வதாயிருந்தும் பிரிடோரியஸ் என்பவர் உத்தமராயிருந்ததில் அவரே பிரஜாதிபதியாக மறுபடி மறுபடி இரண்டுமுறை நியமிக்கப்பட்டனர். ஆனால் அவர் 1871-ல் தம் வேலைக்கு ராஜிநமா கொடுத்துவிட அடுத்த வருஷம் T. F. பர்கர்ஸ் (T. F. Burgers) பிரஜாதிபதியாக நியமகம் பெற்றனர். இவரது பெயரின் காரணத்தை முன்னிட்டுதான் போயர்கள் பர்கர்ஸ் என்னும் பெயராலு மழைக்கப்படுகின்றனர்.

இந்த பர்கர்ஸரது அரசாக்ஷியில் வடக்கேயுள்ள சுதேச காட்டுமிராண்டிகளுடன் யாதொரு பிரயோஜனமின்றி சண்டை சச்சரவுகள் செய்துகொண்டேயிருந்து கடைசியாக 1875-ம் வருஷத்தில் கடன் நிருவகிக்கக் கூடாமல் போய்விட்டது. அடுத்த வருஷத்தில் சிகுகுனி (Sekukuni) என்னும் ஓர் சுதேசதலைவனுடன் யுத்தஞ்செய்ய நேரிட்டு ஷெ பர்கரால் நடத்தப்பட்ட போயர்படை பின்னடையப்பட்டது. இதினால் இவர்கள் மற்றும் சுதேசிகளால் அழிக்கப்பட்டுப் போய்விடுவதற்குள் பிரிட்டிஷ் செகிரடெரியான ஸர். தியாபிலஸ் ஷெப்ஸ்டோன் நடுவிற் புகுந்து இவர்களுடைய இராஜ்ஜியபாரத்திலிருந்த குறைகளைமுன்னிட்டு இவர்களுக்கெதிராயிருந்த சுதேசிகளையெல்லாம் அடக்கி திரான்ஸ்வால் நாட்டை பிரிட்டிஷாருடன் சேர்த்துவிட்டனர். இப்படியிருந்தும் இரண்டொரு வருஷத்திற்குள்ளாகவே போயர்கள் இதில் திருப்திபற்று திரான்ஸ்வாலை மறுபடி தங்களுக்கே கொடுத்துவிடும்படியாக [illegible]00 பேர் கையெழுத்தடங்கிய மனு ஒன்று [illegible] படுத்தி அதற்குப் பிரதிகாரியஸ்தர்களாக கமான்டென்டு[illegible] யட், ஜோபார்ட், பால்குருகர் இவர்களை நிய[illegible] னுப்பப்பட்டது. இவர்கள் சீமைக்குச்செல்ல[illegible] கூலமாக அப்போது பிரிட்டிஷ் பி[illegible]



கிளாட்ஸ்டன் மந்திரி.

கிளாட்ஸ்டோன் தர்க்கித்து வாதாடி இவர்களுக்கு தங்கள் நாட்டையும் சுயாதீனத்தையும் கொடுத்துவிடும்படிச் செய்துவிட்டனர். இந்த மிஸ்டர் கிளாட்ஸ்டோன், மகா நிபுண சிகாமணியென்பது உலக முழுவதும் தெரிந்த விஷயம். போயர்களால் கெடுதி சம்பவிக்கக் கூடுமென்று இவர் ஞான திருஷ்டியால் தெரிந்துகொண்டது போல இதை ஒழுங்குபடுத்திவைத்தார். இவரைப்போல ஒரு மகா ஞானியாகிய ஜெர்மன் மந்திரி பிஸ்மார்க் பிரபுவும்; "தென்னாப்பிரிக்கா, ஒருகாலத்தில் படுகள பூமியாகும்" என்று தீர்க்கதரிசனம் சொல்லிவைத்ததாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இப்படியாக இவர்கள் அனுபோகக்கிழங்களானதால் கிளாட்ஸ்டன் மந்திரி இது தெரிந்து இந்த சன்னையை அறுத்துவைத்திட்டார் போலும்.

இப்படிக்கெல்லாமிருக்க திரும்பவும் போயர்கள் அடிக்கடி பிரிட்டிஷாருக்கு விரோதமாக கலகஞ் செய்துகொண்டேயிருந்து அது 1881-ம் வருஷத்தில் பெரும் யுத்தமாக மாறி, மாஜூபா குன்று என்னும் இடத்தில் கடும்போர் புரிய நேரிட்டதில், பிரிட்டிஷ் ஜெனரலான ஸர். ஜியார்ஜ் காலி (Sir. George Colley) பெப்ரவரிமீ 27உயன்று கொல்லப்பட்டுப் போய்விட்டனர். இப்பவும் அவர் விழுந்த இடத்தில் சில கற்கள் நாட்டி அதன்பேரில் (Colley Fell) "காலி விழுந்தார்" என்ற வாசகத்தை எழுதியிருப்பதுடன், இந்த மாஜூபா ஜெயத்தை முன்னிட்டு திரான்ஸ்வாலிலுள்ள குரூகர்ஸ்டார்ப் பட்டணத்தில் "பார்டிகிரால் (Paard kraal) என்னும் ஓர் பெரிய ஞாபகக் கல்மண்டபம் கட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு வருஷமும் இந்த மாஜூபா தினமான பெப்ரவரிமாதம் 27-ந் தேதியன்று ஞா... ரூபக மண்டபத்தின்மேபரில் நாட்டியிருக்கும் பீரங்கிகளிலிருந்து குண்... ...கஞ்செய்து பெரிய ஆர்ப்பாட்டமாகக்கொண்டாடுகின்றனர். ...யில் பிரிட்டிஷாரின் பெரிய ஜெனரல் விழுந்துவிடவும் ... ஒழுங்குசெய்து, இவர்கள் நாடுகளுக்கு வரும் ...ன நீதி நியாயங்கள் கொடுக்கப்படும் ...த சண்டை ஒழிந்தது.



பிரசிடேன்ட் க்ருகர்.

இப்பால் 1883-ம் வருஷத்தில் இப்போதிருக்கிற ஸ்டீவன்ஸ் பால்ஸ் ஜோஹன்னுஸ் குரூகர் (Stephanus Pauls Johannes Kruger) திரான்ஸ்வால் பிரஜாதிபதியாக ஏற்படுத்தப்பட்டனர். சுருக்கமாக இவர் மிஸ்டர் ஊம்பால் குரூகர் என்றழைக்கப்படுகிறார். இவர் 1825-ம் வருஷத்தில் குரூகர்ஸ்டாப்பில் பிறந்தவராம். இவர் பிறகு முறையே 1888, 1893, 1898 இந்த வருஷங்களிலும் பிரஜாதிபதியாக அடுத்தடுத்து தெரிந்துகொள்ளப் பட்டனராம். இவர் தெய்வபக்தியில் வெகு விசேஷித்தவராம். அல்லாமலும் மிகுந்த ஆஸ்திவந்தராம், தற்சமயத்திற்கு இவரது சுயார்ஜிதம் 30-கோடி பவுன் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. இவர் திரான்ஸ்வால் கவுன்சில் சபைக்கு முதலில் சென்றதும் அங்கு பைபில் (Bible) ஒன்று இல்லாததைப் பற்றி மிகவும் வியப்படைந்ததுமன்றி கவுன்சில் மேஜையின்பேரில் கட்டாயம் பைபில் இருக்கவேண்டுமென்றும், தான் கவுன்சிலில் குந்தும்போதெல்லாம் பைபில் எதிரிலிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினராம். உடனே ஒரு புத்தகம் கொண்டுவரப்பட மறுநாளே தெய்வ ஆராதனையுடன் கவுன்சலை துவக்கினராம். இவர் அதிகாலையில் எழுந்துகொள்ளும் வழக்கமுடையவராம். காலை 2-மணிக்கு எழுந்து அறையில் தமது பெரியநாற்காலியில் குந்திக்கொண்டு 8-மணிவரைக்கும் தன் நீண்ட சுங்கானை வாயில்வைத்துப் பிடித்துக்கொண்டு யோசனையிலிரு[...]ராம். பிறகு செக்கிரடெரிகள் வந்து கூடுவார்களாம். இவருக்[...] சமய[...] 4-மணி சமயமும் வெகு பிரியமான நே[...] சமயத்தில் யாராகிலும் இவரிடம் சம்பாஷிக்க[...]டாராம். இவரது சம்பாஷணை [...]றுணர்ந்தவராயினும் டச்சுபாஷை[...]

பக்தியில் விசேஷித்தவரானதால் பைபிலையே எப்போதும் கையாடுவாராம். இவரின் மனைவியாருக்கு சுமார் 60 வயசுக்கு மேலாகிறதாம். பிள்ளைகள் 16-பேரும், பேரப்பிள்ளைகள் 104-பேரும் இவருக்கிருக்கிறார்களாம். இதில் 26-பேர் தற்போதைய சண்டையில் முனைமுக வீரராய் நிற்கின்றனராம்.

இவரைச்சார்ந்த மேற்படி போயர்களுக்குத் தென்னாப்பிரிக்காவில் உரிமை சுதந்தரம் உண்டானதற்குக் காரணமென்னவெனில்: போர்த்துகல் தேசத்தானாகிய பார்த்தலோமேயு டையஸ் 1486-ம்வருஷத்தில் ஆப்பிரிக்காவின் தென்முனையாகிய நன்னம்பிக்கை முனையைக் கண்டுபிடித்தனர். அவர் அதைக் கண்டுபிடித்த சமயத்தில் அடித்த புயலினால் அதற்கு புயல்முனை என்று பெயரிட்டனர். அதனால் அங்கிருந்து இந்தியாவிற்கு வரலாமென்ற உறுதியினால் அதற்கு நன்னம்பிக்கைமுனையெனப்பெயர் உண்டாயிற்று. அதேவண்ணம் 1497-ம்வருஷம் வாஸ்கோடிகாமா இம்முனையைச்சுற்றி பிரயாணஞ்செய்து கள்ளிக்கோட்டை வந்திறங்கினர். அதுமுதல் 150 வருஷங்களாக போர்த்துகீஸியரும் இங்கிலீஷ்காரரும் டச்சுக்காரரும் இம்முனையை உபயோகித்து வந்தார்கள். 1652-ம் வருஷத்தில் டச்சு ஈஸ்ட் இந்தியா கம்பனியார் கேப்பில் குடாவைப்பிடித்து ஒரு கோட்டை கட்டியபின் அது டச்சுக்காரரின் குடிபேற்ற நாடானது. ஆனால் ஐரோப்பாவிலுண்டான குழப்பத்தால் 1814-ம் வருஷத்தில் இதுவும் இங்கிலீஷ்காரருக்கு சொந்தமான மற்றநாடுகளும் இங்கிலாந்துக்குக்கொடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் இவைகளுக்கீடாக 60-லக்ஷம்பவுன் டச்சுக்காரருக்குக்கொடுத்தார்கள். நிற்க, திரான்ஸ்வால் குடியரசு நாட்டின் விஸ்தீரணமாத்திரம் 119,130 சதுரமைல். தென் ஆபிரிக்காவில் இந்த சண்டை தொடங்குவதற்கு முந்தி அங்கிருந்தவர்களின் ஜனத்தொகையைக்கணக்கிட்டதில் திரான்ஸ்வாலில் [illegible]டிஷார் 125000 டச்சுக்கார 90000. ரோடிஷியாவில் பிரிட்டிஷார் [illegible]ச்சுக்காரர் 2000. புச்சுனாலாண்டில் இருவகுப்பாரும் தனித்த [illegible]ட்டாலில் பிரிட்டிஷ்காரர் 45000 டச்சுக்காரர் 8000. [illegible] பிரிட்டிஷ் 20000 டச்சு 90000. கேப்காலனி [illegible]0. ஆக மொத்தத்தில் பார்க்க [illegible]0 பேர் அதிகமாக விருந்ததாம்.

இஃதிங்ஙனமாக, இந்த போயர் குடியரசுக்கு 5 மெம்பர்களடங்கிய ஒரு ஆலோசனை சங்கமுமுண்டு. இதில் போய் குடியேறியிருக்கிற பிரிட்டிஷாரையும் மற்ற தேசத்தாரையும் அன்னியர் என்று அருத்தம்கொள்ளுகிற அவுட்லாண்டர் என்றழைக்கிறார்கள். இந்த அவுட்லாண்டர்கள் சர்க்காருக்கு வரிப்பணம் மிகுதியானபாகம் செலுத்துகிறவர்களாயிருந்தாலும் ஷை அரசாக்ஷியில் இவர்கள்சொல் கேட்கப்படுகிறதில்லை. ஆளுகை விஷயத்தில் போயர்களுக்கிருக்கிற உரிமை சலாக்கிய மிவர்களுக்குக்கிடையாது. அந்த உரிமை சலாக்கியம் அவுட்லாண்டர்களாகிய தங்களுக்கும் வேண்டுமென்று வாக்குவாதஞ் செய்ததில்தான் இப்போது யுத்தமுண்டாயிருக்கிறது. போயர் மந்திராலோசனையில் பிரிட்டிஷ் அங்கங்களையும் தெரிந்துகொள்ளவேண்டுமென அபேட்சித்தும் அவர்கள் சம்மதிக்கவில்லை. இவர்கள் நியாயமாய்ப் பேசி சமாதானத்திற்குவரக் கேட்டும் போயர்கள் அதற்கு உடன்படவில்லை. ஆகவே இங்கிலீஷார் அவர்களுடன் யுத்தத்திற்கு கட்டாயம் போக நேரிட்டுவிட்டது.

அல்லாமலும் 1885-ம் வருஷத்தில் திரான்ஸ்வாலின் பெரிய ஒரு பட்டணமான ஜோஹன்னஸ்பர்க்கில் பொன் எடுக்கப்படும்படியான சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்படவும் இதன்பேரிலிவர்கள் மிகுதியும் ஐசுவரியவான்களாகி இரகசியத்திலே அன்னிய இராஜாங்கங்களிடமிருந்து அபரிமிதமாக யுத்தாயுதங்களை வாங்கிச் சேர்த்துக்கொண்டனர். இப்படி ஜோஹன்னஸ்பர்க்கில் பொன்சுரங்கங்கள் கண்டுபிடிக்கவும், இதன் மூலமாகவும் அன்னிய நாட்டார்கள் அபரிமிதமாக அதில்போய் சேருவதற்குத்தலைப்பட அவ்விதம் வந்தவர்களையும் போயர்கள்,ஷை வெளிநாடார்கள் என்றருத்தம் கொள்ளும்படியான "யூட்லாண்டர்ஸ்" (Utilanders) என்றும் பெயரைக் கொடுத்து புறக்கணித்து அப்படி வந்தவர்களைக் குரூரமாய்நடத்தியும் அதோடு அவர்களுக்குஞ் சரியான நியாயங் கிடைக்க வழிவிடாமலு மிருந்துவந்ததா[illegible] 1896 - ம் வருஷத்தில் டாக்டர் ஜேம்ஸன் என்னும் [illegible] யர் ஒருவர் எழும்பி தம்போலொத்த பெரும் தன[illegible] லாம் தூண்டிவிட்டு போயர்களுக்கு விரோ[illegible] விட்டனர். அப்படி கலகஞ் செய்தவர்களை [illegible] டென்டான கிரான்ஜி என்பவர் தா[illegible]

ஸனையும் அவரைச் சேர்ந்த அநேகரையும் சிறையாகப் பிடித்துக்கொண்டனர். இந்த சிறு சண்டை நடந்ததற்காக, பிரிட்டிஷார், டாக்டர் ஜேம்ஸனையே கண்டித்து ஒருவாறு அதை ஒழுங்குபடுத்தி வைத்தனர். இந்த ஒழுங்கும் மிஸ்டர் கிளாட்ஸ்டன்என்னும் திரிகாலக் கியானியால்தான் நிறைவேறப்பெற்றது. இங்ஙனமானதில் மறுபடியுமிவர்கள் தங்களது பழைய வழக்கப்பிரகாரமே அன்னியர்களை குரூரமாய் நடத்திவரத் துவக்கவும் அவர்களெல்லாரும், பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்கு பெரிய முறையமிட்டுக்கொள்ள, இதுகொண்டும் அவசியம் இந்த யுத்தத்திற்குத் தலையிடலாயிற்று.

## II-அத்யாயம்.

### யுத்த ஆரம்பம் ; மூன்று பட்டணங்களின் முற்றுகை.

பிரிட்டிஷாரின் கலோனியல் செகிரடெரியான ரைட் ஆனரபில் ஜோசப் சாம்பர்லேய்ன், ஐகமிஷனரான ஸர் ஆல்பிரட் மில்னர், ரைட் ஆனரபில்செசில் ஜான் ரோடஸ் இவர்களெல்லோரும் இதுபற்றி எவ்வளவோ நியாயமாய்ப்பேசி ஏகமனதாய் ஒருமித்து சமாதானமாயிருக்கக்கேட்டும் போயர்கள் ஒத்துவரவில்லை. அதோடு கடந்த 1899-ம் வருஷம் மே மாதம் 30-ந் தேதி ஸர் ஆல்பிரட் மில்னர் புளோயம்பாண்டீனுக்குச் சென்று அங்கு பிரிஸிடெண்ட் குரூகரை சந்தித்து காரியங்களை ஒழுங்குபடுத்தக் கேட்டும் முடியாமல் போய்விட்டது. எனவே இவ்விஷயம் வாய்ப்பேச்சில் முடியாதெனக் கண்டு பிரிட்டிஷார் அங்குள்ளசேனைகளுடன் சீமையிலிருந்தும் துணைப்படைகளைத்தருவிக்க நேர்ந்தது. அப்படியே இராணுவங்களும் புறப்பட்டுவிட்டன. இங்கிலாந்திலிருந்து பிரிட்டிஷார் யுத்தத்திற்குப் புறப்படும்போது மகாரா[illegible]யார்தமது சேனைகளை வழிகூட்டி யனுப்புகையில் ஆண்டவன் மீதி[illegible] எல்லாநம்பிக்கையும் வைத்து "நீங்கள் எல்லோரும் வெகுநே[illegible] தகுதியுள்ளவர்களாகவுமிருக்கிறதைக்காண நான் மகிழ்ச்[illegible]போது நீங்கள் தென் ஆபிரிகாயுத்தத்திற்குப்புற[illegible]கள் படையெழுச்சியில் ஆண்டவன் உங்களு[illegible]படியும் யாதொரு துன்பமின்றி க்ஷேம[illegible]த்திக்கிறேன்" என்றனர். பிறகு

பிரின்ஸ்ஆவ் வேல்ஸ் அவர்கள் சேனைகளை நோக்கி "நான் உங்களைக்கா ண மிகவும் ஆநந்திக்கிறேன். இப்போது முனைமுகத்திற்கு எழும்புகி றீர்கள். நீங்கள் நல்ல தேகக்கட்டுள்ளவர்களாகவும் நோயற்றவர்களு மாயிருக்கிறீர்களென நம்புகிறேன். உங்கள் தளகர்த்தரின் நடத்துத லில் நீங்கள் உற்சாகமுடையவர்களாய் போர் புரிவீர்களென உறுதி கொள்ளுகிறேன். எல்லாவற்றிலும் உங்களை ஆண்டவன் ஆசீர்வதிப் பார் என்று நம்பி, உங்கள் ஒவ்வொருவருக்கும் என் முகமன் கூறுகி றேன். நீங்கள் சுகத்துடனும் சீக்கிரமாகவும் திரும்ப ஆசிக்கிறேன்" என்று வாழ்த்து கூறியனுப்பினர். அங்குசேரும் இராணுவங்களையெ ல்லாம் நடத்த ஜெனரல் ஸர். F. பாரிஸ்டர் வாக்கர் இங்கிலாந்திலிரு ந்து ஆகஸ்டு மாதம் 19 ந் தேதி புறப்பட்டு விட்டனர். இப்படியாக அங்கு நடக்கும் காரியங்களெல்லாம் யுத்தத்தின் பயங்கரத்தைக்காட் டவே அம்மாதத்திலேயே அங்கு வசிக்கும் அன்னியர்களெல்லாம் தங் கள் குடும்பங்களோடு பிரிடோரியாவை விட்டுப்புறப்படத் துவங்கிவி ட்டனர். இந்தியாவிலிருந்து செப்டம்பர் மாதத்திற்குள் 6000 பிரிட்டி ஷ் சோல்ஜர்கள் டர்பான்வந்து சேர்ந்துவிட்டனர். அப்படியே போ யர் துருப்புகளும் அக்டோபர்மீ 2 ந் தேதி நெட்டால் பக்கமாக வெ ளிப்புறப்பட்டனர். அப்போதே 4 ந் தேதியன்று திரான்ஸ்வாலிலிருந் து கேப்டவுனுக்குப் போய்க்கொண்டிருந்த 5 லக்ஷம் பவுண்பெறுமான பிரிட்டிஷாரது பொன்னை போயர்கள் பிடித்துக்கொண்டனர்.

காரியங்கள் இப்படி நடந்துகொண்டிருக்கையில் திரான்ஸ்வால் நாட்டார் சண்டை தொடங்குவதற்குமுந்தி ஆலோசனைசெய்யத் தங்க ளது வோள்க்ஸ்ராட் என்னும் கூட்டம்கூடினர். ஷ மந்திராலோசனை சபையில் பிரசிடென்ட் குரூகரானவர் ஆலோசனையின் முடிவில் தன் அபிப்பிராயத்தைக் கூறினதில் "தற்சமயம் இருக்கும்படியான நிலை மையானது சண்டையிலேயே முடிய வேண்டியதாயிருக்கிறது. ஏனெ னில் பிரிட்டிஷார் ஆபிரிக்கான்டர்களாகிய நாம் ஒரு அரசாக்ஷி... யிருக்கவிடக் கூடாதென்றும், ஆண்டவர் நமக்குக் கொடுத்... த்தை நாமனுபவிக்க விடக்கூடாதென்றும் அவர்கள் ... எண்ணத்தினாலேயே. ஆயினும் ஆண்டவரே ... மத்தியஸ்தராயிருந்து இதைத்தெரிந்து... ஷத்தில் அந்த சமயத்திற்கடுத்த உ...

டிஷார் நமக்களித்த சரிசமான சுவீகார ஏற்பாட்டை விட்டுக்கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். அந்த சரிசமானமான சுவீகாரம் வர்த்தகத்திற்கென்றே கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் இப்போது அவர்கள் நம்முடன் யுத்தம் செய்யவேண்டுமென்றே எண்ணியிருப்பதால் ஆண்டவன் தான் இதற்கு நியாயந் தீர்ப்பாராக. எதிரிகளின் தீமை ஆயிரமாயிரமாய் வந்து நம்மை எதிர்த்தாலும் ஆண்டவன் நம்மைக்கைவிடாது காப்பார். நீங்கள் 118-ம் சங்கீதத்தின் 7-வது வசனமாகிய "எனக்கு அனுகூலம் பண்ணுகிறவர் நடுவில் கர்த்தர் என் பக்ஷத்திலிருக்கிறார்; என் சத்துருக்களின் சரிக்கட்டுதலைக் காண்பேன்" என்னும் மேலான வாக்கியத்தை வாசித்து ஆண்டவரை நோக்கி ஜெபியுங்கள். எதிரிகளுடைய குண்டுகளுக்கு பயப்படாதீர்கள். டாக்டர் ஜேமிஸன் கலகத்தைப்பாருங்கள், அப்போது நூறாயிரம் குண்டுகள் பறந்தும் ஒருவன் தான் அடிப்பட்டான். அப்படி அந்த குண்டுகளை தப்பிப்போகச்செய்தவர் யார்? கர்த்தர் தான். அவரே உலகத்தையாளுகிறார்; வேறு யாருமில்லை. ஆபிரிக்காண்டர்களாகிய நமக்கு இப்போதுதான் சுயாதீனம் கிடைக்க நாளாச்சுது போலிருக்கிறது. ஒரு வாலிபன் சுயாதீன மடையாது பலமுள்ளவனாகமாட்டான் என்பது போல அந்த சுயாதீனத்தை தெய்வந்தான் நமக்குக்கொடுத்தனுப்பினர் போலத்தோன்றுகிறது. ஆகவே நாம் இங்கிலாந்துக்குள் அடங்குவதற்கு முந்தி, நம் கடைசித்துளி இரத்தம்சிந்தவேண்டியது. இப்போது சமாதானத்திற்கு முயற்சிப்பது கூடாத காரியமாயிருப்பதால் புஜந்தட்டி நிற்கவேண்டிய தவசியமே. ஆகவே கடவுளை எவனொருவன் கூப்பிடுகிறானோ அவன் இரக்ஷிக்கப்படுவான். அவருக்கு விரோதமாய் கலகஞ் செய்கிறவன் தண்டிக்கப்படுவான். ஆனதால் ஒவ்வொருவரும் தங்களை யுத்தத்திற்கு நடத்தும் கமான்டென்டு ஜெனரலுக்காக கடவுளைப் பிரார்த்திப்பார்களாக" என்றனர். பிறகு மேற்படி சபையில் ஒரு
...ாசனைக்கர்த்தராயிருந்த மிஸ்டர். ஏ. டி. வோல்மாரன்ஸ் என்ப
...து, "நான் இச்சண்டைக்கு முதல் படையோடு சென்று
...மேற்படி என் மற்றுமான யுத்தஅலுவல்கள் என்னை
...தைப்பற்றி நான் மிக்க விசனிக்கிறேன். நம்
... எப்படிப்பட்ட எதிர்மறுப்பு சண்டைவ
...இருக்கிறேன். இந்த சண்டையைப்ப

ற்றி நம் துடுக்கான வாலிபர்களுக்கு யாதொன்றும் தெரியாதிருந்தும் சண்டைக்கு முன்னேறி வந்திருப்பதை நான் கண்டேன். அப்பேர்ப்பட்ட வாலிபர்கள் கிறிஸ்த ஜனங்கள் என்கிற ஒரு நல்ல பெயருக்கு பங்கம் நேரும்படியான ஒரு காரியமும் செய்யவில்லையென்று நினைத்துக்கொள்வார்களாக. ஆயினும் அவர்கள் பாவத்தையுணர்த்தி சீர்ப்படுத்தும்படியாகவே இங்கிலீஷ்காரராகிய தேவதண்டனையை அனுப்பியிருக்கிறரென்றாலும் நம்மவர்களை எதிரிகளிடத்தில் கொடுக்காதிருக்கும்படியாக என் ஜெபத்தில் மன்றாடுகிறேன். இவர்கள் சண்டை புரிந்து வெற்றியுடன் திரும்பும்போது யாதொரு உடன்படிக்கைக்கும் உட்படாதவர்களாய் சுயாதீன சித்தராய் திரும்புவார்களென நம்புகிறேன். இங்கிலீஷியர்கள் யாதொரு சிநேகத்துவத்தையாவது உபேக்ஷிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆ! ஆண்டவர் ஒருவரே சரியான மத்தியஸ்தஞ் செய்து அவருடைய சித்தத்திற்கு எது நீதியாய் காணப்படுகிறதோ அதற்கே நாம் உட்படவேண்டியவர்களாயிருக்கிறோம் என்றார். அதன்பிறகு மற்றொரு ஆலோசனைக் கர்த்தராகிய மிஸ்டர் எஸ். டப்ளியூ பார்கர் எழுந்து "நாம் இப்போது எதிரிகளுடன் போர்புரிய வேண்டியவர்களாயிருப்பதால் நீங்கள் எல்லோரும் ஒருமனப்படுங்கள். இந்த சண்டையில் நானும் இராணுவத்தை நடத்த பாக்கியம்பெற்றிருப்பதால் என்னுடன் நீங்களும்சேர்ந்து கடவுளைநோக்கிப் பிரார்த்தியுங்கள். கடவுளுடைய ஆசீர்வாதம் நம்முடன் தங்கியிருக்கிறதென்று நான் நம்புகிறேன். நம்முடைய நீதி நியாயமே நம்மை பாதரிக்கக் காரணமாயிருக்கிறது." என்றனர். கடைசியாக மேற்படி சபையில் அங்கமாய் விஜயஞ் செய்திருந்த ரெவ்ரெண்ட், வாண்பிராக்கியூசன் என்னும் பாதிரியார், தங்களுடைய ஏற்பாடுகளெல்லாம் நீதியும் நியாயமுமாய் இருக்கிறதென்று நம்புகிறதால் தாங்கள் இச்சண்டையில் மோசமின்றி பாதுகாக்கப்படவும், ஜெயசீலர்களாய்த் திரும்பவும் ஆண்டவனை நோக்கி வெகு உருத்தமாய் ஜெபம் புரிந்தனர்.

இப்பால் 1/9-ந் தேதியன்று திரான்ஸ்வால் கவர்ணமெ[illegible] டைசியான கடி[illegible]மெழுதி அதில் 30-மணி நேரத்திற்குள்[illegible] ட்டிஷ்படைகளும் திரான்ஸ்வால் எல்லையிலிரு[illegible] டுமென்றும்ஜுன்மாதத்திலிருந்து, வந்த [illegible] பிரிக்காவிலிருந்து புறப்பட்டுவிட

கும் சேனைகள் எந்த துறைமுகத்திலும் இறக்கப்படக்கூடாதென்றும் இல்லையேல் யுத்தம் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவித்தனர். இக்கடிதத்திற்கு பிரிட்டிஷாரின் ஜவாப்பெல்லாங் கூடி "பிரிஸிடென்ட் குரூகர் இவ்வளவு கண்டிப்பான கடிதம் பிரிட்டிஷாருக்கு எழுதியதற்காக விசனிக்கிறோம்' என்பதே. அன்றையத்தினமே அதாவது சண்டைக்கு (Ultimatum) கடைசி வாக்குக்கொடுத்த அக்டோபர் ௴ 10௳ யன்றே குரூகரின் 74-வது பிறந்தநாள் கொண்டாட்டமுமுண்டாகிவிடவும் பிரிடோரியாவில் கொடிகளை எல்லாம் பறக்கவிட்டு வந்தனோபசார குண்டுகள்போட்டனர். அன்றையத்தினம் வெளிநாட்டு பவர்ஸ்களின் பிரதிநிதிகள் பிரிஸிடென்டை வந்து கண்டனர். பிரிட்டிஷாரின் பிரதிநிதியாக மிஸ்டர் கிரீன் வந்திருந்தனர். அச்சமயத்தில் கூடியிருந்த தமது நகரத்தாரை குரூகர் நோக்கி "இனி உங்களை நம்பாதிருங்கள், நம்மீது ஆண்டவன் குண்டுகளை அனுப்பியிருப்பதால் அவரில் நம்பிக்கைவையுங்கள். முந்திய காலங்களை கவனியுங்கள். அச்சமயங்களில் நமது எதிரிகள் ஏராளமாயிருந்தும் நம் போயர்கள் சிலர் தான்விழுந்தனர்; ஆகவே தைரியத்தில் நிலையாயிருங்கள்" என்றதும் எல்லோரும் **வோல்கஸ்லிட்** என்னும் தங்கள் இராஜவாழ்த்து கீதமாகிய

"இத்தனைகாலம் அசட்டையா யிருந்தபோதிலும் வீரியம்பொருந்திய ஜனங்களாகிய நீங்கள் யாவரும் சேருங்கள்.

முன்னமே நாம் நிற்கும் சுயாதீனத்திற்குப் பொருளையும் இரத்தத்தையுஞ்சிந்தினோம்;


நமது துன்பங்களெல்லாம் அற்றுப்போக, வாரும் நகரத்தாரே! நமது கொடி பறக்கட்டும்;

அந்த சுபாதீன ஜனங்கள் நாம்! சுயாதீன ஜனங்கள்! சுயதீன ஜனங்கள்! அந்த சுபாதீன ஜனங்கள் நாம்" என்று பாடிக்கொண்டே சண்டைக்கெழும்பிவிட்டனர்.

குறித்தநேரமானதுபிரிடோரியாவில் மாலை 5-மணிக்கு முடிந்தது. [illegible]ன்ஸ்வாலின் எல்லையிலுள்ள மாபிகிங், ஆரஞ்சிபிரிஸ்டேட்டின் [illegible]ர்லி இவைகள் பயங்கரநிலையிலிருந்ததுடன் போயர் படை [illegible]ள்ளேயும் புகுந்துவிட்டனர். இதனால் அங்குள்ள [illegible]ப்பியர்கள் ஆயிரங்கணக்காய் கேட்டவுனுக்கு [illegible]ன்றையதினமே பிரிட்டிஷாரின் 400- [illegible]விட்டன. நெட்டால்மீது படை

பெடுத்துச்சென்ற போயர்கள் அங்கத்திய இராணுவபயிற்சிக்கிடமான லேடிஸ்மித்தையும் முற்றுகைசெய்யக் கருதவும், அப்போது நெட்டாலிலிருந்த 15-ஆயிரம் பிரிட்டிஷ் துருப்புகளில் 9-ஆயிரம் பேர் 32-பீரங்கிகளுடன் லேடிஸ்மித்தைக் காத்துநின்றனர். கிளென்கோவை 4 ஆயிரம் வீரர் பீரங்கி பத்திரி மூன்றுடன் காத்துநின்றனர். மற்றும் சேனை வீரர் பகுதிபகுதியாக எஸ்ட்கோர்ட், கோலென்சோ இப்பட்டணங்களிலெல்லாம் நிறுத்தப்பட்டனர்.

யுத்தம் தொடங்கியபோது நெட்டாலிலுள்ள துருப்புகளுக்கெல்லாம் கமான்டென்டாக நியமகம்பெற்றவர் ஜெனரல் ஸர் ஜியார்ஜ்வொயிட், V. C., G. C. B., G. C. I. E., G. C. S. I., என்னும் இந்த மகா வீரரே. இவர் ஐர்லாந்தில் பாலிமீனுபட்டணத்தில் 64-வருஷங்களுக்கு முன்னே பிறந்தவர். ஸான்டர்ஸ் பட்டணத்து யுத்தகலாசாலையில் பயின்று முதலாவதாக இந்திய சிப்பாய் கலகத்தில் ராயல் இன்னிஸ் கிலிங்ஸ் படையை நடத்தினர். 1863-ம் வருத்தில் காப்டனாகி 1873-ல் மேஜரானர். 1878-ம் வருஷத்தில் ஆப்கான் யுத்தத்தில் ஜெனரல் ராபர்ட்ஸின் கீழிருந்தனர். இந்த யுத்தத்தில்தான் இவர் V. C. என்னும் வீர மெடில் பெற்றனர். ஆப்கானியர்கள் சாராஸியாவையடுத்த குன்றில் பலமாக அரண் செய்துகொண்டு மிகுந்த கடும்போர் செய்தபோது அந்த இடத்திற்கு இவர் சொற்ப தொகைவீரரோடுசென்று, மிகுந்த கொடிய நெருப்பினூடே மார்பால் நகர்ந்து உச்சிக்குஏறி ஆப்கானிய தலைவனை தமது கையாலேயே கொல்ல அவனது வீரர் ஓட்டமெடுத்து விட்டனர். பிறகு காபூல், மேய்டன் ஷர்பர், டாக்டிஷா, கான்டாஹாருக்கு செய்த பெரும்பிரயா[illegible] மிவைகளிலெல்லாம் கலந்திருந்து ஒரு மெடலும் மற்றும் 3 [illegible] (Clasp) என்னும் சிறு மெடல்களும் பெற்றனர். பர்[illegible] கேடை நடத்தினர். பிறகு இவரது வீரச்செய[illegible] ர்ணமென்டாருமிவரை மெச்சியதில் இந்[illegible] ம் முதல் 1898-ம் வருஷம் வரை [illegible]



ஜெனரல் வோயிட்.

ற்றனர். இவருக்கு சீப் ஸ்டாப்பாக ஸர் ஆர்ச்பாள்ட் ஹண்டர், K. C. B. நியமிக்கப்பட்டனர். மேலும் இவருக்கு உதவியாக மேஜர் ஜெனரல் ஸர் வில்லியம் சிம்மண்ஸ் K. C. B யும், ஜெனரல் யூலுமிருந்தனர்.

அக்டோபர் மாதம் 14-ந் தேதியன்று போயர் தளபதியான கமான்டென்ட் பென் வில்ஜாய்ன் தனது பகுதியுடன் நியூகாஸல் பட்டணத்தைப் பிடித்தனர். ஆனால் 13 தேதியன்று பிரீஸ்டேட் சேனைகள், லேடிஸ்மித்துக்குமேற்கே 25 மைலில் ஆக்டன் ஹோம்ஸ் என்னும் கிராமத்தண்டையும், நெட்டாலுக்கு 15 மைலிலுள்ள பெஸ்டர் ஸ்டேஷனையடுத்த சமீபத்துள்ள ரெயில் பாதையின் மீதுமிருந்த ஜெனரல் வொயிட்டினுடைய வெளிக்காவல் படைகளுடன் எதிர்த்து போர்புரிந்ததில் துரத்தப்பட்டனர். பிறகு 20-ந் தேதியன்று கிளென்கோ ஜங்ஷனுக்கு கிழக்கே 4-ஆயிரம் பிரிட்டிஷ் வீரர் ஜெனரல் சிம்மண்ஸ் நடத்துதலின் கீழ் பாளையமிறங்கியிருக்க அன்று காலை 5½மணிக்கு டண்டிக்கு ஒரு மைலிலுள்ள தாலானு குன்றில் ஸ்தாபித்திருந்த பீரங்கிகளைக்கொண்டு போயர்கள் குண்டுபிரயோகஞ் செய்ய உடனே சில நிமிஷத்திற்கெல்லாம் பிரிட்டிஷார் தயாராகி தாங்களும் எதிர் பீரங்கி குண்டுபிரயோகஞ்செய்யத் தொடங்கினர். இப்படி ஒரு மணி நேரம் வரைக்கும் குண்டுபிரயோகஞ் செய்ததில் போயர்களுடைய பீரங்கிகளடங்கிவிடவே, ஜெனரல் சிம்மண்ஸ் குதிரைப்படை காலாட்படை இவைகளை அணியணியாக வகுத்து குன்றின்மீது முன்னேறச் செய்ய, அவ்வண்ணமே பிரிட்டிஷ் வீரர் வெகு வீரமாய் துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டே ஏறினர். அச்சமயங்களில் அங்கு செய்குன்றங்களமைத்துக்கொண்டு போயர்கள் சுட்டுக்கொண்டிருந்ததானது பிரிட்டிஷ் வீரர்மீது அக்கினி மாரிபோல் வருஷித்தன. இதன் நடுவில் பிரிட்டிஷார் மிகுந்த கஷ்டத்தோடு அரைவாசி முன்
னக்கேறியும், ஐயோ! 11-மணி சமயத்தில் ஜெனரல் சிம்மண்ஸ் வயிற்
ப்பாக்கி குண்டடிபட்டுக்கீழே வீழ்ந்தனர். வீழ்ந்ததுடன் எதி
வமகப்பட்டு மூன்று நாளைக்குப்பிறகு 23-ந் தேதி இற
படியிருந்தும் பிரிட்டிஷார் மத்தியான வேளையில்
க நோக்கியதில் இவர்கள் குப்பல் குப்பலாய்
முன்சென்று போயர்களுடன் கைகல

ந்து துப்பாக்கி சனியனால் அநேகரைக் குத்தி வீழ்த்தி அங்கிருந்த போயர் ஸ்தானங்களைக் கைப்பற்றினர். போயர்களுடையவும் பிரிட்டிஷாருடையவும் காயமடைந்தவர்கள் கொல்லப்பட்டவர்கள் இங்குமங்குமாய்க் குவிந்துகிடந்தனர். இச்சண்டைதான் (கிளென்கோ சண்டையென்னப்பட்ட) போயர்களிடம் போட்ட முதலாவதான யுத்தம்.

இதில் பிரிட்டிஷாரில் ஜெனரல் சிம்மண்ஸுடனும் மற்றும் 32 ஆபீஸர்களும், 182 வீரரும் காயமடைந்தும் கொல்லப்பட்டும் போயினர். என்றாலும் ஜெயமடைந்தனர். ஜெனரல் சிம்மண்ஸ் காயமடைந்துவிடவே, ஜெனரல் யூல் கமாண்டாக ஏற்பட்டு சேனையை நடத்தினர். இதற்குள் மறுபடி போயர்களதிகமான தொகையாய் இவரது பாளையத்தையும் ஸ்தானங்களையும் சுற்றி வளைந்துகொள்ளப் பிரயாசித்ததையறிந்து லேடிஸ்மித்துக்கு சேனைகளை பின்னிடையச் செய்தனர். இப்போது போயர்களும் சும்மாயிராது மறுநாள் 21-ந் தேதியன்று இரண்டாயிரம் பேர்கள்வரையில் இலான்ஸ்லாக்டி (Elandslaagte) ஸ்டேஷன் பக்கமாக சேர்ந்துகொண்டிருப்பதைக் கண்ட ஜெனரல் வொயிட் உடனே சேனைகளை ஜெனரல் பிரென்சின் நடத்துதலின் கீழ் அங்கனுப்பினர். இவர்களும்சென்று எதிரிகளை இலான்ஸ்லாச்டி ஸ்டேஷனையடுத்த குன்றங்களில் ஸ்தானங்கள் கட்டிக்கொண்டிருக்கக் கண்டதும் வெகுநேரம் கடும்போர் புரிந்ததின்பிறகு போயர்கள் புறங்காட்டி ஓட்டமெடுத்தனர். இந்த யுத்தத்தில் போயர்கள் பிரிட்டிஷார் பிகிலூதுவதைப்போல ஊதியும், வெள்ளைக்கொடி காண்பித்தும் இப்படி மோசகிருத்தியங்களெல்லாம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்விடத்து சண்டை இன்னமும் நீடித்திருக்குமாயின் போயர்களுக்கதிகமான சேதம் நேர்ந்திருக்குந்தான். அவர்கள் பக்கம் 400 பேர்வரை கொல்லப்பட்டும், காயமடைந்ததுடன் 200 பேர் சிறையாகவும் பிடிக்கப்பட்டனர். இதில் போயர் கமாண்டன்டான பென் வில்ஜாய்ன் கொல்லப்பட்டதோடு ஜெனரல் காக் காயமடைந்தும், கமாண்டரி
சிப்பான ஜோபர்ட்டின் சகோதர மகனாகிய பையட் ஜோப
கமான்டென்ட் பிரிடோரியசும், ஜெர்மன்காரரொருவரா
ஸ்கீனும் சிறையாக்கப்பட்டனர். அதோடு 2 பீரங்
ரைகளும் பிடிக்கப்பட்டன. போயர் கொடிக
டன. ஆனால் பிரிட்டிஷார் பக்கம் ஆபீஸ
சேதமாயினர்.

## லேடிஸ்மித் பட்டணம் முற்றுகை.

போயர்கள் இப்படியாக லேடிஸ்மித்தை யடுத்தாப்போல பலவிடங்களில் ஏராளமாக சேர்ந்துவிட்டு அடிக்கடி போர்செய்துகொண்டேயிருந்ததோடு, இவர்களை நடத்திய தளபதியான ஜெனரல் ஜோபர்ட் வெகு யூகையாக லேடிஸ்மித்தைச் சுற்றிவளைத்து முற்றுகைசெய்ய வேலைசெய்வதை யறிந்த ஜெனரல் வொயிட் உடனே அப்படி செய்வதை கலைக்கக்கருதி 29-ந் தேதியன்று சாயந்தரம் கோவேறு கழுதைகள் பூட்டிய ஒரு மலைபத்திரியையும் மற்றுமநேக கழுதைகள்மீது குண்டு மருந்துகளையும் ஐரிஷ் பியூஸ்லர்ஸ், கிளவ்செஸ்டர் என்னுமிரு பட்டாளங்களையும் சேர்த்து வடமேற்குப் பக்கமாய் கர்னல் கார்லிடன்னின் நடத்துதலின்கீழ் அனுப்பினர். இவைகள் மிக ஒழுங்காக மறுநாள் விடியற்காலை நிக்கல்ஸன்நெக் என்னும் குன்று வந்து சேர, அங்குசில போயர்கள் வாயுவேகமாகத் தங்கள் குதிரைகளைவிட்டுக்கொண்டுபோய் பிரிட்டிஷாரின் கழுதையின் பக்கமாக ஓடி அதை விரட்டி ஓட்டவும், உடனே கழுதைகள் மிரண்டு இழுப்பும்பறிப்புமாக அதனால் பீரங்கிவண்டியிலிருந்தவர்கள் எல்லாம் உருண்டு புரண்டு விழுந்துவிடும்படியாக திக்காலுக்கோர்பக்கம் ஓட்டமெடுத்தன. இதற்குள் பொழுதும்விடிய பிரிட்டிஷ்படைகள் பீரங்கிகள் மற்றும் குண்டுமருந்து வகைகள் யாதுமின்றி அகதிகளாகிவிட்டு முழிக்கவும், எதிரில் கல்சந்துபொந்துகளில் பதுங்கிக்கொண்டிருந்தபோயர்கள் வெகுசுலபமா யிவர்களை எதிர்த்தனர். அப்போதும் இவர்கள் கையிலிருந்த கொஞ்சநஞ்சம் துப்பாக்கி குண்டுகளைக்கொண்டு பிரயோகஞ்செய்துகொண் டிருக்கும்போதே நிமிஷத்திற்குள் நாலாபக்கத்திலும் ஈச்செல்லைப்போல போயர்கள்வந்து வளைந்துவிட்டனர். பிரி
டிஷ் வீரர்களும் தங்களால் கூடியவரை நாலாப்பக்கத்திலுமிருக்கிற
களுடன் கடும் போர்புரிந்துகொண்டிருந்தும் அச்சமயத்தில்
வன் சரணடைந்துவிடுவதற்கு அறிகுறியான விதமாய்
ஒரு குட்டையைக்கட்டித் தூக்கிக்காண்பித்துவி
கியந்த கர்னல் கார்லிடன்னின் உத்தரவா
ப்பாக்கிகள் சுடுவதை நிறுத்திவிட்ட

னர். நிறுத்தவும் போயர்கள் கிட்டே அணுகி சுமார் 850 பேரை சிறையாக்கிக்கொண்டனர். உயிருக்குமுடலுக்குமாய் போர்புரிந்த இச்சண்டையில் சுமார் 250-பேர் கொல்லப்பட்டும் காயமடைந்தும்போயினர்.

இச்சம்பவம் இங்கு இம்மாதிரி நிகழ்ந்துகொண்டிருக்கும் சமயத்திலேயே லேடிஸ்மித்திற்கு வடக்கேயும் கிழக்கேயும் ஒரு போர் நடந்தது. அங்கு ஸ்தானங்கள் அமைத்துக்கொண்டிருந்த போயர்கள் விடியற்காலை தங்களது "லாங்டாம்" என்னும் பீரங்கிகளினின்று குண்டு பிரயோகஞ் செய்யத்தொடங்க பிரிட்டிஷ் பத்திரிக்காரர் பதில் பீரங்கிவிட்டனர். இதற்குள் பிரிட்டிஷாரின் ரைபில் படையின் 2-பட்டாளங்கள் முன்னுக்கனுப்பப்பட்டும் கடுஞ்சேதமடைந்ததில் பின்னுக் கழைக்கப்பட்டுக்கொண்டன. இப்படி பிரிட்டிஷாருக்குக் கொஞ்ச மனுனுகூலமாகியிருந்ததில் போயர்கள் திரள் திரளாக மேலும் மேலும் வந்து லேடிஸ்மித்தை அணுகிக்கொண்டேயிருந்தனர். நவம்பர் மாதம் முதல் தேதி 2-ந் தேதிகளிலெல்லாம் அடிக்கடி போர்புரிந்துகொண்டேயிருந்தும், போயர்கள் தந்தி கம்பிகளையெல்லாம் அறுத்துவிட்டதுடன் லேடிஸ்மித்தைச் சுற்றியுள்ள குன்றுகளிலெல்லாம் பீரங்கிகளை நன்றாய் ஸ்தாபித்துக்கொண்டேயிருக்கத் துவங்கிவிட்டனர். இப்படியாக லேடிஸ்மித் பட்டணம் 12-ஆயிரம் பிரிட்டிஷ் வீரர்களுடனும், அவர்களது தளபதியான ஜெனரல் ஸர் ஜார்ஜ் வொயிட்டுடனும் அடைப்பட்டுவிட்டது.

## கேப்காலனிபக்கம் யுத்த ஆரவாரம்.

நெட்டாலின் படையெழுச்சிக்குப் பிறகு 3-வாரங்களானதும் கேப்காலனியின்மீதும் போயர்கள் படையெழுச்சி செய்யத்தொட[illegible]
னர். நவம்பர்மாதம் முதல்தேதியன்று நார்வால்ஸ்பான்[illegible]
யைத் தாக்கி கேப்காலனியி னுட்சென்று 15-ந் தேதி[illegible]
குள் நுழைந்து அங்குள்ள பர்கர்கள் யாவ[illegible]
ராதிகள் பிரிடிஷாரேயன்றி வேறுயாரு[illegible]
போர்புரிய எழும்புங்கள்" என விள[illegible]

சமயத்தில் யாதொரு பிரிட்டிஷ் சைனியங்களில்லாதிருக்கவும் உட னுக்குடனே பல பட்டணங்களை அங்கு கைப்பற்றிவிட்டனர். நவம் பர்மாதம் 20-ந்தேதியன்று மேஜர் ஜெனரல் ஸர்வில்லியம் காட்டாகர் K. C. B. ஆயிரம் பேரோடு நாவ்பூர்ட் வந்து சேர்ந்ததோடு மேஜர் ஜெனரல் பிரென்ச் மூவாயிரம் பேரோடு டி ஆர் ஜங்க்ஷனுக்கும் நாவ் பூர்ட்டிற்கும் மத்தியி லிருந்துகொண்டிருந்தனர். இதற்குள் போயர்க ளும் தந்திகம்பிகளை அறுத்து ரெயில்பாதைகளைத்தகர்த்து 22-ந் தே தியன்று பார்க்லி ஈஸ்ட் பட்டணத்துள் வருவதற்குள் அங்கிருந்த டச்சு குடியானவர்களில் 70 பேர்வரை சேர்ந்து 400 மார்டினி என்றி துப்பாக்கிகளும் 4000 தோட்டாக்கள் மருந்து வகைகளுடனிருந்த மருந்துகிடங்கைக் கைப்பற்றிவிட்டனர். 25-ந் தேதியன்று பிரிட்டி ஷாரின் ஓர் பகுதி, உடைக்கப்பட்டுவிட்ட ரெயில்பாதைகளை செவ்வை ப்படுத்த அனுப்பப்பட்டது. அடுத்தநாள் போயர்களும் ஆயிரம்பேர்வ ரை வந்து அங்கிருந்த டச்சு குடிகளிலு மநேகரைச் சேர்த்துக்கொ ண்டு தேசத்தினுள் பரவவும், 29-ந் தேதியன்று ஜெனரல் காட்டாகர் மால்டினேமீது ஒரு பகுதியை யனுப்பினர். அங்கிருந்து டிசம்பர்மா தம் 9-ந் தேதியன்று ஸ்டார்ம்பர்க் குன்றில் போயர்கள் ஸ்தானங் கள் செய்துகொண்டிருக்கக்கண்டு அவர்களைத் தாக்கும்படி அன்றிரவு 11-மணிக்கு 4-ஆயிரம் பேருடன் புறப்பட்டனர். பாதையோ மகா இடுமுடுக்கானதும் குன்றுகளிலிருந்து சரிந்து விழுந்துகிடந்த கற் பாறைகளாகவுமிருக்க, இதில் மிகுந்த கஷ்டத்தோடு நடந்துகொண்டு போகுஞ் சமயத்தில் இவரை நடத்திச்சென்ற வழிகாட்டிகள் போய ர்களுக்கு நல்ல வசதியாயிருக்கும்படியான நடுத்திட்டில் கொண்டு போய் விட்டுவிடவும், இதற்குள் பொழுதும் விடிந்து காலை 4-மணி யாக அந்நேரம் போயர்கள் இவர்கள்மீது சரமாரி குண்டுகளைப் பொ ழிந்தனர். இதனால் பிரிட்டிஷ்சேனைக ளதிக பிரமையாகிவிட்டு நாலாப் ...க்கமும் சிதறி போடிப்பார்க்க அப்பக்கங்களிலெல்லாம் போயர்கள் ...ண்ணமாகவே யிருந்தனர். இப்படி மூன்றுமணிநேரம் கொடிய ...பட்டு கடைசியாக பின்னடைந்துவிட்டனர். இதில் ...ர் கொல்லப்பட்டு 67 பேர் காயமடைந்து ...னதாகக் கணக்கிடப்பட்டது. பிறகு 13-ந் ... ஒரு பலமான போயர்சேனை பிரங்கி

சகிதமாய் வந்துகொண்டிருக்க பிரிட்டிஷ் குதிரைப்படையும் பீரங்கி படையின் ஒரு பத்திரியும் அவர்களை எதிர்த்து கடுஞ்சேதத்துடன் பின்னடையச் செய்தனர். மறுபடி 18-ந்தேதியும் தாக்கியதில் பின்னடையச் செய்யப்பட்டனர். டிசம்பர்மாதம் 30-ந் தேதியன்று பிரிட்டிஷ் காப்டன் மாண்ட் மாரன்ஸி என்பவர் 130 குதிரை வீரருடன் ஜெனரல் காட்டாகரின் ஹெட்குவார்டர்ஸிலிருந்து வடகிழக்காய் 30 மைல் தூரத்தில் வேவுபார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் போயர்கள் 600 பேராய் சேர்ந்து 2 பீரங்கிகளுடன் வந்து எதிர்க்கவும் இதற்குள் பிரிட்டிஷாருக்கும் 100 பேர் உதவிக்குவர மிகுந்த போர்புரிந்தும் போயர்க ளதிகமாயிருந்ததால் பின்னடைய நேர்ந்துவிட்டது. இதில் லெப்டினெண்ட் மில்பர்ட் டர்னரும் 27 வீரரும் ஓர் பள்ளத்தில் ஒளிந்துகொண்டு அன்றிரவெல்லாம் அங்கேயே யிருந்ததில் மறுநாள் காலை நூற்றுப்பத்துபேர் 4 பீரங்கிகளுடன் உதவிபோய் எதிரிகளை விரட்டி யடித்து ஒளித்திருந்தவர்களை சுகமே கூட்டிவந்துவிட்டனர்.

இதற்குள் ஜெனரல் பிரென்சும் சும்மாயிராது டிசம்பர்மீ 31உ பிற்பகல் 5 ஸ்குவாடர்ன்களையும் 2-வது பெர்க்ஷைரின் அரை பட்டாளத்தையும், 8 பீரங்கிகளையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு மறுநாள் காலை மேற்கேயிருந்து கோலெஸ்பர்க்கை எதிர்நோக்கிய குன்றை வந்தடைந்தனர். எதிரிகள் எதிர் குன்றில் பீரங்கிகளுடன் ஸ்தாபனங்கள் செய்துகொண் டிருக்கக்கண்டு குண்டுபிரயோகஞ் செய்ய அவர்களும் எதிர்குண்டு விட்டனர். ஆயினும் எதிரிகள் கடைசியாக மிகுந்த சேதத்துடன் தங்களது ஆட்ச்கிஸ் பீரங்கி (Hotchkiss) ஒன்றையும் விட்டுவிட்டோடிவிட பிரிட்டிஷார் அந்த இடங்களையெல்லாம் கைப்பற்றினர். எனினும் மறுநாள் ஜனவரி மாதம் 2-ந் தேதி போயர்களுக்கு பலமான துணைப்படை வந்து சேர்ந்துவிட்டதில் த[illegible] களது பழைய ஸ்தானங்களை மறுபடி கைப்பற்றிக்கொண்ட[illegible] இரண்டுநாள் சண்டையிலும் பிரிட்டிஷார்பக்ச[illegible] பட்டு சிலர் காயமடைந்தனர். மறுநாள் பிர[illegible] படை வந்து சேர்ந்ததில், மிகுந்த கடுமை[illegible] ளுடைய 2-பீரங்கிகளை உபயோகம[illegible]

பேரை சிறையாகப் பிடித்தனர். இதில் போயர்பக்கம் 50-பேர் சேத
முமாயினர். பிரிட்டிஷாருக்கு வெகு சொற்ப சேதமாயினும் 6-ந்
தேதியன்று ஒரு பெரிய விபத்து நேர்ந்துவிட்டது. அதாவது, கோ
லெஸ்பர்க்கைச் சேர்ந்த ஒரு குன்றைக் கைப்பற்ற கர்னல் வாட்சன்
விரும்பியவண்ணமே ஜெனரல் பிரென்ச் போகச்சொல்ல, கர்னல் வா
ட்சன் ஸப்பாக் ரெஜிமென்டின் நாலு கம்பனிகளை நள்ளிரவில் அழை
த்துக்கொண்டு சந்தடி காட்டாதபடி தங்கள் கால்களில் மெதுவான
கான்வெஸ் ஜோடுகளுடனும் மற்றும் சிலர் வெறும் மேஜோடுகளுட
னும் ஏறினர். இப்படியாக குன்றுச்சியில் வந்ததும் அங்கு கல்சந்து
களில் ஒளிந்து இவர்களது வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்த
போயர் திடீரென சுடத்தொடங்கியதில் முதலடியிலேயே கர்னல்வாட்
ஸன், அட்ஜுடென்ட், மற்றுமிரு ஆபீஸர் அநேக வீரர்கள் உடனே
கொல்லப்பட்டுப்போயினர். இதைக்கண்டதும் காப்டென் பிரெட் ந
டத்திக்கொண்டு வந்த ஒரு கம்பனியை முன்னுக்கு போயர்கள் மீது
தாக்க உத்தர வளித்ததும், போயர்களும், பின்னடையும்படியாக ஒ
ருதந்திரமாய் "ரிடைர் (Retire) எனக்கூவ, இது பிரிட்டிஷ் ஆபீஸர்
கொடுத்த உத்தரவென்று இவர்களெண்ணி 2 கம்பனிகள் பின்னடை
யவும், உடனே போயர்கள் முன்னேறி காப்டென் பிரெட்டையும்,
மற்றும் 2 ஆபீஸர்களையும் 60-வீரரையும் காயப்படுத்தி சிறைகளா
க்கினர். இதில் 4 ஆபீஸர்களும் 26 வீரரும் கொல்லப்பட்டனர். இப்
படியாக போயர் பதிவிருந்து சதிவேலை புரிந்து விட்டனர்.

இதன்பேரில் இவர்களைத் தகுந்தபடி சிக்ஷிக்க ஜெனரல் பிரென்ச்
நாலாபக்கமும் சேனைகளை அணிவகுத்து போயர்களை அப்படியே அ
முக்கிவிடப்பிரயாசித்து எதிர்த்து கடும்போர் புரிந்ததில் போயர்களி
ல் 21 பேர் கொல்லப்பட்டும் அநேகர் காயமடைந்தும்போக இவர்களை
விட்டுவிட்டோட்டமெடுத்தனர். இதில் பிரிட்டிஷாருக்கு 6 பேர் கொ
...ப்பட்டு 5 பேர் காயமடைந்தனர். ஜெனரல் காட்டாகார் ஸ்டார்ம்
...கிழக்கே 30 மைலில் டுஸ்டெர்ஸ்ரூமில் எட்குவா
...ண்டிருந்தனர். இதையடுத்தாப்போலுள்ள மா
...கேப்போலீஸாரை ஜனவரி மாதம் 3-ந் தேதி
...ாக வந்து தாக்கினதோடு ஒரு பெரும்

கூட்டத்தார் பீரங்கிகளுடன் அடுத்த குன்றுகளிலுமிருந்தனர். அப்போது பிரிட்டிஷாருக்கும் 60 பேர் துணைவர இவர்களும் அவர்களும் மிகுந்த மும்முரமாக தாக்கி நிற்கையில் இதற்குள் ஜெனரல் காட்டாகர் ராயல் ஸ்காட்ஸின் அரை பட்டாளம், குதிரை யேறிய காலாட்படையின் நூறு பேர், ஒரு பீல்ட் பத்திரியுடன் வந்து தாக்கி போயரை பின்னடையச் செய்தனர்.

இவர்களிப்படி போர்புரிந்து கொண்டிருக்கும் சமயத்தில் பெப்ரவரி மாதத்தில் ஜெனரல் பிரென்சுக்கும் ஜெனரல் காட்டகருக்கும் உதவியாக 6—வது டிவிஷன் போர்ஸுகளுடன் ஜெனரல் கெல்லி கென்னியும் வந்து சேர்ந்தனர். இதைக்கண்டு போயர்கள் திக்பிரமை கொண்டு விடினும் பெப்ரவரிமாதம் 8—ந் தேதி ஜெனரல் காட்டாகரைத்தாக்கினர். இதில் போயர்மீது பீரங்கிகுண்டு பிரயோகம் சரமாரியாய் விடப்பட்டதில் பின்னடைந்து டார்டிரெக்ட் மலைச்சார்பாய் ஓட்டமெடுத்துவிட்டனர். 17—ந் தேதியன்று ஜெனரல் பிரபான்ட் ஜெனரல் காட்டாகாருடன் கலந்து போர்புரிந்து டார்டி ரெக்டிலுமிருந்த எதிரிகளை விரட்டிவிட்டனர். இங்கு நேர்ந்த கொடிய சண்டையில் பிரிட்டிஷாரில் 8 பேர் கொல்லப்பட்டு 8 பேர் காயமடைந்தனர்.

## கிம்பர்லி பட்டணம் முற்றுகை.

ஆரஞ்சி பிரீஸ்டேட் எல்லையையடுத்தாப்போல் கேப்டவுனிலிருந்து சுமார் 650—மைலிலுள்ள கிம்பர்லி பட்டணத்தின்மீது போயர்களின் கடைசி (யுத்த)விளம்பரம் கொடுக்கப்பட்ட சில தினத்திற்கெல்லாம்ஆயிரம்பேர்கள் ஆயுததாரிகளாய் எதிர்நோக்கி நின்றனர். இந்தபட்டணத்தில் 1869-ம் வருஷத்தில் வைர சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு 1871—ம் வருஷத்தில் இது பிரிட்டிஷார் ஆட்சிக்குட்பட்டது. இந்தப் பட்டணத்தில்தான் மிஸ்டர் செஸில் ரோடஸிற்கு மிகுதியான செல்வமிருக்கிறதாகையால்போயர்களிதைத்தாக்கமுப்பினர். உடனே கலோனியல் கவர்ணமென்டாருக்கு சங்கதி தெரிவிக்கப்பட்டு,அவர்களும் சகல முஸ்திப்புகள் செய்ததோடு அப்பட்டணத்தைத்தாங்கி நிற்க லெப்டினென்ட் கர்னல் கெகிவிக் [illegible]மகம் பெற்றனர்.

இவர் பட்டணத்தை நாலு பிரிவாகப்பிரித்து ரஸ்தாக்களையெல்லாம் அடைத்து ஜனங்களை எச்சரித்து காபந்து செய்துகொண்டிருக்கும் சமயத்திலேயே எதிரிகளும் நாலா பக்கமும் சூழ்ந்துகொண்டேயிருக்கத் துவங்கினர். இந்த கிம்பர்லி பட்டணத்திற்கு வடக்கே 145-மைலிலுள்ள பிரிட்டிஷ் பெச்சுனு லாண்டின் தலைநகரமாகிய மைபர்க்கின் மீது போயர்கள் தாக்க அங்கு சிறு வாலண்டியர் படைகளையும், போலீஸ் படையையும் வைத்துக்கொண்டிருந்த மேஜர் ஸ்காட் எதிர்த்துநிற்க தமது படையை அழைக்க அவர்களும் பிதுந்த கலக்கமடைந்தவர்களாய்விடவே மேஜர் ஸ்காட் கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிறந்தனர். உடனே போயர்கள் பட்டணத்துள்ளே புகுந்து திரான்ஸ்வால் கொடியை நாட்டினர். இதின்கெதி இப்படியானுல் அக்டோபர் மாதம் கடைசிக்குள் கிம்பர்லி பட்டணம் மிகுந்த அருகாமையாய் முற்றுகை செய்யப்பட்டுவிட்டது.

இப்பட்டணத்தை கர்னல் கெகிவிக், ராயல் நாத் லான்காஷைர் ரெஜிமென்டின் 4-கம்பனி, 2-மெஷின் பீரங்கி, 6-மலை பீரங்கிகளுடன் ஒரு பத்திரி படை, 120–போலீஸ் படையார், ராயல் என்ஜினியர்களின் ஒரு பகுதி, மெடிக்கல் ஆபீஸர்களின் கூட்டத்தாரிவர்களுடன் தாங்கிநிற்க, சூலு சண்டையில் வீரனுன மேஜர் ஸ்காட் V. C. 2000–பொறுக்கியெடுத்த வேலையாட்களைக் கொண்டு சுரங்கங்களையும் விலையுயர்ந்த யந்திரங்களையும் காவல் செய்தனர். அக்டோபர்மீ 24-ந் தேதியன்று மாக்பார்லேய்ன் குன்றில் 700 போயர்கள்வரை இருக்கக்கண்டு 270 வாலண்டியர்கள் மேஜர் ஸ்காட்டார்னரால் நடத்தப்பட அதோடு அவர்களுக்கு துணைப்படையாக 150 லான்காஷைர் படையார் 2-மலை பீரங்கி 2 மாக்ஸிம் பீரங்கிகளுடன் 70 குதிரையேறிய வீரர்களும் அனுப்பப்பட்டனர். இவர்களும் போயர்களது 2 பீரங்கிகளை உபயோகமற்றுப்போகச்செய்து, எதிரிகளை சனியனுல் குத்தி வீழ்த்தி கடுஞ்சேதத்துடன் பின்னடையச் செய்தனர். இதில் அவர்களது ஒரு தளபதியான கமான்டென்ட் * போதாவும் குண்டடியில் கொல்லப்பட்டார். பிரிட்டிஷார் பக்கம் 3 பேர் கொல்லப்பட்டும் 21-பேர்கள் காயமடைந்தும்போயினர். இப்படியாக இவர்கள்

---

* போதா என்கிற நாமம் போயர்களின் அநேகருக்கு இடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

தினநிதமும் வெளிக்காவலுக்குச்சென்று சிறுசிறு சண்டை செய்வதும், எதிரிகளைத்துரத்துவதுமாக இருக்க, போயர்களும் ஒவ்வொரு நாளும் சட்டிபீரங்கிப் பிரயோகஞ்செய்வதே வேலையாயிருந்தனர். இதற்குள் கிம்பர்லியிலடைப்பட்டிருப்பவர்களுக்கு உணவு வகைகளும் முடிந்துவிடவே, வேறு உணவிற்கு வழியில்லாது தானிய வகைகளையும் குதிரை மாமிஸத்தையும் தின்று கஷ்டத்தை யனுபவித்துக்கொண்டிருக்கலாயிற்று.

## மாபிகிங் பட்டணம் முற்றுகை.

கிம்பர்லி பட்டணத்திற்கு வடக்கே 230 - மைலிலுள்ளதும் திரான்ஸ்வால் எல்லைக்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ளதும் பிரிட்டிஷ் பெச்சுனலான்டின் முக்கிய பட்டணமுமாகிய மாபிகிங்கைத் தாக்க போயர் ஜெனரலான கிராஞ்சி அக்டோபர்மாதம் 11-ந் தேதி யன்றே எல்லையைக்கடந்து ஒரு ரெயில்வேயைப் பிடித்துக்கொண்டனர். இந்த மாபிகிங் பட்டணமானது சிறிதானாலும் நல்ல செழிப்பான இடம். இதிலநேக ஆலயங்களும் ஒட்டேல்களும், சிற்பவேலை தீர்ந்த ஓர் அழகிய கோவிலுமிருக்கிறது. அங்கத்திய விசேஷ கட்டடங்களிலொன்ருக கருதப்பட்டிருக்கிற கிளப்அவுஸ் இப்போது ஆஸ்பத்திரியாகவிருக்கிறது. அங்கிருக்கும்படியான ஆஸ்பத்திரியை பார்த்து வருபவர் லேடி சேரா வில்ஸன் அம்மாள். இந்தம்மாள் குண்டு பிரயோகங்கள் நடந்துகொண் டிருக்கும்போதே இங்குமங்குமாய் ஓடி காயமடைந்தவர்கள் முதலானவர்களை சிகிச்சை செய்வதில் அதிக ஊக்கமாக விருந்தனள். இப்பட்டணம் மாஷோனலாண்டுக்குப் போகிற வழியிலும் அதோடு திரான்ஸ்வால், டச்சுனலான்ட் இந்நாடுகளுக்கு மத்தியிலிருப்பதால் சகல இறக்குமதிகளும் இங்கு வருவதுடன் அயலிலிருந்து தண்ணீரும் ஏராளமாய் வந்துகொண்டிருப்பதால் மிகுந்த செழிப்பாகவிருக்கிறது. இங்கு விநோத விளையாட்டுகளுக்காகவும், குதிரைப்பந்தயம் முதலியவைகளுக்காகவும் மைதானங்களுமுண்டு. இந்த இடத்திலிருந்துதான் முந்தியும் டாக்டர் ஜேம்ஸன் என்பவர் கலகமெழுப்பினது. ஆகவே இந்த அழகிய செழிப்பான பட்டணத்தை எதிரிகளுக்குக் கொடுக்காவண்ணம்

காப்பாற்றும்படி காரிஸனாக வைக்கப்பட்டிருந்த சேனைகளுக்கு கமான்டாக நியமிக்கப்பட்டிருந்தவர் மிகுந்த யூகைசாலியும் தந்திரியுமாகிய லெப்டினென்ட் கர்னல் ராபர்ட் ஸ்டீவன்ஸன் ஸ்மித் பேடன் பவல் என்னும் இந்ததீரவீரரே. இவர் இந்தியா ஆப்கானிஸ்தானத்திலும் இதற்குமுந்தியும் தென்னாபிரிக்காவிலும் சண்டைகளில் உழைத்தவர். இவர் வீரராயிருப்பதுமல்லாது கதையெழுதுவது, படகு விடுவது, வேட்டையாடுவது, போலோ பந்தாட்டமாடுவது, சித்திர மெழுதுவது, நாடகமாடுவது இதிலெல்லாம் மிகுந்த சமர்த்தர். தமாஷான கோமாளித்தனம் செய்வதிலோ சொல்லத்தரமன்று. இப்படியான தமாஷ்கார ரானதால் இவர் சிநேகிதரு மிவரை பேடன்பவல்



ஜெனரல் பேடன்பவல்.

என்பதற்குப் பதிலாக "பேதிங் டவல்" (Bathing Towel) என்றழைக்கிறதுண்டு. இப்பேர்ப்பட்ட தீர வீர சமர்த்தரின்கீழ் 500 பலமான குதிரைவீரர், 200 குதிரையேறிய கேப் போலீஸ்படை வீரர், பிரிட்டிஷைச் சேர்ந்த ஆப்பிரிக்கன் குதிரையேறிய படைவீரர், 60 வாலின்டியர் படைவீரர், 2 மலைப் பீரங்கிகளும், மெஷீன் பீரங்கிகளுடனு மிருந்தனர். அதோடு நூற்றுக் கணக்கான சிவிலியன்ஸ் என்னும் பட்டணத்து மனிதரும் துணையாக ஆயுதங்களைத் தூக்கி நின்றனர். அக்டோபர் மாதம் 14-ந் தேதியன்று ஓர் கொடிய போர் நடந்தது. அப்போது காலை 5½ மணிக்கு லார்ட் சார்லஸ் பெண்டிக் பட்டணத்திற்கு வடக்கே சிறு படையுடன் சென்று போயர்களை பின்னடையச் செய்தனர். பேடன்பவலுக்கும் ஜெனரல் கிரான்ஜிக்கு மிடைக்கிடையே கடித வரத்துப்போக்கு நடந்துகொண்டிருந்ததில் ஸ்திரீ பிள்ளைகளிருக்கும் பட்டணத்தின்மீது குண்டு பிரயோகஞ் செய்யாதிருக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆயினும் என்ன! போயர்கள் விட்டார்களில்லை. அக்டோபர் மாதம் 24-ந் தேதியன்று குண்டுபிரயோக மதிகமாகச் செய்யத் தொடங்கி அன்றையதினமும் மறுநாளும் 300 குண்டுகள் வரையில் பட்டணத்தின்மீது சுட்டனர். என்றாலும் சேதமதிகமாயில்லை; போ

யர்கள் பட்டணத்தை வெகுமும்முரமாய்த்தாக்கி கிட்டி நெருங்கியும் பிரிட்டிஷார் சனியனுல் குத்தி அதிக சேதப்படுத்தியதில் பின்னடைந்துவிட்டனர். இப்படியாக போயர் கமாண்டர்களாகிய ஜெனரல் கிரான்ஜி, ஜெனரல் ஸினிமென், கமான்டென்ட் ரோக்ஸ், கமான்டென்ட் டிரேக் இவர்களெல்லாம் தினநிதமும் போயர்களை உற்சாகப்படுத்தி, தாக்க உசுப்பேற்றிக் கிட்டேநெருங்கியும் தகுந்தபடி எதிர் தாக்கப்பட்டு புறங்காட்டி ஓடிவர நேர்ந்துவிட்டது. பிரிட்டிஷாரும் சோர்புறுவண்ணம் பேடன்பவல் அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டே வந்தனர். டிசம்பர் மாதம் 4-ந் தேதியன்று பட்டணத்துள் போயர்கள் சுட்ட வெடிகுண்டு வந்து விழுந்து வெடிக்காம லப்படியேயிருக்க அதையெடுத்துத் திறந்து பார்க்க அதில் ஒரு கடிதம் பின்வருமாறு எழுதி வைக்கப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது,

"பிரியமுள்ள பவலே; இரும்பிற்குள் சமாசாரமனுப்பியதற்காக மன்னிக்கவும். மற்றபடி சமாசாரமனுப்ப வேறு வழியில்லே. தயவுசெய்து அம்மாளுக்கும், தாயாருக்கும் நாங்கள் எல்லோரும் சுகமாக விருக்கிறதாகச்சொல்லும். விஸ்கி சாராயத்தையெல்லாம் குடித்து விடாதேயுங்கள். நாங்கள் வரும்போது எங்களுக்காக கொஞ்சம் வையுங்கள்." என்பதே.

இதைக்கண்டு கர்னல் பேடன்பவல் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். அதோடு ஞாயிற்றுக்கிழமை ஒரு தினமே தவிர மற்ற வாரத்தின் நாட்களிலெல்லாம் போயர்கள் ஓயாது குண்டுபிரயோகஞ் செய்துகொண்டேயிருந்தனர். இதுகொண்டு,

**கர்னல் பேடன்பவல் போயர்களுக்கு எழுதிய நிருபம்.**

டிசம்பர்மீ 10-ந் தேதி.

மாபிகிங்கை சுற்றி ஆயுததாரிகளாக விருக்கும் பர்கர்களே,—நீங்கள், உங்கள் கவர்ண்மென்டார், ஆபீஸர் முதலானவர்கள் செய்யும் செய்கைகளை ஒன்றும் அறியாதவர்களாயும் தென் ஆபிரிக்காவின் மற்ற பாகங்களில் நடக்கும் காரியங்களைப் பத்திரிகைகள் தெரிவிக்காமலு மிருப்பதால் உங்களுக்கு இந்த நிருபம் எழுதத்தொடங்கினேன். மாகூமிமை தங்கிய இராணியாரின் துருப்புகளை நடத்துகிறவர்களு ளொருவனுக விருக்கிற நான் கிரேட் பிரிட்டனுக்கு விரோதமாக ஆயுததாரிகளாய் வந்து நிற்பதின் பிரதிபலனுக நீங்கள் அனுபவிக்கப்போகிறதை முன்னமேயே அறிவிக்கக் கடனுளியாக விருக்கிறேன். இந்த சண்டைக்கு காரணம் உங்களுடைய போர்சுகள் யாதொரு நீதியான முகாந்தரமின்றி பிரிட்டிஷ் தேசத்தின்மீது படையெழுச்சி செய்ததே என்பது உங்களுக்கே தெரியும். இதுபோக உங்களுடைய போர்சுகளெல்லாங்கூ

டி பிரிட்டிஷ் போர்சுகளின் முன்னணியில் இருக்கும் காவல்படையைத்தான் எதிர்த்துக்கொண்டிருக்கிறதென்பதை உங்கள் தலைவர்களுங்களுக் கறிவிக்க வில்லை. பிரிட்டிஷாருக்கோ தினநிதமும் இங்கிலாந்து, கானடா, இந்தியா, ஆஸ்திரேலியா இந்த இடங்களிலிருந்தெல்லாம் ஆயிரமாயிரமாய் சேனைவந்து சேர்ந்துகொண்டேயிருக்கிறதுமல்லாமல் தேசத்திற்குள்ளேயும் ஏறத் துவங்கப்போகின்றனர். எனவே சீக்கிரத்துள் இந்த குடியரசுநாடு இங்கிலீஷார் கையில் விழுந்துவிடும்; அப்போது நீங்கள் எவ்வளவான உயிர்ச்சேதங்கள்செய்து மல்லாடினும் அது தடைசெய்யப்போகிறதில்லை. ஆகையால் நீங்கள் "பிரிட்டிஷாரின் முன்னேறுதலைத்தடுக்க அபரிமிதமான சேதம் நேரிடுவதால் நமக்கென்ன பயன்? அல்லது நமது எல்லைக்கு அந்தண்டையிருக்கும்படியான ஒரு பட்டணத்தை கஷ்டப்பட்டுப் பிடித்தும் அது நமக்குச் செறிக்குமா?" என்கிற கேள்விகளைக்கேட்டு யோசித்துப் பாருங்கள். நீங்கள் சும்மா குந்தி பார்த்துக் கொண்டிருப்பதினல் மாபிகிங் உங்கள் கையில் விழுந்துவிடுமென்று நினைக்காதேயுங்கள். அது எத்தனைமாதங்களாயினும் முடியாது. உங்களுடைய பீரங்கி பிரயோகங்கள் எங்களில் வெகு சொற்பசேதத்தை விளைவித்திருக்கிறதானலும் நாங்கள் இப்போது செல்வத்தாலும் துருப்புகளாலும் பலமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறோம். நீங்களிங்கேயும் மற்றவர்கள் பலவிடங்களிலும் ஆயுததாரிகளாயிருப்பதால் பிரிட்டிஷாரின் முன்னேறுதல் தடைப்பட்டுவிடும் என கனவிலும் எண்ணுதீர்கள். உங்களுடைய தலைவர்களும் பத்திரிகைகளும் ஏதோ சில அன்னியதேசங்கள் இங்கிலாந்துக்கு விரோதமாக உங்களுடன் சேர்ந்துகொள்ளப்போவதாய் உங்களை நம்பச்செய்கின்றனர். அப்படியாக நீங்கள் கருதி எதிர்நோக்கியிருப்பது சுத்த பிசகு. உங்களுடைய குடியரசுநாடே யுத்தத்திற்குவர கொக்கரித்துக்கூவி தப்பிதத்தைத் தலைமீது போட்டுக் கொண்டதால் மற்றவர்களை உங்களுக்கு உதவிக்குக் கூப்பிட ஏலாது. தற்சமயம் ஜெர்மன் சக்கிரவர்த்தி இங்கிலாந்திலிருந்துகொண்டு எங்களுக்காக மெத்த அனுதாபப்படுகிறார். வேறு எந்த பவராவது இந்த சண்டையில் பிரவேசிக்குமானல் அமெரிக்கா கவர்ண்மெண்டார் தாங்கள் இங்கிலாந்துடன் கலந்துகொள்வதாக எச்சரித்திருக்கின்றனர். பிரான்சிற்கு பொன் வயல்களில் அதிகமான உரிமையிருப்பதால் அது இங்கிலாந்தையே சார்ந்துள்ளது. இத்தலியின் முழு ஐக்கியமும் எங்கள்மீதுதான். ருஷியா இதில் கலக்க யாதொரு முகாந்தரமுமில்லை. இந்த யுத்தமோ ஒரு கவர்ண்மெண்டுக்கு விரோதமாக ஒரு கவர்ண்மெண்டு எழும்பியிருக்கிறதே தவிர ஜனத்துக்கு விரோதமாக ஜனம் எழும்பியதல்ல. நிற்க, எனது துருப்புகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற உத்தரவெல்லாம்கூடி இங்கு பேசாமல் மௌனமாக குந்தியிருந்து குறிக்கப்பட்டநேரம் வந்ததும் எழும்பி உங்களோடு போர்புரிந்து நீங்கள் சரணடையும்வரையில் கொல்லு கொல்லு என கொல்லும்படியாகவே. ஆனல் நீங்க


ளோ உங்களுடைய குடும்பங்களையும், வயல்களையும் அவைகளைக்காக்க வழிவகை பார்க்கவேண்டியவர்களாக விருக்கிறீர்கள். உங்கள் தலைவர்களானவர்கள் வயல்களை அழிக்கவும் பெண்டு பிள்ளைகள்மீது சுடவும் எது காரணங்களெல்லாம் செய்திருக்கிறார்கள். அவைகளுக்காக எங்கள் மனிதர் தகுந்த சிக்ஷை கொடுக்க விருக்கின்றனர். அதோடு காப்பிரிகளின் தேசத்தின் படையெழுச்சி செய்து கொள்ளையடித்ததில் அவர்களும் பர்கர்களாகிய உங்களை எதிர்த்து கொல்லச் செய்துவிட்டனர். இது விஷயமாய் வெள்ளை மனிதராகிய நாம் ஒருவருக்கொருவர் சிநேக விஷயமாய் ஜெனரல் கிரான்ஜிக்கும் நவம்பர் மாதம் 14-ந் தேதியன்று இப்படி சம்பவிக்குமென தெரிவித்திருந்தேன். நேற்றையதினம் இன்னு மதிக காப்பிரிகள் எழும்பிவிட்டதாய் கேள்விப்பட்டேன். ஜெனரல் ஸ்னைமென்னையும் இது விஷயமாய் எச்சரித்தேன். எனவே நாலாப்பக்கமும் உங்களுக்கு இரத்தஞ் சிந்துதலும் வயல்களுக்கு அழிவும் நேரிடும்படியாக செய்துகொண்டீர்கள். இப்பவும் அவைகளை தடுத்துக்கொள்வதானால் உங்களுக்கு ஒரு நல்ல யோசனை சொல்லுகிறேன். எனது புத்தி மதி என்னவெனில், நீங்கள் யாதொரு தாமதமின்றி உங்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டு சண்டை முடியும் வரையில் அமைதியாயிருங்கள். அப்படியே நீங்கள் இந்த 13-ந் தேதிக்குள் செய்வீர்களேயானால், நீங்கள் கூடியவரையில் பாதுகாக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள். அப்படியே உங்கள் குடும்பம் முழுதும் பாதுகாக்கப்படும். உங்கள் சொத்து சுதந்தரம் யாவும் லூட்டியடிக்கப்படவாவது கவர்ண்மெண்டுக்கு சேர்த்துவிடப்படவாவதினின்று இரக்ஷிக்கப்படும். பிரிட்டிஷார் முன்னேறும்போது உங்கள் யாவருக்கும் யாதொரு இடுக்கணும் நேரிடமாட்டாது. நியமிக்கப்படும் இரகசிய ஏஜண்டுகள் உங்களது பெயர்களை எல்லாம் எனக்குக் குறிப்பிடுவர். அப்படி தங்கள் வீடுகளுக்கு திரும்ப மனமில்லாதவர்களெல்லோரும் கடைசியில் தாங்கள் சேகரித்துள்ள சொத்து சுதந்தரம் யாவும் கவர்ண்மென்டாருக்கு சேர்க்கப்படும்படி கொடுத்துவிட வேண்டிவரும். அதோடு ஒவ்வொருவனும் ஒவ்வொரு துப்பாக்கியும் 150 தோட்டாக்களும் கண்டிப்பாய் கொடுத்துவிட முஸ்திப்பாயிருக்கவேண்டும். இம்மாதிரியான சட்டம் ஆபீஸர்களுக்கும் உங்களது பீரங்கிபடையாருக்குமல்ல ; அவர்களெல்லோரும் யுத்தத்தின் சிறைகளாக கொண்டுபோகப்படுவார்கள். கடைசியாக சொல்லப்போனால் உங்கள்மீது எழும்ப எனது சேனையே அனுப்பப்படினும் அனுப்பப்படும். எனவே இந்த என் புத்திமதிக்கு செவிகொடுக்காது போனால் பிறகு ஒன்றுஞ் செய்ய முடியாது. அப்போது உங்களுக்கு நேரும் மனஸ்தாபங்களுக்கும் சேதங்களுக்கும் தங்களைத்தாங்களே நொந்துகொள்ள வேண்டியது. நீங்களும் உங்கள் குடும்பங்களுமே பரிதபிக்க வேண்டிவரும்.

இங்ஙனம்,

R. S. S. பேடன்-பவுல், கர்னல்.

மாபிகிங்.

இப்படியாக இவர் நபபயமாய்ச் சொல்லிக்கொண்டும், உள்ளே அகப்பட்டுக்கொண்டும் இருக்குஞ்சமயத்தில் இவருக்குச் சாப்பாட்டு வகைகள் வருவதற்குங் கூடாமையாய் எதிரிகளால் தடைப்படுத்தப் பட்டுவிட்டதால், குநிரைகளுக்குக் கொடுக்கும்படியான ஓட்ஸ் தானியத்தை எஜமான்கள் (இவர்கள்) சாப்பிடும்படி நேர்ந்தது. ஆயினும் தைரியத்துடன் காத்துநின்றனர். இப்பட்டணத்தை விடுவிக்கும்படியாக ரோடிஷிய சேனையுடன் வடக்கேயிருந்து கர்னல் புளுமர் எதிரிகளைத் தாக்கிக்கொண்டேயிருந்தனர். இவரும் மெத்த தீரவீரன் எனத்தடையில்லை. இவர் 1876-ம் வருஷத்தில் யார்க் அன்ட் லான்காஸ்டர் பட்டாளத்தில் லெப்டினென்டாகவிருந்து படிப்படியே உத்தியோகமுறையிலுயர்ந்து சௌதான் படையெழுச்சியில் எல்டெப்,டாமாய் இந்த இடங்களில் போர்புரிந்திருக்கின்றனர். மெல்கிடி, கெடிவ் இந்த மெடல்களும் பெற்றிருக்கிறார். இவரே ரொடேஷியாவிலும் வாலண்டியர்களைச் சேர்த்து ரோடிஷிய படையையுமுண்டாக்கி அதே படையைக்கொண்டு மாபிகிங்கை விடுதலை செய்யவும் முயற்சித்தார்.



# III-அத்யாயம்.

## லேடிஸ்மித் மீட்சிப் பிரயத்தனம்;—பிரமாதமான யுத்தங்கள்.

இப்படியாக முதலில் கிம்பர்லியும் மாபிகிங்கும் அடைப்பட்டு விட்டதுடன் லேடிஸ்மித் பக்கமும் சண்டையின் மும்முரமதிகமாக விருந்ததின்பேரில் சீமையில் யுத்த ஆபீஸில் மிகுந்த அமளிகுமளியாகிவிட்டு, சட்டென இன்னும் அதிகமான சேனைகளை யனுப்பும்படியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு இவ்விடத்திற்கு புதிய கமான்டரின்சீப்பாக ஜெனரல் புல்லரையனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. இவரும் உடனே மிகுதியான சேனைகளுடன் அக்டோபர் மாதம் 31-ந் தேதியே வந்து கேப்டவுன் இறங்கினர். இந்த வீரவிக்ரமரின் முழுப்பெயர் ஆனரபில் ஜெனரல் ஸர் ரெட்வர்ஸ் ஹென்றி புல்லர் V. C., G. C. B., K. C. M. G. இவர் 1839-ம் வருஷத்தில் டவுன்ஸ் பட்டணத்தில் பிறந்தனர். இவரின் தகப்பனார் பேர்போன ஜேம்ஸ் வென்ட்வர்த் எஸ்கொயர் என்பவர். தாயாரோ, இங்கிலாந்தின் கிழக்கு தேசமான நார்பார்க்கில் பிரபுவான லார்ட் H. M. ஹௌவார்ட்டின் புத்திரியான சார்லெட் என்னும் மாது. இவர் டிவான்ஷைரின் எர்லான ரிச்சார்டி ரிவர்ஸ் அதாவது ரெட்வர்ஸ் என்பவரின் குடும்பத்துப் பெண்ணைக் கலியாணஞ்செய்த முகாந்தரத்தினால் இவருக்குத் தமது



ஜெனரல் புல்லர்.

பேரோடு ரெட்வர்ஸ் என்கிற பெயரும் கூட்டலானது. இவர் தமது 17-வது வயதில் 60-வது கிங்ஸ் ஒன் ரைபில்ஸ் படையில் முதலாவதாகச் சேர்ந்த சீக்கிரத்தில் இவரது மனமுடைந்து போகும்படியான கொடிய விபத்தொன்று நேர்ந்துவிட்டது. அதாவது ஒரு நாள் காலை இவர் தோட்டத்தில் விறகு வெட்டிக்கொண் டிருந்தபோது வெட்டுக்கத்தி சடக்கென கையிலிருந்து நழுகிவிட்டதில் முட்டிக்காலில் பட்டுக் கொடிய காயம் விளைந்துவிட்டது. டாக்டர்கள் காலை எடுத்துவிடுவதில் மிகவாக யோசனை சொல்ல, இவர் முதலில் அதற்கிசைந்தாரெனினும் பிறகு "நான் ஒரு காலுடன் உலகத்தில் ஜீவிப்பதைப் பார்க்கிலும் இரண்டு காலோடு மரிப்பதே மேல்" எனத் திட்டமாகச் சொல்லியதின் பேரில் மிகுந்த பராமரிப்புடன் காயத்தைக் கட்டி சிகிச்சை செய்ததில் பூரண சுகமடைந்து இப்போதும் யாதொரு ஊனமின்றி வேலைசெய்யச் சக்தியுள்ளவராக விருக்கின்றனர். இவர் தமது 21-ம் வயதில் சீன படையெழுச்சிக்குச் சென்றிருந்து அங்கு டாகு கோட்டைகளை முறியடித்ததில் கலந்திருந்து மெச்சத்தக்க வீரச்செய்கை காட்டினதில், கீர்த்திக்குரிய மெடல் ஒன்று பெற்று சீமைக்குத் திரும்பினர். 10 வருஷங்களுக்குப் பிறகு அமெரிக்காவிலுள்ள கானடாவில் நேர்ந்த கலகத்தையடக்க லார்ட் வூல்ஸியினால் செய்த படையெழுச்சியுடன் சென்று போர் முகத்தில் நின்றனர். இவர் அங்கு போர்புரிந்த வீரத்தன்மையைக் கண்ட லார்ட் வூல்ஸிலி இவரை மேஜர் பட்டத்திற்கு உயர்த்தியதோடு அஷாண்டி சண்டையில் தமது பரிவாரத்துள் ளொருவராகவும் நியமித்துக்கொண்டனர். பிறகு காப்பிரி, சூலு இந்த யுத்தங்களிலெல்லாம் கலந்து மிகுந்த கீர்த்தி பெற்றனர். இந்த யுத்தங்களில்தான் இவர் விக்டோரியா கிராஸ் மெடல் பெற்றார். பிறகு படிப்படியே ஜெனரல் உத்தியோகத்திற்கு உயர்த்தப்பட்டுவிட்டு 1881-ம் வருஷத்து போயர் யுத்தத்தில் ஸர் எல்வின் வூட்டின் சீப் ஸ்டாப்பாக நியமகம்பெற்று வேலை செய்தனர். இவர் முதலில் இராணுவத்தில் சேரும்போது யாதும் நிலச் சொத்து சுதந்தரத்திற்கு எதிர்நோக்கி யில்லாதவராயிருந்தும் 1872 வருஷத்தில் தமது மூத்த சகோதரர் இறந்துபோகவே தமது குடும்பத்திற்குத் தலைவராகி மிகு பெரிய நிலத்திற்குச் சொந்தக்காரரானார். பிறகு 1882-ம் வருஷத்தில் மார்க்குயிஸ் டவுன்ஷென்ட்டின் 3-வது

குமாரத்தியும் தி ஆனரபில் கிரிவில் T. ஹௌவர்டின் விதவையுமான லேடி ஆட்ரியை மணம் புரிந்தனர். இந்தம்மாளுக்கு தமது முந்திய புருஷனால் 2 பிள்ளைகளிருந்தனர். ஜெனரல் புல்லர் கலியாணஞ் செய்துகொண்டபிறகு அவ்விருவரையும் இராணுவத்தில் சேர்த்து விட மூத்தவர் ஜுரத்தால் இந்தியாவில் இறந்துபோயினர். இளையவர் இப்போது தமது மாற்றாந்தகப்பனாகிய இந்த ஸர் ரெட்வர்ஸ் புல்லர் நடத்தும் சேனையுடன் போய் கலந்திருக்கிறார். இவரது சரிதை இப்படியானால், இவர் கேப்டவுன் வந்திறங்கியதும் ஆரஞ்சிபிரீஸ்டேட்டு வழியாக திரான்ஸ்வாலுள்புக யோசனை செய்துகொண்டிருக்குஞ் சமயத்திலேயே லேடிஸ்மித் பட்டணம் அடைபட்டுவிட அதை விடுவிக்க முயற்சி செய்யும்படியான பெரும் வேலை நேர்ந்துவிட்டது.

நெட்டாலில் இராணுவபயிற்சி இடமாகிய ஷை லேடிஸ்மித் பட்டணம் போயர்களால் நவம்பர்மாதம் 2-ந் தேதியன்று முற்றுகை செய்யப்பட்டதாய்த் தெரிவித்துள்ளோமல்லவா; இந்த லேடிஸ்மித் பட்டணமானது தென் ஆபிரிக்கா முழுவதற்கும் "ஆல்டர்ஷாட்" என்று சொல்லும்படியான யுத்தாப்பியாச ஸ்தலமும், நெட்டால் இராச்சியத்தின் மூன்றாவது பெரிய பட்டணமுமாய் விளங்கியுளது. இதின் ஜனத்தொகை இரண்டாயிரம் வெள்ளைக்காரரும், மூவாயிரம் கறுப்பு மனிதருமே. இதில் அநேக ஆலயங்களும், ஒரு பெரிய டவுன் ஹாலும், 3-ஒட்டேல்களும் ஒரு பெரிய கவர்ண்மென்ட் ஸ்கூலு முண்டு. இதில் ஒரு பாரக்ஸ் ஒரு ஆஸ்பத்திரி ஒரு கோவில் 1500 குதிரைகள் தங்கும்படியான லாயமிவைகள் கட்டப்பட்டிருக்கிறது. இந்த பட்டணத்திற்கு ஸர் ஆரி ஜியார்ஜ வாகிலின் ஸ்மித்தவர்கள் தமது பத்தினியின்பேர் வழங்க லேடிஸ்மித் என நாமகரணஞ்சூட்டினர். அப்படியே தம்முடைய பெயரை ஆரஞ்சி பிரீஸ்டேட்டிலும் ஒரு ஊருக்கு இட்டிருப்பதால் அந்த ஊர் ஆரிஸ்மித் என அழைக்கப்படுகிறது. இந்த ஆரிஸ்மித்திற்கும் லேடிஸ்மித்திற்கும் இப்போது ரெயில் தொடர் செல்லுகிறது. அவர் கேம்பிரிட்ஜ்ஷைரின் குடும்பத்தை சேர்ந்தவர். அவர் சில பெருஞ்சண்டைகளிலெல்லாம் இருந்திருக்கின்றனர். அவர் பெனின்சுலார் யுத்தத்தின் படையெழுச்சியில் பாடாஜாசிலிருந்தபோது அங்கு சோல்ஜர்களிடமிருந்து தப்பி அடைக்கலம் புக ஜெனரலண்டை தன் சகோதரியுடன் ஓடிவந்த ஒரு இளம் ஸ்பா

ணிய பெண்ணை மணஞ்சூடினர், இந்த ஸ்பானிய பெண்ணின்பேரா லேயே இப்பட்டணம் லேடிஸ்மித் என்றழைக்கப்படுகிறது.

இப்பட்டணத்தை போயர்கள் அடைத்துவிட்டதுதான் தாமதம், அதைச்சுற்றி "லாங்டாம்" "ஆட்ச்கிஸ்" "பாம்பாம்" என்னும்படியான பலவித பீரங்கிகளையெல்லாம் கொண்டுவந்து சுற்றி மலைகளில் ஸ்தாபித்து தினநிதம் குண்டுபிரயோகஞ் செய்துகொண்டேயிருந்தனர். அதோடு சிற்சில சமயங்களில் ஆற்றைத் திருப்பிப் பட்டணத்தையே வெள்ளமயமாக்கவும் பிரயாசித்தனர். தந்திக் கம்பிகளையெல்லாம் அறுத்து யாதொரு சமாசார வரத்துப்போக்கு வராதபடியும் செய்துவிட்டனர். அதோடு அடிக்கடி கோட்டைக்கருகில் நெருங்கிவிட்டு கைப்பற்றவும் பிரயாசித்தனர். ஆயினும் ஜெனரல் வொயிட் வெகு யூகையாய் போயர்களைக் கிட்டே அணுகாதபடி சனியனால் குத்தி விரட்டியடித்துக்கொண்டேயிருந்தனர். இந்த பட்டணத்தை விடுவிக்கும்பொருட்டு பிரிட்டிஷ் சேனை நவம்பர்மாதம் 14-ந் தேதியன்று வேவு பார்க்கும்படியான டேப்லின் பியூஸிலர்ஸ் படையாரின் சில வீரரை ஆயுததாரிகளாக ரெயில்வண்டியொன்றிலேற்றி ஒரு பீரங்கியுடன் சிவிலி என்ற ஊருக்கு அனுப்பிவைக்க, அந்த வண்டி போய் சிவிலி ஸ்டேஷனைச் சேருந்தருணம், எங்கோ பதிவிருந்து 100 போயர் குதிரைவீரர் திடுதிபென்று வந்து துப்பாக்கியால் சுட, ரெயில்வண்டியை வாயுவேகமாய் பின்னுக்கு திருப்பிவிட்டுக்கொண்டு வரும்போது பிரீரி ஸ்டேஷனுக்கு 2 மைலில் ஒரு குன்றிலிருந்து மற்றும் ஒரு பகுதி போயர்கள் பீரங்கி பிரயோகஞ்செய்ததில் வண்டிகள் உடைந்தும் பாதை விலகியும் போய்விட்டது. இதிலநேகர் கொல்லப்பட்டு காயமடைந்ததுடன் 60 பேர்வரையில் சிறையாகவும் பிடிபட்டுப் போயினர். இதில் என்ஜின்வண்டி மாத்திரமே சில காயமடைந்தவர்களுடன் தப்பி வந்து சேர்ந்தது. இப்படி தப்பி வந்துவிடும்போது, லார்ட் ரான்டால்ப் சர்ச்சில்லினுடைய மகனும் "மார்னிங் போஸ்ட்" பத்திரிகையின் கடிதருமான மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் என்ஜின் வண்டியிலேறிவிட்டும் காமடைந்தவர்களில் சிலரைத் தூக்கி வண்டியிலேற்றிக்கொள்ள வண்டியைவிட்டிறங்கி வந்ததில் இவரும் சிறையாக்கப்பட்டார். என்றாலும் வெகு யூகைபாக டிசம்பர் மாதம் 26-ந்

தேதியன்று தப்பி ஓடிவந்து சிவிலியிலிருந்த பிரிட்டிஷ் காம்பில்சேர்ந்துவிட்டார்.

இதற்குள் கமான்டரின்சீப்பான ஜெனரல் புல்லரும் நவம்பர் மாதம் 25-ந் தேதி நெட்டால் வந்திறங்கி, உடனே தமது பரிவாரத்துடன் முன்னேறினர். இவர் வரவைக் கேள்வியுற்ற போயர் கமான்டரின் சீப்பான இந்த ஜெனரல் ஜோபர்ட்டும் அடுத்த நாளே எதிர்த்துத்தாக்க போயர்களை முன்னுக்கு நடத்தினர். இவரின் முழுப் பெயர் தி ஆனரபில் பெட்ரூஸ் ஜாகோபஸ் ஜோபர்ட். இவர் பிரீ ஜோபர்ட்டின் பௌத்திரன். இவர்கள் யூகண்டி மதத்தைச்சேர்ந்தவர்கள். தங்களது மத விசுவாசத்திற்குப் பங்கம் வராது வீட்டையும் சிநேகிதர்களையும் விட்டுத் தென்னாப்பிரிக்காவி லடைக்கலம் புகுந்தவர். அங்கு கேப்காலனியிலுள்ள காங்கோவில் 1834-ம் வருஷத்தில் இந்த ஜெனரல் ஜோபர்ட் பிறந்தனர். இவர் பெரியவராகி வர்த்தகத்தொழில் புரிந்துகொண்டேயிருந்து லா ஏஜண்டாக சிலகால முழைத்து ஆஸ்திவந்தனானர். ஸர் தியாபிலஸ் ஷெப்ஸ்டோன் திரான்ஸ்வாலை முற்றுகை செய்தபோது அவர்கள் பின்னிட்டுப்போவதைப்பற்றி ஷெ வேலையாய் லண்டன்பட்டணத்திற்குப்போக பிரசிடெண்ட் குரூகரின் தோழனானர். இவரப்படியே படிப்படியாக கமான்டன்ட் ஜெனரலுத்தியோகத்திற்கு உயர்த்தப்பட்டனர். பிரிஸிடென்ட் குரூகருக்குப் பிறகு இவர்தான் பிரிஸிடென்டாகவேண்டியவர். இவர் நம் பிரிட்டிஷாரிடம் கொஞ்சம் அபிமானமுள்ளவரென்றே தெரிகிறது. எப்படியெனில் பிரிஸிடென்ட் குரூகர் இரண்டாமுறையாக 1888-ம் வருஷத்தில் பிரஸிடென்டாக நியமிக்கப்படுகையில் சில விவாதங்கள் நேர்ந்தபோது இவர் "நான் நமது சுயாதீனத்திற்காக இங்கிலீஷாருடன் சண்டைப் பிடித்தேன். ஆனால் நான் முந்தியிருந்தது போலவே இப்போதும் அவர்களுக்கு விரோதமான ஒரு கெட்ட எண்ணமும் வைக்கவில்லை. இங்கிலீஷ்காரருக்கு



ஜெனரல் ஜோபர்ட்.

விரோதமாக எந்த பவர்கள் யுத்தத்திற்கு வரினும் நான் அவர்களு டன் எதிர்த்து சண்டைசெய்வேன். ஜெர்மனி திரான்ஸ்வாலின்மீது வரப் பிரயாசித்தால் இங்கிலீஷ்காரரை நோக்கி "நாங்கள் ஜெர்மன் காரர் கைகளிலகப்படுகிறதைப் பார்க்கிலும் நீங்கள் எங்களை ஏற்றுக் கொண்டு உங்களுடையவர்களா யாக்கிக்கொள்ளுங்கள் என்று சொல் லுவேன்' என்றனராம். அதோடு இவர் தமக்கு பிரிட்டிஷார் எதிரிக ளாகவிருந்தும் தமது தயாள குணத்தையே காட்டியிருக்கிறார். அக் டோபர்மாதம் 20-ந் தேதியன்று கிளென்கோ ஜங்ஷனுக்குக் கிழக் கேயுள்ள தாலானு குன்றில் போர் நடந்ததில் நமது பிரிட்டிஷ் ஜெ னரலான சிம்மன்ஸ் கடுங்காயமடைந்தும் போயர்களால் சிறையாகக் கொண்டும் போகப்பட்டு மூன்றுநாளைக்குப் பிறகு இறந்துபோனதில் அந்த துக்க சமாசாரத்தை ஜெனரல் வொயிட் லேடிஸ்மித்திலிரு ந்தபோது அவருக்குத் தந்தி கொடுத்ததாவது;—"ஜெனரல் சிம்மன்ஸ் மெத்த வேதனையாய் அதிக காயமடைந்து இறந்துபோய் அடக்கம் பண்ணப்பட்டு விட்டதை யறிவிக்க மிகுந்த அனுதாபப் படுகிறேன். பழிக்கஞ்சாத வர்த்தகர்களும், திரவியஸ்தர்களும் திரான்ஸ்வாலுக்கு வந்து பெருந் திரவியமடையவேண்டி தங்களுடைய சொந்த விஷயங் களுக்காக மற்றவர்களையும் வழிவிலகச்செய்து இம்மாதிரியான சண் டையை வரவிடுத்து ஜெனரல் சிம்மன்சைப்போலொத்த விலையேறப் பெற்ற ஆத்துமாக்களைப் பலிகொடுக்கும்படியாகச் செய்த இந்த காரி யங்களெல்லாம் சீக்கிரம் முடிவுக்கு வந்துவிடும்படியாக தெய்வத்தில் ந ம்பிக்கையாயிருக்கிறேன். அதோடு லேடி சிம்மன்ஸிற்கும் அவர்களின் தீரமான புருஷனின் மரணத்தை என் மிகுந்த துயரத்துடன் அறிவி க்கிறேனென்று தெரிவிக்க வேண்டுகிறேன். அவரை நாங்கள் சர்வ மரியாதையுடன் அடக்கஞ் செய்துவிட்டோம். நம்மிலிருபக்கத்திலும் அநேகருக்கு அதேவிதிதான் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அவர் மிகு ந்த தைரியமானவர். நாங்களவரின் சேதத்திற்காக மிகவும் துக்கிக்கி றோம்." என்பதே. இப்பேர்பட்ட நற்குணம் வாய்ந்த இவர் சமய பே தத்தால் பிரிட்டிஷாருக்கே விரோதமாய் எழும்பவேண்டியதாயிற்று. எனினும் இவர் சண்டை துவங்குவதற்கு முந்தி பார்லிமெண்டிற்கு சமாதானத்தைக் கோரி கடிதம் எழுதி யாதொரு பிரயோஜனமுமற் றுப் போய்விட்டதால், கடைசியாக தமது கடைசித் துளி இரத்தம்

சிந்தும்வரை போர்புரிவதாய்த் தெரிவித்து துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு சண்டைக்குக் கிளம்பிவிட்டனர்.

## டுகிலா நதி—கொலென்ஸோ சண்டை.

### பயங்கரமான யுத்தம்!

இந்த ஜெனரல் ஜோபர்ட் யுத்தத்திற்குக் கிளம்பினதும், லேடிஸ்மித்தை விடுவிக்க வந்த ஜெனரல் புல்லரை எதிர்த்து நின்றனர். ஜெனரல் புல்லரும் வெகுவான பிரயத்தனங்களையெல்லாம் செய்து டிசம்பர் மாதம் 14-ந் தேதியன்று, 4-காலாட்படைகள், 2-குதிரைப் படைகள், அதோடு வாலின்டியர் படை, 6-பீரங்கி பத்திரி படைகள், 16-கேவல் பீரங்கிகள், ராயல் எஞ்ஜினியர்கள் சேர்ந்த ஒரு பகுதி, இன்னுமற்றும் படைகளாக 2300 பேரோடு தன் படையெழுச்சியின் வழியில் முதலிலேயே இருக்கும்படியான கொலென்ஸோ நதியைக் கடக்கப் புறப்பட்டனர். இவர்கள் தங்கள் பாளையங் கட்டியிருந்த சிவிலி ஸ்டேஷனை விட்டு ஜெனரல் ஹண்டு, ஜெனரல் ஹில்ட்யார்ட், ஜெனரல் கிளேரி மற்றுமானவர்களும், லார்ட் ஜெரார்ட், லார்ட் டண்டானல்ட் முதலியவர்களும் மிகுந்த யூகைபாக அணிவகுக்கப் பட்டு கிராப்ளர்ஸ் குன்றில் ஸ்தானங்கள் அமைத்துக்கொண்டிருந்த போயர்கள்மீது பீரங்கி பிரயோகஞ் செய்துகொண்டே கிட்டே அணுகி, மறுநாள் காலை 6-மணிக்கு மிகுந்த அருகாமையாய் வந்துவிட்டு குண்டுபிரயோகஞ்செய்தனர். செய்தும் போயர்கள் யாதொரு பதில் குண்டும் விடாமலிருந்ததின்பேரில் காலாட்படைகளை முன்னுக்கேற விட அ! ஆ!! $\frac{1}{2}$ மணி நேரத்திற்கெல்லாம் சடாலென போயர்கள் சுமார் 600 கெஜ தூரத்திலிருந்தெழுந்து துப்பாக்கி குண்டு சரமாரியாய்ப் பொழிந்தனர். இதற்குள் மற்றும் போயர்கள் ஆற்றோரமாயிருந்துகொண்டு விடுத்த பீரங்கி வெடிகுண்டுகளோ மிகுந்த பயங்கரசேதத்தை விளைவிக்கிறதாயிருந்தது. திடீரென இம்மாதிரியான ஆபத்து நேர்ந்துவிடினும், பிரிட்டிஷ் வீரர் அக்கினிமாரியின் நடுவில் படுத்துக்கொண்டும் நகர்ந்துகொண்டும் மிகுந்த உக்கிரமாய் எதிர்த்தனர். ஆயினும் போயர்களினுடைய குண்டுபிரயோகங்களின் உபத்திரவம்

மிகக் கொடியதாயிருந்ததின்பேரில் படைகள் திரும்பும்படியான உத்தரவு செய்யப்பட்டது. பீரங்கிபடை திரும்பியபோது, 2-பீரங்கிகள் பின்தாங்கப்பட நேரிடினும் அவைகளை நடத்திய கர்னல் லாங்கும், கர்னல் ஹண்டும் மிகுந்த பிரயாசையோடு அவைகளை விடாது தாங்கி நின்றும் கால்மணி நேரத்திற்கெல்லாம் அவ்விருவரும் காயங்களடைந்துவிட்டனர். இப்படியான கடும்போர் புரிந்ததில் பிரிட்டிஷார் பக்கம் கொல்லப்பட்டும் காயமடைந்தும் காணமல் போனவர்களுமாக 1500 பேர்வரை சேதமாயினர்.

இந்த சண்டையில்தான் கமாண்டரின் சீப்பான பீல்ட்மார்ஷல் லார்ட் ராபர்ட்ஸவர்களின் ஏகபுத்திரனை தி ஆனரபில் லெப்டினென்ட் ராபர்ட்ஸ் காயமடைந்து பிறகு அதே காயத்தால் இறந்தும் போயினர். 14—வது பத்திரியினுடையவும் 66-வது பத்திரியினுடையவும் ஷை 2—பீரங்கிகள் பின் தாங்கப்பட்டு விடவே அவைகளை மீட்கும்பொருட்டு ஜெனரல் புல்லர், கர்னல் லாங்கையும் அவரது வீரர்களையும் நோக்கி "வீரர்களே! கடவுளை முன்னிட்டு நீங்கள் செத்தாலும் பீரங்கிகளை மாத்திரம் விடாதேயுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே புல்லரது குதிரையின் கழுத்திலும் சுடப்பட்டது. அதே சமயத்தில் ஒரு பீரங்கிகுண்டு வந்து ஓர் பாரையின் மீது விழவும், ஒருசிறு துண்டுகல் தெரித்து ஜெனரல் புல்லர் மார்பிலும் பட்டதில் இப்பவும் அந்த இடத்தில் இரத்தம்கட்டி நீலமாக வடிவு தெரிகிறதாம். ஜெனரல் கிளேரிக்கும் ஒருவாறு கையில் காயம்பட்டது. இந்த சமயத்தில் மிகுந்த வீராவேசமாய் துணைக்கு ஓடிவந்த லெப்டினென்ட் ராபர்ட்ஸின் குதிரை பீரங்கிதுண்டொன்றால் பஞ்சு பஞ்சாய்விட்டது. அதோடு லெப்டினென்ட் ராபர்ட்ஸும் தனது தேகத்தில் பலவிடங்களில் காயமடைந்தனர். இவரது வீரதீர செயலுக்காக விக்டோரியா கிருஸ் V. C. மெடல் கொடுக்கப்பட்டதெனினும் அதற்குள் காயத்தால் மரித்துப்போயினர். இவர் ஜெயித்த V. C. மெடலை இவர் தாயாரான லேடிராபர்ட்ஸ் ஓர் சமயம் நமது இராணியாரை வின்ட்சர் மாளிகையில் போய்க் கண்டபோது இராணியார் ஒரு சிறு மூட்டையாகக் கட்டி அதை இவரது தாயாரிடம் கொடுத்து வீட்டிற்குப் போன்பிறகு அவிழ்த்து பார்க்கச்சொன்னார்களாம். அப்படியே அவர்களும் வீட்டில் வந்துபார்க்க அது தனது மகன் செய்த

வீரச்செயலின் V. C. மெடலாக விருக்கக் கண்டனர்களாம். இப்படியாக லெப்டினெனன்ட் ராபர்ட்ஸின் V. C. யை தனது தாயார் போய் வாங்க நேரிட்டதென்றால், இவரின் மரணத்தை லார்ட் ராபர்ட்ஸ் அறிந்தவிதமும் ஒரு வியப்புக்குரியதாயிருந்தது. அதாவது சீமையில் பிரயாணிகள் ஒன்றுகக் கூடும் ஒரு கூட்டத்தில் ஒருநாள் லார்ட் ராபர்ட்ஸும் போயிருக்க அங்கு கூடியிருந்த பலருள், ஒருவன் லார்ட் ராபர்ட்ஸ் வந்தசங்கதி தெரியாதவனாய் "ஐயோ தெய்வமே, பாபுமகன்கூட கொல்லப்பட்டுப் போனார்" என்றானாம். இதைக் கேட்டதும் லார்ட் ராபர்ட்ஸ் என்னவென்று விசாரித்து சங்கதியையறிந்து மிகுந்த கலக்கத்தோடே தலைகுனிந்துகொண்டே வீடுவந்துசேர்ந்து துக்கித்தனராம். (பெரிய மனிதர்களை ஒருவிதமாய் பேர்வைத்துபேசிக்கொள்வது அங்கத்தியவர்கள் வழக்கமாதலால் லார்ட் ராபர்ட்சையும் பாபு அன்று அழைப்பார்கள்.) ஜெனரல் புல்லரின் இந்த முதலாவதான டுகிலாபடையெழுச்சியில் இப்படியான கனத்த சேதமானது. காயமடைந்திறந்த கன்னர் ஒருவனுடைய தேகத்தில்மாத்திரம் 64 காயங்களிருந்ததாக கணக்கிடப்பட்டதென்றால் சண்டையின் மும்முரம் என்னமாயிருந்திருக்கும்! மறுநாள் சண்டையில் செத்தவர்களைப் புதைக்கும்படியாக சண்டை நிறுத்தப்பட்டது. சுமார் 1200 கூலியாட்கள் பிரிட்டிஷாரின் காயமடைந்தவர்களைக் கொண்டுவந்து வண்டிகளில் ஏற்றி ஏழுமைலுக்கப்பால் சிவிலியிலுள்ள ஆஸ்பத்திரிக்குகொண்டுவந்து சேர்த்தனர். டிசம்பர் மாதம் 19-ந் தேதியன்று பிரிட்டிஷாரின் 2 பீரங்கிகள் கொலென்ஸோரோட் வாராவதியின்மீது வெடிகுண்டு பிரயோகஞ்செய்து அதை நாசஞ்செய்துவிட்டது. டுகிலாநதியின் அந்தப்புறத்தில் பலமாக ஸ்தானங்கள் செய்துகொண்டிருந்த போயர்கள்மீதும் குண்டு பிரயோகங்கள் செய்தும், அவர்கள் யாதும் பதில் பிரயோகஞ்செய்யவில்லை. கிறிஸ்மஸ் 25-ந் தேதியன்று சிவிலி காம்பிலிருந்த துருப்புகள் மிகுந்தவேடிக்கையான விளையாட்டுகளெல்லாம் செய்து இராணியாரனுப்பிய சாக்கிலேட் மிட்டாய்களைத்தின்று கிறிஸ்மஸ் டின்னர் என்னும் விருந்துண்டு ஜான்புள் பிரசிடென்ட் குரூகர் இவர்களது உருவஞ்செய்து பீரங்கி வண்டியின்மீது வைத்து காம்பைச்சுற்றி வலம்வந்தனர். இந்த சமயத்தில் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது. அதாவது நமது இராணியார் த

மது துருப்புகளுக்கு அனுப்பிய கிரிஸ்மஸ் வெகுமதியான சாக்கலே ட் மிட்டாயின் விவரம் என்னவெனில், வாஸ்கோடி காமா என்பவர் கொஞ்சம் சாமி பக்தி மிஞ்சினவர். அவர் 500 வருஷங்களுக்கு முந்தி இந்தியாவுக்கு வருகிறவழியில், கிறிஸ்மஸ் (டிஸம்பர் 24-ந் தேதியன்று) இந்த கேப்முனையில் சேர்ந்தார். ஆகவே அந்த இடத்திற்கு க்ஷ கிறிஸ்துவின் ஜனனநாளைக்குறிப்பிட்டு நெட்டால் என்று பெயர் கொடுத்தார். நெட்டால் என்றால் ஜனனநாள் என்று அர்த்தம். அப்படியே அந்த ஜனனநாளன்று இங்கிலீஷ்சேனை நெட்டாலில் யுத்தமுகத்திலிருக்கிறதால், அந்த நாளை விசேஷமாய் நினைவுகூரவும், மகாராணியாரின் தயவைத் தன்சேனைகள் அன்று எண்ணிக்கொள்ளவும், அந்த சாக்லெட் பானபதார்த்தம் எதுவாயிருக்கலாமென்று மகாராணி இதை அனுப்பிவைத்தார்கள்.

இப்படியாக இவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையின் கொண்டாட்டமெல்லாம் தீர்ந்து 2-ம் நாளாகிய டிசமபர் மாதம் 27-ந் தேதியன்று ஜெனரல் புல்லர் 5-வது டிவிஷன் படையை நடத்திய ஸர் சார்லஸ் வாரன்னுடன் கலந்துகொண்டனர். இதே மாதத்தில் ஆறுவது டிவிஷன் படையும் மேஜர் ஜெனரல் கெல்லி கென்னியின் நடத்துதலில் அனுப்பப்பட்டது. 26-ந் தேதிபிரவு போயர்களுக்கென்று சில நெட்டரல் டச்சுகலகக்காரரால் அனுப்பப்பட்ட 6 வாகன் உணவு வகை வற்றிக்கொண்டு சென்ற ரெயில் வண்டியை பிரிட்டிஷார் பிடித்துக்கொண்டனர். இந்த ஒரு வாரத்தில் தென்னாபிரிக்காவில் பிரிட்டிஷாருக்கு எந்த பக்கமும் அபஜெபமாகவே யிருந்தது. மேற்கே கிம்பர்லியை விடுவிக்க சென்ற லார்ட்மெதுயூன் மாகர்ஸ்பான்டீனில் 11 தேதியன்று தோற்கடிக்கப்பட்டுவிட்டதுடன் மிகுந்த தைரியவீர ஜெனரலொருவரான வாச்சாப் மரண குண்டடிப்பட்டு “கடவுளைமுன்னிட்டு, இதற்காக என்னை 'நிந்திக்காதேயுங்கள்” என்று சொல்லிக்கொண்டே விழுந்தனர். மத்தியில் 10-ந்தேதியன்று ஜெனரல் காட்டகர் ஸ்டார்ம்பர்க்கில் காலாபக்கமும் திகைத்து நின்றுவிடும்படியாக செய்யப்பட்டுவிட்டனர். இதில் இவருக்கு நேர்ந்த அபரிமிதமான சேதத்துடன் காயமடைந்தவர்களைக்கூட கொண்டுவர முடியாமல் போய்விடவே இவர் “ஆ! என் தெய்வமே! அந்த ஏழை காயமடைந்த மனிதரைக் கண்ணேக்கும்” எனக்கூவி குழந்தையைப்போல அழுதனராம்.

நெட்டால் பக்கத்தில் ஜெனரல் புல்லரும் பின்னடையச் செய்யப்பட்டுவிட்டனர். இப்படியான அதிருப்திகரமாய்ப்போனது.

## டுகிலாநதி—ஸ்பாய்ன்காப் குன்றின் சண்டை.

### மிகவும் கோடூமையான யுத்தம்!

ஜனவரிமாதம் துவக்கத்தில் ஜெனரல் புல்லர் நடத்துதலிலிருந்த சேனைமொத்தமாவது:—(1) மேஜர் ஜெனரல் ஹில்ட்யார்டின் பிரிகேட்:—2-வது வெஸ்ட்யார்க் ஷைர் படை, 2-வது ஈஸ்ட்ஸ்ரேப் படை, 2-வது வெஸ்ட்ஸர்ரேப்படை, 2-வது டிவன்ஷைர் படை, நாவல் பிரிகேட்படை, நெட்டால்வாலின்டியர்படை. (2) மேஜர் ஜெனரல் லிட்டல்டன் பிரிகேட், 2-வது ஸ்காட்டிஷ் ரைபில்ஸ் படை, 1-வது டர்பான்லைட் இன்பன்றிபடை; 1-வது ரைபில்பிரிகேட்படை, 3-வது கிங்ஸ்ராயல் ரைபில்படை. (5) மேஜர்ஜெனரல் பார்டன்பிரிகேட், 2-வது ராயல்ஸ்காட்ஸ்படை, 2-வது ராயல் ஐரிஷ்படை, 1-வது ராயல்வெல்ஷ்படை, 1-வது ராயல்டூப்ளின்பியூஸிலர்ஸ் படை இவைகளெல்லாம் லெப்டினென்ட் ஜெனரல் கிளேரியினுடைய டிவிஷனுகப் பிரிக்கப்பட்டது. ஸர் சார்லஸ் வாரன்னுடைய டிவிஷனே 2-வது லான்காஷைர் பியூஸிலர்ஸ்படை, 1-வது மிட்டல்செக்ஸ்படை 2-வது ராயல் லான்காஸ்டர்படை 2-வது கிங்ஸ்ஓன்ஸ்காட்டிஷ் பார்டர்ஸ்படை, 1-வது சௌத்லான்காஷைர்படை 1-வது பார்டர் ரிஜிமென்ட், தார்னிகிரூப்ட் குதிரையேறிய காலாட்படைகளே. அதோடு இன்னமும் 1-வது டெர்பைஷைர், 1-வது ராயல் இன்னிஸ்கிலிங்ஸ் பியூஸிலர்ஸ், 2-வது சோமர்ஸெட் லைட் இன்பன்டிரி, 1-வது கனட்ரேஞ்சர்ஸ், 1-வது கிளௌசெஸ்டரின் ஒருபடை முதலான காலாட் பட்டாலியன்களுமிருந்தன. லார்ட் டன்டோனல்டின் பிரிகேடு—1 வது ராயல்டிராகூன்படை, 13-வது உஸார்ஸ்படையின் 2 ஸ்குவாடர்ன்கள், 6-வது இன்னிஸ்கிலிங் டிராகூன்படை, சௌத் ஆபிரிக்கன் ஆர்ஸ் படையின் 2 ஸ்குவாடர்ன்கள், இன்னும் இம்பீரி

யல் லைட் ஆர்ஸ்படையின்சிலரே. மேஜர் ஜெனரல் மார்ஷல்லினிடம் ராயல் ஆர்டிலரியின் 6 பத்திரிகளும் சில நாவல் பீரங்கிகளும் 4-வது மலைபத்திரிகளுமிருந்தன. இவ்வளவு சேனைகளுடன் ஜெனரல் புல்லர் டுகிலாநதியின் தெற்கே பிரீரிகாம்பில் ஹெட்குவார்டர்ஸ் ஸ்தாபித்துக்கொண்டிருந்தனர்.

இது லேடிஸ்மித்திலிருந்து ரெயில் வழியாக 29 மைலிலிருக்கிறது. போயர்கள் கொலென்சோவில் ஸ்தாபகஞ் செய்து கிழக்கும் மேற்குமாகப் பரவி நின்றிருந்தனர். இப்படியாக இவர்களை அரண்செய்து கொண்டிருக்கும் படியான இடமெல்லாம் 24 மைல் விஸ்தீரணமாயிருந்தது. ஜனவரி மாதம் 10-தேதியன்று லார்ட் டன்டோனுள்ட்டும் மேஜர் ஜெனரல் ஹார்ட்டும் ஸ்பிரிங் பீல்ட் போய் சேரும்படி வடமேற்காய் பிரயாணமாகியும் கொடிய மழையின் சங்கடத்தால் 12-ம் தேதி வரை ஸ்பிரிங் பீல்ட் சேரவில்லை. பிறகு லார்ட் டண்டானேள்ட் பாட்கீட்டர்ஸ் டிரிப்டண்டை டுகிலா நதியைக் கடந்து ஷெ டிரிப்டைக் கைப்பற்றினர். இதே இடத்தில் அடுத்த நாட்களில் லிட்டல்டன் பிரிகேடு டுகிலாநதியை வடக்கே கடக்க ஸர் சார்லஸ் வாரன் தமது டிவிஷனுடன் மேற்கே டிச்சார்ட்டிரிப்பண்டை (தொட்டில்பாலம்) செய்பாலத்தைக்கொண்டு ஆற்றைக்கடந்தனர். இந்த டுகிலா என்னும் பதத்திற்கு பயங்கரம் என்கிற அர்த்தமாம். ஏனெனில் இந்நதி உற்பத்தியாகும் மலைகளில் புசலடிக்குமானல் க்ஷண நேரத்திற்கெல்லாம் நதியில்பயங்கரப்படத்தக்கதாக வெள்ளம் புரண்டோடும். அச்சமயத்தில் அது செல்லும் வேகத்தில் பாலங்கள் முதலியவைகளையும் உடைத்துவிடும். இவ்வித பயங்கர நதியானதால் "டுகிலா" என்கிறபெயர் பெற்றது. இதற்கு கிளை நதிகளாக வட பாகத்திலிருந்து கிளிப் (கல்) நதி, சண்டேநதி, இவைகள் சேருகிறது. கிளிப் நதியின் மீதுதான் லேடிஸ்மித்திருக்கிறது. தெற்கே லிட்டில் டுகிலா, புளூகிருன்ஸ், புஷ்மான், மூஹி இந்த நதிகள் வந்து சேர்ந்து கடலில் போய் விழுவதற்கு முந்தி 58 மைலில் பப்பலோ (Buffalo River) நதியும்வந்துகலக்கிறது. இங்கே ஜெனரல் லிட்டன்டன்கொண்டு சென்றிருந்த சில ஹௌவிட்ஸார் பீரங்கிகளையும் மற்றும் நாவல் பீரங்கிகளையும் கொண்டு ஜனவரி 17-ந் தேதியன்று ஷெநதிக்கு தெற்கேயுள்ள மவுன்ட் ஆலீஸிலிருந்த எதிரிகள்மீது குண்டு பிரயோகஞ்செய்தனர். இப்படி ஆற்றைக் கடந்து வி

ட்டதையறிந்து, போயர் மிகுந்த ஆச்சரியமுற்று ஓடோடி அநேக பீரங்கிகளைக் கொண்டுவந்து. லேடிஸ்மித்திற்குப்போகும் வழியில் பிரிட்டிஷார் கடக்கவேண்டிய இடங்களிலெல்லாம் ஸ்தாபித்துக்கொண்டனர்.

இதற்குள் ஜெனரல் புல்லர் கொலென்ஸோ பட்டணத்தில் எதிரிகள் வராவண்ணம் ஜெனரல் பார்ட்டனை வைத்துவிட்டு டுகிலாவுக்கும் ஸ்பிரிங் பீல்டுக்கு மிடையிலுள்ள ஸ்பியர்மான் பாரம் என்ற இடத்தில் எட்குவார்டர்சை மாற்றிக்கொண்டனர். முன்னேறிய லார்ட் டன்டானேள்ட் 17-ந் தேதி காலை டிரிச்சார்ட் டிரிப்டிற்கு வடக்கே எட்டு மைலில் எதிரிகளோடு சிறு போர்புரிந்து துரத்தி யடித்தனர். இது சங்கதிகள் லேடிஸ்மித்துக்குத் தெரிய வரவும், அவர்களோ வெகு ஆவலாய் விடுதலைக்காக எதிர் நோக்கிய வண்ணமாயிருந்தனர். அப்படியே 20 தேதி ஜெனரல் கிளேரியுடனும்ஜெனரல் வாரனுடையவொரு பகுதியுடனும் ஆக்ஸன் ஹோம்ஸ் என்ற குன்றுக்கருகாமையாய் சண்டை தொடங்கி குன்றின்பின் குன்ருய் பிடித்துக்கொண்டேயிருப்பதையறிந்த ஜெனரல் புல்லர் 22-ந் தேதியன்று "நாம் நிலையான முன்னேறுதல் செய்கிறேமென நினைக்கிறேன்" எனத் தந்திகொடுத்தார். ஜெனரல் லிட்டல்டன் டுகிலா நதியண்டை பெரும் பீரங்கிகளையும் ஹௌவிட்ஸார் பீரங்கிகளையும் கொண்டு கொடிதாக குண்டு பிரயோகஞ்செய்து போர்புரிந்து கொண்டிருந்தனர். லேடிஸ்மித்திற்கு சரேலெனபோகப் பிரதான இடமாகவிருந்தவை ஸ்பாய்ன்காப்என்னும் குன்றும் அதை யடுத்த குன்றுகளுமே. ஜெனரல் வாரன் குன்றுகளிலெல்லாம் போர்புரிந்துகொண்டே குன்றின்பின் குன்ருய் பிடித்துக் கடைசியாக ஸ்பாய்ன்காப்பையே கைப்பற்ற இன்னும் 400 கெஜத்தில் 23-ந் தேதியன்று வந்துவிட்டனர். இதற்குள் துணைப்படைகளும் வந்து சேர்ந்து விட்டன. எனவே ஒரே நாள் இரவு பிரயாணத்தில் ஸ்பாய்ன்காப்குன்று பிடிக்கப்பட்டுவிடும் எனக் கருதப்பட்டு மேஜர்ஜெனரல் வூட்கேட்டின் பிரிகேட் அதைப்பிடிக்க நியமிக்கப்பட்டது. அப்படியேயிவர் தமது சேனையை சாயந்தரம் 6 மணிக்கு நடத்திக் குன்றிலிருந்து மிகுந்தஅமைதியாக இறங்கினர். சுருட்டுப் பிடிக்கவாவது பேசவாவது கூடாது என உத்தரவளிக்கப்பட்டது. குன்றுக்கந்தண்டையிருக்கும் போயர்களுக்கு சந்தடி தெரியாமல் அருகிற்செ

ன்று சனியனுல் குத்தி குன்றைப்பிடிக்க வேண்டியிருப்பதால் ஒரு துப்பாக்கி குண்டாவது சுடாதிருக்க கட்டளையிடப்பட்டது. அப்படியேயிவர்கள் யாதொரு சந்தடிசெய்யாது இரவு 10 மனிக்கெல்லாம்குன்றைவிட்டிறங்கி தாங்கள் கைப்பற்றப் போகும் ஸ்பாய்ன்காப் குன்றின் மீது மெதுவாக ஏறத்தொடங்கி ஜெனரல் வூட் கேட்டும் போதுமான சுகமுள்ளவரா யிராததால் அடிக்கடி சேர்ந்துபோயினும் தமது வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டும் சற்றுக்குச் சற்று இளைப்பாறிக்கொண்டும் விடிந்து 3½ மணி சமயத்திற்கெல்லாம் ஏறக்குறைய உச்சிமுனையில் வந்து சேர்ந்தனர். உடனே குன்றைக் கைப்பற்ற சனியன்களை துப்பாக்கியில்மாட்ட உத்தரவு கொடுக்கப்பட்டதும் எங்கோஇருந்த ஒரு போயர் "யார் வருகிறது அங்கேநில்" என்று கூவ ஜெனரல்வூட்கேட் "வாடர்லூ" என்றுபதில்கூறி முன்னேதாக்கவும்உத்தரவளித்தனர். பிரிட்டிஷார், தங்கள் சனியன்களோடுபடபட என முன்னேறியவுடனே போயர்களும் துப்பாக்கிகுண்டு சுட்டனர். ஆயினும் பிரிட்டிஷார் போயர்கள் பல பக்கங்களிலும் சிதறும்படி வெருட்டி ஒவ்வொரு ஸ்தானங்களாய்க் கைப்பற்றிவிட்டனர். இதற்குள் பின்னே ஆயுதம் மருந்து முதலியவைகளுக்கு சமாசாரமனுப்ப அப்படியே ஹௌட்ஸார்களும் 2 பீரங்கிகளும் மருந்துஆயுதமுதலியவைகளுடன் வந்துசேர்ந்தன. அன்று முழுதும் பிரிட்டிஷார் அந்தக் குன்றைக் கைப்பற்றியிருந்தனர்.

இப்படியிருக்க, இதற்குள் போயர்கள் மிகுந்த பரபரப்பாய் வேலைசெய்து இரவிற்கிரவே பாம்பாம், லாங்டாம் முதலிய பீரங்கிகளைக்கொண்டுவந்து ஸ்தாபனஞ்செய்து விடிந்த 7 மணிக்கெல்லாம் குண்டுபிரயோகத்தை சரமாரியாய்ப் பொழியத்தொடங்கினர். அன்று இருட்டாகும்வரையில் சண்டை வெகு மும்முரமாய் நடந்தது. பீரங்கிகுண்டுகள் துப்பாக்கி குண்டுகளின் சத்தமே காதுகளடைந்து போகும்படியாயிருந்தது, போயர்சுட்ட ஒவ்வொரு குண்டுகளும் பிரிட்டிஷாரின் மத்தியிலேவந்து விழுந்துவெடித்தன. இதற்குள் ஜெனரல் வாரன்னும் வந்து கூடிக்கொண்டனர். அப்படியிருந்தும் பிரிட்டிஷ் வீரர்கள், போயர்கள்விடும் அக்கினிமாரியைப்போன்ற நெருப்பைத் தாங்காது தவித்ததுமன்றி அபரிமிதமாக கொல்லப்பட்டும் காயமடைந்தும் இங்குமங்குமாய்த் தத்தித் தடுமாறினர். காலை 10-மணி

சமயத்தில் ஜெனரல் வூட்கேட்டு வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கும்போதே ஐயோ! இடது கண்ணிற்குமேலே இவருக்கு ஒரு குண்டடிபட்டதும் "நான் அடிப் பட்டுவிட்டேன்" எனக்கூவி கீழே விழுந்தனர். உடனே தூக்கியெடுத்து கூடாரத்திற்குக் கொண்டு போகும்போது வேதனைபொறுக்காதவராய் "என்னை விட்டுவிடுங்கள்; என்னை விட்டுவிடுங்கள்" என அலறினர். புகையிலும் நெருப்பிலும், ஆபத்துகளிலுமாய் ஸர்ஜன்களும், உதவி மெடிக்கலுத்தியோகஸ்தர்களுங்கூட ஏராளமாக காயமடைந்து கிடந்தவர்களைத்தூக்கித் தூக்கிச் சென்றனர். பிரிட்டிஷ் வீரர்கள் எதிரிகள்பக்கம் முகத்தைக்கூட திருப்பக் கூடாதபடியான அவ்வளவு அக்கினி அப்போது வருஷிக்கப்பட்டது. அவர்கள் வருஷித்த பாம்பாம் என்னும் பீரங்கியினல் நேர்ந்த சேதம் கொஞ்சநஞ்சமல்ல.

இந்த "பாம்-பாம்" பீரங்கியானது முக்கால் டன் நிறையுள்ளது. ஒரு பவுண் குண்டு வெடியாக்கின ஒரு நிமிஷத்தில் 300-குண்டு வெடிகள் தானேசுடும். எதிரில் பீரங்கியின் குழாய் முழுதும் தண்ணீரிலேயே யிருக்கும்படியாக எப்போதும் அதற்கென்று தண்ணீர் நிரப்பியிருக்கும் பீப்பாய் போன்றது அதின்பேரிலிருக்கிறது. இதனல் எவ்வளவு சுட்டாலும் பீரங்கி சூடேறுகிறதேயில்லை. அதன் பின்புறத்திலிருக்கும் யந்திரங்கள் செய்யும்படியான வேலையால், தானே சுடுவதும் மறுபடி தானே குண்டுகளை நிரப்பிக்கொள்ளுகிறதுமாயிருக்கின்றன. இதின் காட்டிரிஜ்களோ, சாதாரண துப்பாக்கி காட்டிரிஜுக்குங் கொஞ்சம்பெரிதாக 6 அங்குலம் நீளமுள்ளதாக விருக்கிறது. இதனுள் ஈயகுண்டுகளுக்கு பதிலாக இரும்பு வெடி குண்டுகள் மருந்து வகைகளுடன் நிரப்பப்பட்டிருக்கிறது. இக்குண்டு வெளிப்பட்டு எதிலாவது மோதுமாகில் உடனே வெடித்து 10-முதல் 20-துண்டுகள் சரமாரியாகப் பறக்கும். எதிரிகளானவர் இருக்கும்படியான ஸ்தானத்தில் நிமிஷத்திற்கு 300 குண்டுகளாக வந்து விழுந்து அந்த ஒரு நிமிஷத்தில் ஒன்றுக்குப் பத்தாக அந்த 300 குண்டுகளும் வெடித்து 3000-துண்டுகள் பறக்குமாகில் என்ன ஒரு பரிதாபமும் பயங்கரமுமானதாயிருக்கும்! பெரும் பெரும் பீரங்கிகளாவது குண்டு வெடிப்பதில் அதிகமான சேதத்தை விளைவிக்காது. ஆனல் இந்த பாம்-பாம் பீரங்கியோ சிறியதாயினும் இது செய்யும் சேதம் அபரிமிதமா

னது. இப்பீரங்கியானது மூவாயிரம் கெஜத்திலிருந்துமாத்திரம் ஒரு படையின்பேரில் சுடப்படுமானல் க்ஷண நேரத்தில் அப்படை முழுதும் சங்காரமாகிவிடக்கூடும். இப்பேர்பட்ட பீரங்கிகளையெல்லாம் போயர்கள் உபயோகிக்கிறதினுல்தான் நம்ம பிரிட்டிஷாரின் ஜெனரல்கள் சண்டையில் "அக்கினிமாரி" பொழிகிறதென்கிருர்கள். இப்பவும் இம்மாதிரியான பீரங்கிகள் நம் பிரிட்டிஷாருக்கும் சமீப காலத்தில்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான கொடிய சண்டை அதற்குமுந்தி அங்கு நடந்ததேயில்லை. இச்சண்டையில் யுத்ததந்திரமும் சமர்த்துமாய் போர்புரிந்த போயர்களை நடத்தியவர் ஜெனரல் போத்தா என்பவர்.

இந்தக் கொடிய சண்டையில் ஈடுகொடுக்க முடியாமல் பிரிட்டிஷார் பின்னடைந்து விட்டதோடு ஜென்ரல் புல்லருக்கு இச்சங்கதி எட்டியவுடனே அவர் ஒவென்றலறி அழுது உடனே ஜெனரல் வாரனுடைய காம்புக்குச் சென்று மறுபடி ஸ்பாய்ன்காப்பை எதிர்ப்பது பிரயோஜனமில்லை யென்றுன்னி டுகிலாவிற்கு தென்முகமாய் வந்துவிட உத்தரவளித்துவிட்டார். இதில் மொத்த சேதம் 1600 பேர். இதில் கொல்லப்பட்ட ஆபீஸர்களில் மேஜர் ஒருவர், காப்டன்கள் 7-பேர். லெப்டினென்டுகள் 13. காயமடைந்தவர்களில் ஜெனரல் வூட்கேட்டுடன் கர்னல் ஒருவர், மேஜர் 3-பேர், காப்டன்கள் 6-பேர். லெப்டினென்டுகள் 10-பேர். காணுமல் போனவர்களில் மேஜர் ஒருவர், காப்டென்கள் 3-பேர், லெப்டினென்டுகள் இருவர். இதோடு மற்றொரு குன்றிலும் போயர்களால் பின்னடையச் செய்யப்பட்டுவிட்ட ஜெனரல் லிட்டில்டனுடைய சேனையில் ஆபீஸரில் 6-பேர் கொல்லப்பட்டும், 12-பேர் காயமடைந்தும், வீரரில் 18-பேர் கொல்லப்பட்டும், 142-பேர் காயமுமடைந்தனர். இம்மாதிரியான கொடிய சேதத்தோடு லேடிஸ்மித்தை விடுவிக்க பிரயாசித்த 2-ம் முறையும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. பிரிட்டிஷ் வீரர்கள் இவ்வளவான கஷ்டத்தையனுபவித்தும் யாதும் முறையிடவேயில்லை. மிகுந்த சமர்த்தாகவே போர்புரிந்தனர். போர்களத்தில் குண்டடியினுல் வலது பக்கத்து தாடையும் வலது கண்ணும் போய்விட்டுக்கிடந்த ஒரு வீரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்ததும் அவன், தான் எழுதுவதற்கு சை

கை காட்ட, அப்படியே பென்சலும் காகிதமும் அவனுக்குக் கொடுக்கப்பட, அதில் "நாம் ஜெயத்தைப் பெற்ரூமா" என எழுதிக் கேட்டனன். அருகிலிருந்தவர்கள் ஒருவராவது அதற்கு மறுமொழி எழுதி உண்மையை அவனுக்குத் தெரிவிக்க மனமெழாமல் போனது. இப்படியாக வீரர்கள் தங்களுக்கு ஜெயத்தைக்கோரி உயிரைக்கொடுக்கத் துணிந்து போர் பொருதினர்.

ஜெனரல் புல்லரும் இக்கோரணியைச் சகிக்காது (The Bloodiest War) இரத்தக்களரி இரணக்களரியான சண்டை என்று கூறினர்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், இச்சண்டையின் விசேஷங்களைக் கண்டெழுத யுத்தகளத்திற்குச் சென்றிருக்கும் பத்திரிகை நிருபர்கள், போயர்களின் சண்டைத் திறமை, அவர்கள் யுத்த தந்திரம், அவர்கள் தன்மை முதலியவைகளை அடியில் வருமாறு பத்திரிகைகளில் பிரசுரித்தனர்கள். அவைகளாவன:—

ஸ்கிரிப்னர்ஸ் மாகஸைன் என்னும் பத்திரிகையில் ஒருகடிதர் பிரசுரித்திருந்ததாவது:—

"போயர் சோல்ஜர்கள் தம் நிலைமையும் வேளையும் செவ்வையாய்த்தெரிந்து கொண்டிருக்கிரூர்கள். ஒரு போயர் தனக்கெதிரில் வந்துகொண்டிருக்கிற படையின் பேரில் நேராக துப்பாக்கியை சுடுவதில்லை. வெகு பசுந்தாக வலம் இடமாகச் சுடுவான். இப்படி செய்வதினுல் முன்னுக்கு ஏறிவரும் படைக்குத், தான் மறைவாகவேயிருப்பான். டுகிலா நதியண்டை நடந்த பிரிட்டிஷ் சைனியத்தின் எதிர்ப்பொன்றில் ஷார்ப்னெல் லிட்டைட் என்னும்வெடிமருந்துகள் நாலாபக்கத்திலும் பொசிக்கிக்கொண்டிருந்தும் போயர்சோல்ஜர் ஒருவனுவது கொஞ்சமேனும் அஞ்சினனில்லை. இடதுபக்கமாக சாய்ந்துபடுத்துக்கொண்டும் தனது மாஜர்துப்பாக்கியை நேராக வைத்துக்கொண்டுந்தானிருந்தான். அவனவனுடைய நரைத்தலைமேல் வெய்யிலடித்துக் கொண்டிருந்தது. அவன் தொப்பியோ வென்ருல் பத்தடி தூரத்திற் கப்பாலுள்ள புதரில் ஓர் கொடியில் காற்றிலசைந்து கொண்டிருந்தது. எதிரியை சமீபித்து வரச்செய்வதற்கே தொப்பியை இவ்விதமாகவைப்பது. துப்பாக்கியை அவன் கையில்வைத்திருந்தும் சுடுவதில்லை. பிரிட்டிஷ் படை முன்னூறுகஜ தூரத்தில் நெருங்கிவந்து கொண்டிருக்க, இப்பொழுதுதான் போயரின் துப்பாக்கியைப் பார்க்கவேணும், அது யாரையோ பார்த்த வண்ணமாக விருக்கிறது. உடனே போயர் ஸோல்ஜரின் வெயிலிலடிக்கப்பட்ட கன்னமானது துப்பாக்கியைச்சாருகிறது. சார்ந்ததுந்தான் தாமதம், அந்நேரம் சைனியத்திற்கு உத்தரவுகொடுத்துக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ்ஆபீசர் தொடுக்கென்றுசுருண்டு விழுகிருன். ஆபீஸரில்லாமல்

ரிஜிமெண்ட் ஒழுங்காக நடத்தப்படமாட்டாதென்றும் ஒரு ஆபீசர் 20 சோள் ஜருக்குச் சமமென்றும் அவனுக்குத் தெரியும். இங்கிலீஷ் ஆபீஸர்கள் சண்டையின் போது தங்களின் ஹோதாவுக்குரிய சின்னங்களை யெல்லாம் மாறிக்கொண்டிருந்தபோதிலும் வாயால் உத்திரவுகள் செய்வதைவிட சைகைகளும் சில செய்யவேண்டியிருப்பதால் அவர்களை இன்னாரென்று போயர் தெரிந்துகொள்ளுகிறான். அவ்வித அதிகாரியை அமுக்கும்வரையில் போயர் அடங்கி ஒளிந்திருக்கிறான். அகப்பட்டதும் தன் துப்பாக்கியை நேராகப் பிடித்துக்கொண்டு அந்த ஆபீசரும் சுடக்கூடியதாக எதிர்முகப்பட இரைவாகப் பண்ணி பிறகு பொட்டென்றடித்துச் சுட்டு வீழ்த்துகிறான். மிரண்ட மானையும் திருட்டுத்தனமான புலியையும் எவ்வித தந்திரமாக வேட்டையாட வேண்டுமோ அவ்வித தந்திரத்தை சண்டையில் போயர் அனுசரிக்கிறான். மேலும் தன் துப்பாக்கியின் குணபேதங்களையும் அதை சமயோசிதமாக உபயோகப்படுத்தும் விதமும் செவ்வையாய் அறிந்திருக்கிறான். ஒவ்வொரு போயனும் ஒரு வெடியையாவது வீணாக்குவதில்லை. அதாவது; அடிபடுமென்று தெரிந்தாலொழிய அவன் சுடுவதில்லை. இவ்வித சாமர்த்தியத்தை கொலென்ஸோவில் நடந்த முதல்யுத்தத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்விடத்தில் இங்கிலீஷ் சைனியம் மூன்றுகஜதூரம் கிட்டின வரையிலும் எதிராளிகள் இருப்பதைக் கண்டுபிடிக்கவே கூடாதிருந்து திடீரெனக்கிளம்பிய துப்பாக்கி வெடிகள் 100 கணக்கான இங்கிலீஷாரை ஹதம்செய்துவிட்டன. பிரிட்டிஷார் பீரங்கிகளை விட்டுவிட்டுப் பின்வாங்கியபோது போயர்கள் சுடுவதை முற்றும் நிறுத்தியேவிட்டார்கள். மேற்படி பீரங்கிகளைக் கொண்டுவரும்படி யாரோ உத்திரவுசெய்ய எக்ஸ்ட்ரா குதிரைப்பட்டாளத்தார் சென்றபோது அந்த தைரியமான செய்கையை போயர்கள் வெடிகளைக்கிளப்பித் தடுத்தது வெகு பயங்கரமாகவிருந்தது. இதையெல்லாம் அந்த பீரங்கிகளுக்கு நேரெதிரில் ஓர் பிரம்மாண்டமான பாரை மறைவிலிருந்து பீல்ட் கிளாஸ் என்னும் தூரதிர்ஷ்டிக் கருவியால் இங்கிலீஷாரின் செய்கையை ஜெனரல் போத்தா பார்த்துக்கொண்டிருந்தார். ஆறு குதிரைகளை ஒன்றாய்ப் புணைத்து மூன்று ஓட்டுகிறவர்களால் நடத்தப்பட்ட கூட்டம் ஷை பீரங்கிகளில் மாட்டிக்கொண்டுவர பிரமாண்டமான கொக்கியுடன் புறப்பட்டது. இந்த குதிரைக்கூட்டம் முழு வேகத்துடன் வந்தன. அச்சமயத்தில் போயர்கள் மறைவில் பதிவிருக்க, ஷை குதிரைகள் கிட்டிக்கிட்டி வரவும்; அப்பொழுதும் "சுடாதேயுங்கள்; இன்னும் நெருங்கிவரட்டும்; பொறுங்கள்; ஜாக்கிரதை; இதற்குள் வேண்டாம்; ஆம் இப்பொழுது ஆகட்டும்" என்று போத்தாவின் உரத்த குரல் கூறிற்று. உடனே டக் டக் என்று துப்பாக்கி காதுகளின் சப்தம் கேட்டு மனிதர்களும் குதிரைகளுமாக உருண்டு புரண்டு வெறிகெண்ட குதிரைகளின் கால்களின் கீழ் மிதியுண்டும் நசுங்கியும் இங்கிலீஷ் படைகள் மாண்டதோடு அ

னேகம் குதிரைகளும் மாண்டன. இவ்விதமாக பீரங்கிகளைக் கொண்டுவர அனுப்பப்பட்டதில் நூறு குதிரைகளும் 50 மனிதர்களும் மாண்டார்கள். இந்த யுத்தத்தில் 1100-பேர் சேதப்பட்டதோடு 11 பீரங்கிகளும் இழக்க நேரிட்டது. என்று ஜெனரல் புல்லரே சொல்லுகிறார். போயர் கட்டுதிட்டத்தில் குறைந்தவனாக இருந்தபோதிலும் அவனுடைய தேகவலிவானது மற்ற குறைவுகளையெல்லாம் சரிப்படுத்திக்கொள்ளுகிறது" என்பதே.

"போயர்சண்டை பிரிட்டிஷ் யுத்தம்" என்னும் தலைப்பின்கீழ் ஜெர்மானியஜெனரலாகிய லான்ஷ்மீலிங்க்என்பவர் எழுதுகிறதாவது.:—"திரான்ஸ்வால் நாட்டின் யுத்தத்திலே ஆங்கிலேயரில் அனேகர் மாண்ட செய்தி தெரியவரவே "அது எப்படி சம்பவித்திருக்கும்" என்று என்னைப் பலர் கேட்டார்கள். மேலும் சண்டையில் கைதேர்ந்தவர்களான துருப்புகளையுடைய நமக்கு இவ்வித சம்பவம் நேர்ந்திராதேயென்று அனேக கிழ சோல்ஜர்களும் சொல்லிக்கொண்டார்கள். சில தினங்களுக்கு முன் ஜெர்மானிய தென் ஆப்பிரிக்காவில் கமாண்டரா யிருக்கும் மேஜர் பிராகாய்ஸ் என்பவர் பிரசுரித்திருக்கிற ஓர் புத்தகத்தை வாசித்ததுவரையில் உண்மையிலே அவ்விதமாகவேதான் எண்ணியிருந்தேன். அப்புத்தகத்தில் போயர்கள் சண்டைசெய்யும் வழிவகையும் அதை காப்பிரிகளும் ஹோட்டென்டோஸ் ஜாதியார்களும் அனுசரித்திருப்பதுமான விவரங்களெல்லா மிருக்கின்றன. இவ்வித சண்டைசெய்யும் உபாயத்தைத் தெரிந்திருந்தாலன்றி போயர்களை எதிர்ப்பது அசாத்தியமென அதுமுதல் நான் தெரிந்துகொண்டேன். எதிரிகள் முன்னெதிர்த்து வரும்போது அவர்களுக்கு உட்புக இடந்தருவதும், நெருங்கிச் சுடுவதும் அதன்பிறகு அவர்கள் பதிலுக்கு பதிலாய் சுடும்வரை அவர்களின் பிரதானக் கூட்டத்தை சுடுவதுமே போயர்களின் தந்திரம். இவர்கள் ஒரு இடத்தைத் திடீரென விட்டுப் பெயர்வதாயிருந்தால் வெகு சாமர்த்தியமாக ஜித்து செய்கிறார்கள். அதினால் இவர்கள் அவ்விடத்திலிருந்து பெயர்ந்து போய்விட்ட பிறகுதான் எதிரிகளுக்கு சங்கதி புலப்படும். ஒன்றியிருந்து பிடிப்பதற்கு இடம் தயார் செய்வதிலும், சமயத்துக்குத் தக்கபடி தங்களைக் காத்துக்கொள்ளவும் மேல் விழுந்து தாக்கவும் எல்லா மர்மங்களையும் தெரிந்தவர்கள். பைரங்கமான கோப்ஜியில் ஒருக்காலும் ஒருபோயராவது இருக்கமாட்டான். ஆனால், தான் இருப்பது தெரியாதபடிக்கு அதற்கடுத்தாப்போ விருப்பான். இவர்கள் ஆட்களைப் பிடிக்கச்செய்யும் பள்ளங்கள் 8 பேரைக் கொள்ளக் கூடியதாகவும் பார்வைக்கு சுவரைப்போல் ஒரு மனிதனில் பேர்பாதி உயரமாகவு மிருக்கின்றன. ஒரு தொப்பியைக் கண்டமாத்திரத்தில் துப்பாக்கி ஏந்தியவன் அங்கு இருக்கிறானென்று சொல்லமுடியாது. மேற்சொன்ன பள்ளங்கள் எதிரி செல்லும்

இட்ர்வழிகளில் ஏகாந்தமான இடங்களில் அவர்கள் கவனத்தை வசீகரிக்கத் தக்கதாக அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலுமோ, போயர்கள் அவ்விடத்திலில்லை. அங்கே போக்குக்காட்டி வேறே இடத்தில் இருக்கிறார்கள். இவ்வித அனுகூலங்களோடு போயர்களிருப்பதால்தான் இங்கிலீஷ்காரர் இவர்களோடு செய்யும் பிரதம சண்டையில் அபஜயமடைகிறார்கள்" என்பதே.

---

இன்னொரு கடிதர் எழுதித் தெரிவித்ததாவது:—

"போயர்கள் திடகாத்திரப் பிறவிகள், தைரியமும் பலமுமுள்ளவர்கள். ஆனால் சாஸ்திர சம்மதமான தேகப்பயிற்சி இன்னின்னதென்று அவர்களறியவே மாட்டார்கள். தொத்தியேறுவதில் கை தேர்ந்தவர்கள். முரட்டுவிதமாகக் குதிரை சவாரி செய்வதில் அதிக சமர்த்தர், குறிவைத்து சுடுவதில் ஆச்சரியப் பிறவிகள். பெரும்பாரங்களை சுமப்பது அவர்களுக்கு வெகு லேசானகாரியம். பெரும் பிரவாகங்களைத்தாண்டிச்செல்வதில் பேர்பெற்றவர்கள். இன்னும்சொல்லப்போனால் மணல்வெளிகளில் சகஜமான பலத்தோடு சண்டைசெய்வதென்றால் அவர்களை ஜெயிப்பது அசாத்தியம். ஆனால் சாஸ்திர சம்பந்தமாக சண்டை கற்றவர்களிடத்தில் போராடுவதில் அவர்கள் முற்றும் தோற்பார்கள். பலனைப் பெறவேண்டிய சரீரப் பயிற்சிக்கு சுத்த ஆகாயம் அத்தியாவசியம். இவ்வித சுத்தமான காற்று ஏராளமாய் இவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாயினும், அதற்கு முற்றும் விரோதமாக இறுக்கமானதும் அடைப்புள்ளதுமான வீடுகளில் வாசஞ் செய்கிறார்கள். அவ்வீடுகளுக்கு சாளரங்கள் கிடையா. அவ்வீட்டின் முகப்புதான் காற்றுக்கு ஆதாரமாக இருக்கிறது. இரவுகளில் ஒவ்வொரு திறப்பையும் பத்திரமாய் சாற்றிக்கொண்டு தூங்குகிறார்கள். போயர்கள் விடாமற் புகை சுருட்டு குடிக்கிறார்கள். மேலும் பெருந்திண்டிக்காரரும் முழு சோம்பேறிகளுமாக விருக்கிறார்கள். கட்டாயமாய் தேவையாயிருப்பதைவிட அதிக தேகப்பயிற்சி செய்வதேயில்லை. அதின் பிரதிபலமாக மிக்க ஸ்தூல தேகிகளாகவாவது, ஒஞ்ச நடையாகவாவது இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் ஓர் சிறந்த குணமிருக்கிற தென்னவென்றால் அவர்கள் மதுபானம் செய்கிறதே கிடையாது. அவர்களுக்கு லாகிரி வஸ்துக்களின்னதென்றே தெரியாது. முக்கியமாய் உறப்பான காப்பித் தண்ணீர் பானத்தின் பேரில் அவர்களுக்கு இச்சை அதிகம். அவர்கள் குதிரை சவாரி செய்தல் தொத்தியேறுதலாகிய தங்கள் சமர்த்தில் அதிக பலனையும் திடகாத்திரத்தையும் பெறுகிறார்கள். அவர்கள் மிக்க உயரமாகவும் கை கால்கள் மூட்டுப்பெருத்து மிருக்கிறார்கள். கோப்ஜீஸ் என்னும் உன்னதமான சிகரங்களைத் தொத்தி ஏறுவது உண்மையிலே நல்லதாகவிருக்கிறது, ஏனென்றால் அதினால் அவர்களினது அவயவங்கள் விர்த்தியாகின்றன. அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை வெகு சுல

பமாக கையாடுகிறதினாலும் சுடுகிறதினாலும் சாமர்த்தியமுள்ளவர்களாகவிருக்கிறார்கள். குதிரை ஏறி வேட்டை மிருகங்களைத் துரத்திச சுடுவதில் மிக்க சாமர்த்தியமுள்ளவர்கள். இப்படி குறி தப்பாமல் சுடுவது அவர்களுடைய நெடுங்காலப் பழக்கத்தினால் வந்ததேயல்லது விசேஷித்த ஒரு சாமர்த்தியத்தினாலல்ல. குதிரை சவாரியும் அப்படியே தான். போயர் ஜாதியானைப் போன்ற சோம்பேறி எங்கும் கிடையாது. வேலை செய்வதென்றால் அவனுக்கு விஷத்தைத் தின்பது போல்தான். பணம் அகப்படுகிறதாயினுங்கூட வேலை செய்யான். வேலைகளை சுதேசிகள்தலைமீதே போடுவான். அப்படிக்கில்லாவிட்டால் தன் ஸ்திரீ ஜனங்களை வேலை செய்யும்படி கட்டாயப் படுத்துவான். இந்த போயர்கள் சரீர சாஸ்திர சம்பந்தமாக பழகி வந்தால் தேகக் கட்டின் உண்மையான பலனைத் தெரிந்துகொள்வார்கள்.'' என்பதே.

---

லண்டனில் பிரசுரமாகும் "டேய்லி நியூஸ்'' பத்திரிகையின் கடிதரும் போயர்களால் பிடிக்கப்பட்டு போயர்களின் ஊருக்குள் கொண்டுபோகப்பட்ட ஒருவர் அங்கு தமது அனுபவத்தில் கண்ட சவிஸ்தாரங்களை பின்வருமாறு எழுதுகிறார்:— "காயமடைந்தவர்களுக்கென்று முஸ்திப்பு செய்யப்பட்டிருந்தது. வழியில் சந்தித்த ஒவ்வொரு குடியானவர்கள் வீட்டிலிருந்தும், ஆண், பெண் சிறுவர்கள் எல்லோரும் எங்களை ஓடிவந்து பார்த்து, புருஷாள் எங்களுக்குக் குளிர்ந்த பானங்களைக்கொடுத்து வண்டியில் சுகமானஇடத்தில் காயமடைந்தவர்களைத் தூக்கி தூக்கிக் கிடத்தினர். ஸ்திரீகள் எங்கள்காயங்களை கழுவி துணிகளைச்சுற்றி இனிப்பான சிற்றுண்டிகளைக்கொடுத்து தங்களால்கூடிய சிகிச்சைகள் செய்தனர். சிறு பிள்ளைகளோ எங்கள் மீது பட்டிருந்த இரத்தக் கரைகளைப் பார்த்துபார்த்து ஓலமிட்டழுதனர். அவர்கள் ஒருவரிடமிருந்தாவது இகழ்ச்சியான மொழிகளாவது வீம்பான வார்த்தையாவது புறப்படவில்லை. மிகுந்த அன்புடன் பராமரித்தனர். பிரிட்டிஷ் இராச்சியத்திலுள்ள யாதொரு புருஷனாவது ஸ்திரீயாவது தனது மகனோ புருஷனோ, அல்லது உறவின் முறையாரோ காயமடைந்து போயர்களிட மிருக்கிறார்களென தெரிந்தவுடன், அவர்களுடைய சுகத்தைப்பற்றியாவது பராமரிப்பைப் பற்றியாவது யாதொரு கவலையும் படவேண்டியதில்லை. போயர்கள் பிரிட்டிஷாரின் காயமடைந்தவர்களை பராமரிக்கிற தில்லையென சொல்லத்துணிவது அது வீண் அபத்தான பழிக்கூற்றேயன்றி மற்றப்படியல்ல. கடைசியாகசொல்லப்போனால் போயர்கள் பிரிட்டிஷாரின் காயமடைந்தவர்களை பராமரிக்கிறதுபோல பிரிட்டிஷார் தங்கள் மனிதரைக்கூட பராமரிக்கிறதில்லை. இதை நானே என் கண்ணால் கண்டதை தெரிவிக்கிறேன். இதைப்பற்றி சந்தேகிக்கவேண்டியதில்லை. பிறகு அங்கிருந்து ஸ்பிரிங்பாண்டீன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்த கைதேர்ந்த மெடிக்கல் உத்தியோகஸ்தர் நர்ஸுகளால் மிகுந்த

அன்பாய் உபசரிக்கப்பட்டு இரண்டொருநாள் தாமதித்து புளோயம்பாண்டி ன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன். இந்த ஆஸ்பத்திரியிலிருந்துதான் இக்கடிதம் எழுதுகிறேன். இங்கு என்னுடைய காயங்கள் ஆறும்வரை நிறுத் தப்பட்டிருந்தேன். இங்கிருந்த நம் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் ஒவ்வொருவரை யும் தனித்தனியாய் அவர்கள் மிகுந்த நேர்த்தியாக சம்ரக்ஷணை செய்யப்பட் டதாக கூறினர். இது நிற்க போயர் ஒருவன் யுத்தகளத்தில் நிற்கும்போது அவன் ஒரு பிச்சைக்காரனைப்போலக் காணப்படுகிறான். அவனுக்கு இராணு வ உடுப்புங்கிடையாது, நம் வீரரைப்போல சண்டைபோடும் சொகுசான ஒழுங்கு ரீதியும் கிடையாது. அவன் யுத்தமுகத்தில் நேருக்கு நேராய் நின்று போர்தொடுத்த நேரத்தில் நம்முடைய வீரன் ஒரு க்ஷணப்பொழுதில் அவ னை யமலோகம் அனுப்பிவிடுவான். ஆனால் அவன் செய்குன்றத்திலிருந்து சண்டை செய்வானானல் அவனைப்போலொத்த கோமாளியும் கிடையாது; அவனைச்சுட யாராலும்முடியாது. அவன் தன் எதிரியை சுட்டவுடனே தான் சுட்டுவிட்டதற்காக மனம் வருந்துகிறான். யாதொரு வன்மத்தையும் காட்டு கிறதில்லை. சண்டையில் வீரபராக்கிரமமாய் போர்புரிகிறானாலும் தன் எதிரி யைச் சுட்டுவிட்டவுடனே அவன் உள்ளங் குமுங்கி அதற்காக துக்கிக்கிறான். எனவே அவன் மேல்நோக்கம் தேங்காய் ஓட்டைப்போல் அசுசியும் சுரசுரப் புமாயிருந்தாலும் அவன் உள்ளமோ ஓட்டினுள்ளிருக்கும் தேங்காயைப்போல வெண்மை பொருந்திய பரிசுத்தம் நிறைந்ததா யிருக்கிறது" என எழுதி தெரிவிக்கிறார்.

இன்னும் இவைபோல்வன பல கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டிரு க்கின்றன. இப்படியே அவர்களது துர்ச்செய்கை, வஞ்சனை, சதி, இழி குணம், கன்னெஞ்ச நடத்தை முதலியவைகளைப்பற்றியும் பிரசுரிக் கப்பட்டிருக்கிறது. அவைகளை சரித்திரத் தோரணையின் இடைக்கி டையே காணலாம்.

## டுகிலாநதி - வால்கிரான்ட்ஸ் குன்றின் சண்டை.

### அபலமான யுத்தம்!

இரண்டாமுறையும் மேற்படி அபஜெயமடைந்துவிடினும் ஜெ னரல் புல்லர் மனஞ்சோராது ஸ்பாய்ன்காப்பிற்கும் பிராக்பான்டின் குன்றுகளுக்கும் கிழக்கே வழி துளைத்துக்கொண்டு ஏறக்கருதி பெப் ரவரி 5-ந் தேதி காலை பிரயாணமாயினர். இது சங்கதி தெரிந்ததும் போயர்களும் சுடத் தொடங்கினார்களெனினும் மவுன்ட் ஆலீஸ் குன்

தின்மீது வைத்திருந்த நாவல் பீரங்கிகள் ஒருபக்கம் சுட்டுக்கொண்டும் மற்றும் பீரங்கிகள் இன்னொருபக்கமாக சுட்டுக்கொண்டு மிருக்ச (தொட்டில் பாலம்) செய்பாலத்தைக்கொண்டு பிரிட்டிஷார் நதியைக் கடந்து ஸ்வார்ட் காப் குன்றுக்கடியில் வந்து சேர்ந்தனர். பிறகு லேடிஸ்மித்திற்கு நேர்வழி பிடிக்க ஏதுவாகவிருந்த வால்கிரான்ட்ஸ் குன்றுக்கு நேரே சென்று 2-மணிநேரம் போயர்களுடன் சண்டைசெய்து சனியனுல் குத்தி, முதல் முதல் செய்குன்றத்தைக் கைப்பற்றினர். உடனே போயர்கள் வெகு மும்முரமாகத் தாக்கிக்கொண்டு அருகே நெருங்கியும் பின்னடையச் செய்யப்பட்டனர். ஆகவே அன்றையதினத்துள் வால்கிரான்ட்ஸ் குன்றைப் பிடித்துவிட்டனர். மறுநாள் 6-ந்தேதி நாவல் பீரங்கிகள் மிகுந்த குறிப்பான விதமாக சுட்டுக்கொண்டிருந்ததில் ஒரு குண்டு போயர்களின் மருந்துகிடங்கில் பட்டுவிட மருந்துகிடங்கு பூமி ஆடத்தக்கவிதமாய் மிகுந்த அதிர்ச்சியுடன் வெடித்து நாசமாய்விட்டது. அன்று விடியற்காலை போயர்கள் லாங்டாம், பாம்பாம், மற்றும் பீரங்கி பிரயோகஞ் செய்ததில் ஜெனரல் புல்லரும் அவரது பரிவாரத்தாருமிருந்த இடத்திற் கருகாமையாய் விழுந்ததாயினும் சேதமொன்றுஞ் செய்யவில்லை. அன்றிரவு 9-மணிவரை போர் நடந்ததில் பிரிட்டிஷாரின் பீரங்கிகள் எதிரிகளுடைய பீரங்கிகளை உபயோகமற்றுபோகச் செய்தது. ஆயினும் போயர்கள் மிகுந்த பரபரப்பாய் மற்றும் பீரங்கிகளைக் கொண்டுவந்து ஜெனரல் புல்லர் முன்னேறக் கருதியிருந்த பாதையிலுள்ள குன்றுகளிலெல்லாம் ஸ்தாபனஞ் செய்து மறுநாள் காலையிலேயே குண்டு பிரயோகஞ் செய்யத் தொடங்கிவிட்டனர்.

போயர்கள் சுடுவது மிகு மும்முரமாகுவதை யறிந்து ஜெனரல் புல்லர் (War Balloon) ஆகாயகூண்டில் வேவுக்காரர்களை யனுப்பி போயர்கள் ஸ்தானம் மிகுந்த பந்தோபஸ்தாக விருப்பதாக அறிந்து இங்கு முன்னேறுவது கூடாதெனவும் அப்படி ஏறுவதானுல் வீணே உயிர்ச்சேதமாகுமெனவும் எண்ணி பின்னுக்கே திரும்பிவிட உத்தரவளித்துவிட்டனர். அப்படி பின்னுக்குத் திரும்பி வரும்போது போயர்கள் விடாது சுட்டுக்கொண்டே யிருந்தனர். இதில் நேர்ந்த சேதம் 216 வீரர் கொல்லப்பட்டு 2 பேர் காயமடைந்தனர். இவ்விதம் மூன்றும் முறையும் பின்னடைந்துவிட நேர்ந்தது.

# IV-அத்யாயம்.

## கிம்பர்லி மீட்சிப் பிரயத்தனம்;—லார்ட் மெத்யூன் சண்டைகள்;— உலகேங்கும் அமளி குமளி.

லேடிஸ்மித் பக்கம் ஜெனரல் புல்லர் இப்படியாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்க, கிம்பர்லி பட்டணம் அடைபட்டிருக்கின்றதை மீட்கும்பொருட்டு லெப்டினென்ட் ஜெனரல் லார்ட் மெத்யூன், துருப்புகளை நடத்திக்கொண்டு நவம்பர் மாதம் 10-ந் தேதியன்று கேப்டவுனைவிட்டுப் புறப்பட்டனர். இவர் 1845-ம் வருஷத்தில் பிறந்து அஷாண்டி யுத்தம், எகிப்திய யுத்தம் இவைகளில் கலந்துள்ளவர். 1888-ம் வருஷத்தில் தென்னாப்பிரிக்காவிற்கு டிபிடி அட்ஜுடென்ட் ஜெனரலாக நியமகம்பெற்றார். இவர் கேப்டவுனில் புறப்பட்ட அன்றே கர்னல் காப் 9-வது லான்ஸர் (ஈட்டிப் படை) படையின் 2 ஸ்குவார்டர்ன்கள், சில குதிரையேறிய காலாட்படை, பீல்ட் பத்திரி இவைகளுடன் ஆரஞ்சிநதி போரமாயுள்ள ஹோப்டவுன் பட்டணத்திற் கருகாமையாய் வேவு பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் திடீரென ஆரஞ்சி பிரீஸ்டேட்டு எல்லையிலுள்ள பெல்மாண்ட் என்ற ஊருக்குமேற்கே 3 மைலில் ஒரு பீரங்கியுடன் ஸ்தாபனஞ்செய்துகொண்டிருந்த 700-போயர்களுடன் சந்திக்க நேர்ந்து. 3-மணிநேரம் பெரும்போர் நடத்திகடைசியாக பின்னடைந்துவிட்டனர். இதில் லெப்டினென்ட் வூட்டும், லெப்டினென்ட் கர்னல் கீத்-பால்கானரும் கொல்லப்பட்டுப்போயினர். 2-பிரைவேட்டுகள் காயமடைந்தனர். லெப்டினென்ட் புரூக் எதிரிகளினுடைய ஸ்தானத்தைக்குறிப்பிட்டுக்கொண் டிருக்கும்போது இவரது குதிரை சுடப்பட்டுவிட்டது. இவர் உயிர் தப்பியது மிகுந்த ஒரு ஆச்சரியமான தெய்வச் செயலே. எப்படியெனில் இவர் தமது வீரரைவிட்டு சற்று அப்


லார்ட் மெத்யூன்.

புறஞ் சென்று குதிரையை விட்டிறங்கி எதிரிகளின் ஸ்தானத்தைக் குறிப்பிட்டுக்கொண்டிருந்தபோது திடீரென 30-போயர்கள் தோன்றி இவரைச் சுட்டனர். முதல் குண்டு இவர் குதிரையில் ஏறிக்கொண்டிருந்தபோதே இவரின் காலிற்குக் கீழே போய்விட்டது. இரண்டாவது குண்டு தலை தொப்பியில் பட்டது. மூன்றுவது குண்டு தமது குதிரைக்குப் பட்டு விழுந்தது. உடனே இவர் ஓட்டம் எடுக்கத் தொடங்கவும் போயர்களும் தங்களது குதிரைகளை விட்டுக்கொண்டே சுட்டுக்கொண்டே ஓடிவர தெய்வாதீனமாய் எதிரே கம்பியினுல் போடப்பட்ட வேலி ஒன்று எதிர்ப்படவும் அதைக்கடக்க ஏறிக்கொண்டிருக்கும்போதே குண்டுகள் இவரைச்சுற்றி நாலாப்பக்கமும் பறந்தன. ஆனுல் இவர் வேலியைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் போது போயர்களும் சரசரென வேலியண்டை வந்துவிட்டும் அவ்வேலியைத் தாண்டவாவது அறுக்கவாவது முடியாதவர்களாய் நின்றுவிட்டு, லெப்டினெனட் புருக்கின்மீது திருப்பிக்கொண்டு அவரைச் சுட்டுக்கொண்டேயிருக்க இவர் ஒரு குண்டடியும் படாதவராய் தப்பி வந்து சேர்ந்துவிட்டனர். இப்படியாக இந்தபக்கத்து முதல் சண்டையாக இது குறிக்கப்பட்டது.

## லார்ட் மெத்யூன்—பெல்மாண்ட் குன்றின் சண்டை.

### கைகலந்த கொடிய யுத்தம் !

நவம்பர்மாதம் 22-ந் தேதியன்று காலே லார்ட் மெதுயூன் 7 ஆயிரம் வீரருடன் பெல்மான்டிற்கு முன்னேறப் பிரயாணமாகி மிகக் கடினமான பாதையில் கஷ்டத்தோடு கடந்துவந்து மறுநாள் காலே பெல்மான்டிற்கு 10–மைலிலுள்ள காப்பிற்காப் குன்றில் போயர்கள் பலமான ஸ்தாபனங்கள் செய்துகொண்டிருக்கக் கண்டு எதிர்நோக்க நேர்ந்தது. இதுதான் பெல்மான்ட் யுத்தம்.

இங்கே போயர்கள் பிரிட்டிஷாரை கண்டக்ஷணமே பீரங்கி பிரயோகஞ்செய்யத்தொடங்கிவிட, எதிரிலிருந்த பிரிட்டிஷ் காலாட்படையைக் காப்பாற்ற இவர்களும் பீரங்கி பிரயோகஞ்செய்தனர். இருதரத்தாரும் இப்படி இரண்டுமணிநேரம் பீரங்கி பிரயோகங்கள் செய்து

கொண்டேயிருக்க இடையில் எதிரிலிருந்த கற்பாரைகளை ஒரு பொருட்டு செய்யாது நார்த்தம்பர்லான்ட் பியூஸிலர்ஸ் படையும், கிரானிடியர் கார்ட்ஸ் படையும் போயர்களின் முதல் அணியைத் தாக்கினர். முதல் குன்றையும் அப்படியே இரண்டாம் குன்றையும் தாண்டி சனியானுல் எதிரிகளைக்குத்திக்கொண்டே கைப்பற்றினராயினும் 3-வது குன்றில் போயர்கள் மிகுந்த உக்கிரமாகத்தாக்கி எதிர்த்து நின்றனர். இங்கு பிரிட்டிஷார்பீரங்கி துப்பாக்கி இவைகளின் குண்டினுல் அதம் பண்ணியும், போயர்கள் சளையாது, பிரிட்டிஷார் வற வற மிகக் கொடிதாக சுட்டதில் ஆபீஸரின்பின் ஆபீஸராய், வீரரின்பின் வீரராய் காய்ந்த இலைசருகு உதிர்வதுபோல்விழுந்தனர். இப்படியிருந்தும் இங்கு போயர்களின் சராமாரியான துப்பாக்கி குண்டுகளுக்கும் பயப்படாது பிரிட்டிஷ் காலாட்படை எதிரிகளை சனியனுல் குத்திக்குத்தித்தள்ளி வீரச் செயல்களைப்புரிந்தனர். இதற்குள் குதிரைப்படையும்வந்துவிட போயர்கள் பின்னடையப்பட்டு அக்குன்றும் பிடிக்கப்பட்டது. எதிரிகளின் சேதம் கணக்கிடப்படக் கூடாதாயிருந்தும் போயர்கள் வழக்கம்போல பின்னடைந்தபோது தங்களின் கொல்லப்பட்டவர்கள் காயமடைந்தவர்களி லநேகரை வாரிக்கொண்டு போய்விட்டனர். எனினும் பிரிட்டிஷார் அவர்களில் அநேகரை புதைத்ததோடு 50 சிறைகளையும் அநேக குதிரைகால்நடைகள் இவைகளையும் பிடித்தனர். கொல்லப்பட்டவர்களும் காயமடைந்து சாகுந்தருவாயி லிருந்தவர்களிலு மநேகர் கல்சந்துகளில் சிக்கிக்கிடந்தனர். பாளையத்திலிருந்த அநேகமருந்துவகைகள்சேதமாயின. பிரிட்டிஷாரின் சேதம் 220-பேர்வரை கொல்லப்பட்டு காயமடைந்தனர். இங்கு நேருக்கு நேராய் புரிந்த போரில் சேதம் ஒருவாறுயினும் போயர்கள்செய்த சதிவினைகளி லநேகர் சேதமாயினர். ஒரு போயர் வெள்ளைக் கொடியைக் காண்பிக்க அதனுல் லெப்டினென்ட் வில்லார்ட், லெப்டினென்ட் பார்டன் இவர்கள் கிட்டே அணுக, உடனே அவர்களையும் சுட்டதில் முதல் குறித்தவர் கையிலடிப்பட்டும் இரண்டாவதானவருக்கு தலையில்பட்டும் கொல்லப்பட்டனர். உடனே அவன் சிறையாகப் பிடிக்கப்பட்டனன். மற்றொருபக்கத்தில் வெள்ளைக்கொடி காண்பித்து சுட்டதில் "மார்னிங் போஸ்ட்' பத்திரிகையின் கடிதரான மிஸ்டர் நைட் என்பவர் கடுங்காயமடைந்தனர். அதோடு காயமடைந்து கிடந்த ஒரு போயருக்கு உதவி செய்ய

ப்போன ஒரு ஆபீஸரை அவன் திருப்பிக்கொண்டு சுட்டுவிட்டனன். மற்றொரு போயர் கிட்டேவந்த வாலிப ஆபீஸர் ஒருவரை தன் துப்பாக்கியால் முகத்தில் குத்திவிட தாடை யப்படியே நசுங்கிப் போய் விட்டது. இப்படியான இழி செய்கைகளை எல்லாம் போயர் செய்து விட்டனர்.

## லார்ட்மெத்யூன்—கிராஸ்பான் குன்றின் சண்டை.

### ஒரு கனத்த போர்!

இப்பால், அங்கிருந்து துரத்தப்பட்டுவிட்ட போயர்கள் கிராஸ்பான் என்னும் மற்றொரு புதிய இடத்திற்குச்சென்று ஸ்தானங்கள்கட்டி கிம்பர்லிக்கு முன்னேறுவதை தடுக்க முயற்சித்திருக்கும் சமயத்தில் 25-ந்தேதி காலை பிரிட்டிஷாரும் முன்னேறிப்போக கிராஸ்பான் சண்டைதொடங்கியது. இவ்விடத்தில் போயர்கள் வெடிகுண்டு ஒன்றின்பின் ஒன்றாய்விட்டிருக்க, பிரிட்டிஷ் காலாட்படைகள் முன்னுக்குச்சென்று 9-மணி சமயமானதும் கனத்த ஒரு போர்மூண்டது. போயர்கள் விடும் குண்டுகளுக்கு இவர்களும் எதிர்குண்டு விட்டுக்கொண்டே கிட்டே அணுக, போயர்கள் சடக்கென கொஞ்சம் பின்தங்கவும் உடனே லான்ஸர்படை அவர்களைத் துரத்தத்தொடங்கியது. அதனால் போயர்கள் வாயுவேகமாய் அடுத்த குன்றுக் கோடி அங்கிருந்த போயர்களின் அபரிமிதமான சேனையுடன் கலந்துகொள்ள, துரத்திவந்த லான்ஸர் படையின்மீது அவர்கள்விட்ட துப்பாக்கிக்குண்டடியினால் முன்னேற முடியாதவர்களாய் இவர்கள் பின்னடைய நேரிட்டது. உடனே இங்கு கப்பல்படையார் வந்துசேர, சேதமதிகமாயினும் மிகுந்த கொடிய போர்புரிந்தனர். இதிலே கடைசியாக போயர்கள் பின்னடைந்துவிட்டார்களெனினும் லான்ஸர்ஸ் படையின் குதிரைகள் மிகுந்த ஆயாசமடைந்துபோனதின்பேரில் பின்தொடர முடியாமல்போய்விட்டது. இங்கு போயர்களின்நஷ்டம் தெரியவில்லை. ஆயினும் பிரிட்டிஷார் 20 போயர் பிணங்களை புதைத்தும் 50-பேர் காயமடைந்து கிடக்கக்கண்டும் பிடித்தனர். பிரிட்டிஷாருக்கு சேதம் சுமார் 200-பேரிருக்கலாம். “பவர்புல்’ ஸ்டீமரின் கமான்டர் எதல்ஸ்டன், “மானர்க்” ஸ்டீமரின்

காப்டன் ஸீனர், கம்பல்படையின் மேஜர் புளம்பி, "டோரேஸ்" ஸ்டீமரின் மிட்ஷிப்மானான ஹட்டர்ட் இவர்களெல்லோரும் விழுந்துபோயினர். இங்கு கப்பல்படையார் செய்த பிரபலமான போர் யாவராலும் மெச்சப்படத்தக்கதா யிருந்தது.

## லார்ட் மெத்யூன்—மாடர்நதிச் சண்டை.

### அகோரமான யுத்தம்!

கிராஸ்பான் சண்டையின்மும்முரமிப்படியானால் அடுத்த 28-ந் தேதி நடந்த மாட்டர் நதிச்சண்டையோ மிகுகொடிய பயங்கரப்படத் தக்க சண்டை. அன்று காலை 4½ மணிக்கு ஸ்காட்ஸ் கார்ட்ஸ், கோல்ட்ஸ்டிரீகம், கிரீனடியர்ஸ், ஆர்கில், ஸதர்லான்ட் ஆகிய படைகள் வலதுபக்கமாகவும், யார்க்ஷைர் லைட் இன்பன்டிரி, நார்த்தம்பர்லான்ட், நார்த்தாம்டன், லாயல்லான்காஷைர், மவுன்டட் இன்பன்டிரி 9-வது லான்ஸர்ஸ் ஆகிய படைகளெல்லாம் இடது பக்கமாகவும், பீல்ட்பத்திரி நாவல் பீரங்கி இவைகளுடன் முன்னேறத் துவங்கினர். இவர் 4 மைல் நடந்து வந்ததும் எதிரே மாடர் நதியானது குறிக்கிட்டு விட்டது. இந்த நதி 30-கெஜம் தான் அகலமாயினும் ஆழம் மிகுதியானது. போயர்கள் இங்கு 2 மைலுக்கந்தண்டையிலுள்ள குன்றுகளில் பெரும் பீரங்கிகளை ஸ்தாபித்துக்கொண்டும் கரையோரமாய் வடக்கேயும் தெற்கேயும் மிகுபலமாக அரண் செய்து பதுங்கிக்கொண்டுமிருந்தனர். இவர்களிதை யறியாமல் முதல் இங்கு கொஞ்சம் போயர்கள் தானிருப்பதாக உன்னி அங்கு காலை போஜனம் சாப்பிட எண்ணியிருந்தனர். பிரிட்டிஷாரின் ஒவ்வொருவீரனுக்கும் 150 தோட்டா கொடுக்கப்பட் டிருந்ததுடன் மத்தியான வேளையிலும் மருந்து தோட்டா வகைகள் வந்துகொண்டே யிருந்தன. காலை போஜனம் உண்ணக் கருதி வந்துகொண் டிருக்கும்போது காலை 7-மணி சமயத்தில் கொஞ்சம் போல போயர்களாக காணப்பட்டவர்கள் 8000 பேராக விர்த்திகரித்துக் கொண்டு குண்டு பிரயோகத்தைக்கிளப்பினார்கள். உடனே பிரிட்டிஷ் படைகள் யுத்தத்திற்கு எதிர்த்து நிற்க பரபரவென அணிவகுக்கப்பட்டு பரவி நிற்கவும், சண்டையும்

துவங்கியது. இருபக்கத்தாரும் விடாகுண்டிகளாய் எதிர்த்ததில் துப்பாக்கி குண்டு பிரயோகம் ஒருபக்கமும் பீரங்கி குண்டு பிரயோகம் ஒருபக்கமுமாய் ஒழிவின்றி பொழியப்பட்டன. இது வெகு மும்முரமாகவும் சண்டை வெகு நீடித்ததாயு மிருந்தது. காலை ஏழு மணிக்கு துவங்கிய பீரங்கிசண்டையானது 10 மணிக்கெல்லாம் துப்பாக்கிசண்டையாகமாறி சாயந்தரம் 6½ மணிக்குத்தான் முடிந்ததென்றால் சண்டையின் மும்முரத்தை என்னென்று தான் சொல்வது! போயர்களின் துப்பாக்கி குண்டுகளோ நிமிஷ நிமிஷத்திற்கு கணக்குவழக்கின்றி வந்து விழுந்ததில் காயமடைந்த பிரிட்டிஷார் கீழே விழுந்ததும் இந்தண்டை அந்தண்டைகூட அசையாது படுத்துக்கிடந்தனர். இடைக்கிடையே பிரிட்டிஷார் ஆற்றைத்தாண்ட அணுகியும் எதிரிகள் விட்ட குண்டுகள் அக்கினிமழையைப்போல வருஷித்ததால் முன்னேறக்கூடாமல் போய்விட்டது. ஆயினும் யார்க்ஷைர், ஐலன்டர் நார்த்தம்பர்லான்ட், பியூஸிலர்ஸ்படைகள் மிகுந்த கஷ்டத்தோடு நதியைக் கடந்து எதிரிகளுடைய மேற்குப்பக்கத்து அணியை மோதியடிக்கவும், மற்றொருபக்கம் பிரிட்டிஷ் பீரங்கிபடையானது குன்றுகள்தோறும் விடாது குண்டு வருஷித்ததின் பேரிலும் கடைசியாக இரவில் அக்குன்று பிடிக்கப்பட்டுவிட்டது. இப்படியாக அன்றெல்லாம் வெய்யிலிலும் தாகத்திற்கு தண்ணீரின்றியும் பசியும் களைப்புமாய் போயர் குண்டுகளின் நெருப்பால் வெந்துதணிந்து கடுஞ்சேதத்தை யடைந்தனரெனினும் எப்படியும் ஜெயத்தையே பெற்றனர். இதில் சேதம் சுமார் 475-பேர். கர்னல் நார்த்காட் கர்னல் ஸ்டாப்பர்ட் காப்டன் எர்ல், லெப்டினென்ட் லாங் ஆக நாலு ஆபீஸர்கள் கொல்லப்பட்டனர். லார்ட் மெத்யூனும் அசதியாக சதையில் காயமடைந்தனர். அவரோடு மற்றும் 18 ஆபீஸர்களும் காயமடைந்தனர். இந்த யுத்தத்தில் போயர்கள் புகையில்லா பீரங்கிகளை உபயோகித்தன ராதலால் அவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமிடம் தெரியாமல் திகைக்க நேரிட்டுவிட்டது. போயர்களின் சேதம் தெரியவில்லையாயினும் 160-பேர்வரை செத்துக்கிடக்க பிரிட்டிஷார் எடுத்துப் புதைத்தனர். நதியிலும் 2-நாள்வரையில் பிணங்கள் மிதந்துகிடப்பதைக் கண்டுபிடித்து புதைக்கப்பட்டன. விழுந்துபோன கர்னல் ஸ்டாபோர்டின் கமான்டை வின்செஸ்டர் மார்குயிஸ் பெற்றனர்.

# லார்ட்மெத்யூன்—மாகர்ஸ்பாண்டீன் குன்று சண்டை.

## இரத்தக்களரியான யுத்தம்!

மேற்படி சண்டை முடிந்த பிறகு லார்ட்மெத்யூன் துணைப்படைகளும் ரஸ்துக்களும் வந்துகொண்டே யிருக்க கிராஸ்பானை யடுத்துள்ள இடங்களிலெல்லாம் ஸ்தானங்களை பலப்படுத்தினர். இதற்குள் போயர்களும் சிறுகச்சிறுக வந்துகொண்டு ரெயில் பாதைகளை உடைத்துக்கொண்டே யிருந்தனர். பிரிட்டிஷார் இங்கு பலப்படுத்திக்கொண்டிருக்கும் போதே போயர்களும் மாகர்ஸ்பாண்டீனை யடுத்த குன்றங்களில் பலமாக அரண் ஸ்தாபித்து வருவதைக்கண்டு டிசம்பர் மாதம் 9-ந் தேதியன்று அவர்கள் மீது குண்டு பிரயோகிக்க எதிரிகளும் பீரங்கி குண்டுகள்விட நெடுநேரம் பீரங்கி சண்டையுண்டானது. இந்த சண்டை மாகர்ஸ்பாண்டீன் யுத்தம் என வழங்கினும் சண்டைப்போட்ட இடமெல்லாம் ஸ்பைட்பான்டீன் குன்றுகளிலேயே. இங்கு போயர்களின் மீது முதலாவது விட்ட 7 அங்குல நாவல் பீரங்கிக்கு "ஜோ சாம்பர்லேய்ன்" (Joe Chamberlain) எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்த சண்டையிலநேக வீரர் விழுந்ததோடு காப்டன் வின்கேட் கொல்லப்பட்டதுடன் கர்னல் டவுன்மான் மற்றும் ஒரு காப்டன் ஒரு லெப்டினெண்ட் ஒரு அட்ஜுடண்ட் கடுங்காயமடைந்தனர். மறுநாள் காலை 2மணிக்கு கொடிய மந்தாரமும் பலத்தமழையுமாயிருக்க அதையும்பாராது 3 பகுதிகளாக அணிவகுத்து லான்சர்படை முன்னால் பீரங்கிகளுடன்சென்றது. முன்னே சென்றவர்கள்மீது சடுக்கென போயர்கள் சுடத்தொடங்கவும் இவர்களும் உடனே பின்வாங்கி 2-மணி நேரம் வெடி குண்டு பிரயோகஞ்செய்ய, போயர்கள் இதற்கு பதில்விடாது கம்மென்றிருந்துவிட்டனர். அன்று மத்தியானம் பிரிட்டிஷார் விட்ட வெடிகுண்டுகள் ஆகாயத்தில் அபரிமிதமாகப் பறந்ததோடு குன்றின் சந்து பொந்துகளிலெல்லாம் சென்றது. பிறகு அன்றிரவு அங்கேயே கொடிய மழையில் நனைந்து இவர்கள் இராக்காவல் செய்யநேர்ந்ததில் சுருட்டு முதலியவைகள் பிடிக்கா வண்ணமும் உறத்துப்பேசாவண்ணமும் உத்தரவளிக்கப்பட்டது. அப்படியே விடியற்காலை ஒருமணிக்கு மழையால் நனைந்து தொப்பக்கட்டையாக எழுந்து எதிரிகளை சனியனால் குத்தித் துரத்

தி குன்றைப் பிடிக்கக்கிளம்பினர். புல்லுகளின்மீது நடக்கும் மெதுவான காலடி சந்தடியேயன்றி வேறொன்றும் கேட்கப்படவில்லை. இப்படியாக நடக்கையில் போயர்களின் ஸ்தானத்திற்கு 600 கெஜ தூரத்தில் வஞ்சகமாய் ஒருவித இரும்பு முள்கம்பி வலையொன்று போட்டிருக்க அதையும் காலாட்படைகள் மிகுந்த யூகையாய்க் கடந்துசென்று போயர்களுடைய ஸ்தானத்திற்குக் கிட்டே 50 கெஜத்தில் வந்து சேர்ந்தன. சேர்ந்ததும் போயர் மிகு கொடிய துப்பாக்கி குண்டு சுட ஆரம்பித்தனர். இதில் முன்னேறிய ஐலண்டர் படை மிகுதியான நஷ்டமடைந்தும் ஆபீஸர்பின் ஆபீஸரும் வீரரின்பின் வீரருமாய் அடுக்கடுக்காய் விழுந்துவிட்டனர். முதலடியிலேயே இவர்களை நடத்திச்சென்ற ஜெனரல் வாச்சாப் காயமடைந்து விழுந்தனர். விழுந்து இரத்தத்தில் புரண்டுகொண்டிருந்தாரெனினும் தமது வீரரை உற்சாகப்படுத்திக்கொண்டே யிருந்தனர். இதில் வின்செஸ்டர் மார்க்குயிசும் கொல்லப்பட்டனர். இந்த இடம் இரத்தத்தால் தோய்ந்துபோயின. இதனால் கடைசியாக வீரமாய் எதிர்த்து போர்புரிந்த ஐலண்ட் பிரிகேடும் மற்றும் படைகளும் பின்னடைய உத்தரவு கொடுக்கப்பட்டு விட்டன. இச்சண்டையில் ஆபீஸர்கள்மாத்திரம் 57 பேர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போயினர். ஆகமொத்த சேதம் ஐலண்டின் பிரிகேட்டில் விழுந்த 650 பேருடன் சேர்க்க 870 பேர். இங்கு டிசம்பர்மாதம் 13-ந் தேதியன்று ஜெனரல் வாச்சாப்பின் பிரேத அடக்கம் நிறைவேறியது. அவரது கல்லறைக்கு எதிரே அவரின் தீரஸ்தரான ஐலண்டர் வீரரின் 50 சவங்கள் புதைக்கப்பட்டன. எல்லோரும் கண்களில் கண்ணீர் கலங்கினவர்களாய் இவரைப் புதைத்தனர்.

மாகர்ஸ்பான்டீன் சண்டையில் பின்னடையவும் சேனைகளை லார்ட் மெத்யூன் மாடர் நதியின் வடபாகத்தில் ஸ்தாபனஞ் செய்துகொண்டிருந்த இடத்திற்கு வரவழைத்து துணைப்படைக்காக எதிர்நோக்கியிருந்தனர். இதற்குள் போயர்களும் மாடர்நதிக்கு வடக்கேயே 1½–மைல்வரையில் பலமாக ஸ்தாபனஞ்செய்துகொண்டு பிரிட்டிஷார் முன்னேறுதிருக்க டிசம்பர்மாதம் 15-தேதியன்று பீரங்கிகுண்டுவிடத்தொடங்கினர். பிரிட்டிஷாரும் பதில்குண்டுவிட்டனர். இப்படியாக பிரிட்டிஷார் முன்னேறுவண்ணம் வடக்கே போயர்கள் தடை

செய்துகொண்டேயிருக்க அப்படியே போயர்களும் தென்முகமாய் வந்துவிடாதபடி பிரிட்டிஷாரு மவர்களைத் தடைசெய்துகொண்டிருந் தனர். இவ்வண்ணம் இவர்கள் சிறுகச்சிறுக போர்புரிந்துகொண்டே யிருக்குஞ் சமயத்தில் ஜனவரியாதக் கடைசியில் மேஜர் ஜெனரல் ஹெக்டர் மெக்டானுள்ட்டும் மாடர்நதிவந்து சேர்ந்து ஐலண்ட் பி ரிகேட்டின் கமான்டைப்பெற்றனர். இவர் ஆப்கன், எகிப்து, முந் திப திரான்ஸ்வால்யுத்தம், ஒம்டர்மான் யுத்தங்களிலெல்லாம் போர் புரிந்து பிரக்யாதிபெற்றவரானதால், ஸ்காட்லான்டில் இவரை "பை டிங்மாக்' (Fighting mac) என்றழைப்பார்கள். இவர் வந்து சேர்ந் ததும், உடனே போரின் படையெழுச்சிசெய்ததில், ஆரஞ்சிநதிக்கும் மாடர் நதிக்கு மிடையில் பயங்கரநோக்கம் காணப்படவே, அங்கு முன்னேறுக்கி எதிரிகளைத் தாக்கவும் அவர்களும் பின்னடைந்து ரைய ட்நதியைக் கடந்துவிட்டனர். அப்பால் கூடுஸ்பர்க்கிலிருக்கும் போயர் கள் ஸ்தானத்தைத்தாக்க பெப்ரவரிமாதம் 2–ந்தேதி சென்றனர். இ வர் அங்குபோய் சேர்ந்து போர்செய்துகொண்டே யிருக்கும்போ து ஜெனரல் மாபிங்டனும் வந்து சேர எதிரிகளை அங்கிருந்து வெரு ட்டிவிட்டனர். இதில் பிரிட்டிஷாருக்கு 7 பேர் காயமடைந்து சில கு திரைகளும் விழுந்துபோயின. 3-ந் தேதியன்று ஜெனரல் மெக்டா னுள்ட் கூடுஸ்பர்க் டிரிப்டிற்கு 14 மைல் தூரஞ்சென்று வேவுபார்த் து அங்கிருந்த சில போயர்களின் ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

## கிம்பர்லி, லேடிஸ்மித் முற்றுகையுள் கஷ்டம்.

ஜெனரல் புல்லர், லேடிஸ்மித்தையும், ஜெனரல் மெத்யூன் கிம்பர்லியையும் மீட்பதற்கு இவ்வளவு தொந்தரைபட்டுக்கொண்டி ருக்க, மேற்படி பட்டணங்களுள் அடைப்பட்டிருக்கிறவர்களின் கதி வர வர மெத்த அவஸ்தையில் வந்துவிட்டது. கிம்பர்லி போயர்களா ல் அடைப்படுவதற்கு முக்கிய காரணம் போயர்களுக்கு முழுவிரோ தியாகக் காணப்பட்ட மிஸ்டர் ஸெஸில்ரோடஸ் என்பவருக்கு அங் கு இருந்த ஐஸ்வரிய சம்பத்தைப்பார்க்கும்போது போயர்களுக்கெ ழும்பிய ஒரு ஆவலாதியே என்று சொல்லப்படுகிறது. கிம்பர்லியினு ள் மிஸ்டர் ரோடஸ்ஸால் ஏற்படுத்தப்பட்டிருந்த டீபீர்ஸ் கம்பனி

(De Beers company) யார் தங்கள் கீழுள்ள உத்தியோகஸ்தர்களை யெல்லாம் ஆயுததாரிகளாக்கிவிட்டு சுரங்கங்களுக்கு காவல்செய்தனர். இவர்களை மிஸ்டர் ரோடஸ் உறமாக குந்திக்கொண்டிருக்க பலவித மான உற்சாகங்களையெல்லாம் கொடுத்துவந்தனர். அதோடு தினநித மும் டீபீர்ஸ் ஆபீஸில் இவர்களுக்கு சிறுவிருந்து மளித்துவருவார். இப்படியாக இவர் பட்டணத்தை தாங்கிக்கொண் டிருப்பவர்களுக்கு பேருதவியாயிருந்தார். ஆனால் எதிரிகளோ முதலாவதாக மாக்பார் லேன் பார்ம் என்னும் வயலை யடுத்தாப்போலிருந்த இக்கம்பனியாரி ன் டைனமெட் கிடங்கில் தீவைத்துக் கொளுத்திவிட்டதில் 3500 பவுண் பெறுமான வெடிகள் அப்படியே வெடித்துப்போகும்படியாகச் செய்துவிட்டனர். நவம்பர் மாதம் 25-ந்தேதியன்று இரவு பேஜர் ஸ்காட்-டர்னர் ராயல் இலண்டர்ஸ்களை நடத்திக்கொண்டும் இவருக் குமுந்தி லெப்டினென்ட் கிலிப்பர்டின், சிறுதொகை குதிரையேறிய காலாட்படை வேவு பார்த்துக்கொண்டே செல்ல உத்தரவுபெற்று தென்மேற்காயிருந்த எதிரிகளின் ஸ்தானத்திற்கு சடக்கெனச்சென்று அவர்களை வளைந்தும் அவர்கள் குண்டு பிரயோகந் தொடங்கிக்கொ ண்டனர். ஆயினும் இவர்கள் சனியனால் குத்தியதில் வெள்ளைக்கொ டி காண்பித்து சரணடைந்துவிட்டனர். ஆனால் உடனே எதிரிகளின் துணைப்படையொன்று வந்து குண்டுமாரி பொழிந்ததில் மேஜரும் ஒ ருவாறு அசகாயம் பட்டுவிட்டதோடு குண்டு மருந்துகளும் செலவா ய்விட்டதில் நிலைக்காமல் தங்களுடைய காயமடைந்தவர்களையும் பிடி த்தசிறைகளையும் பின்னுக்குக் கொண்டுவந்துவிட்டனர். பின்னடைய வும், போயர்களும் முன்னேறி சரமாரியாய் சுட்டார்களெனினும் ஒ ருவரேகாயமடைந்தனர். போயர்களில் 2 பேர் காயமடைந்தவர்களா கவும் பட்டணத்துள் கொண்டு வரப்பட்டனர். அப்பால் 28-ந் தேதி யன்று கர்னல் கெகிவிக் முன்னேறி போயர்பாளையத்தைத்தாக்கி கா ர்டர்பார் என்னும்வயலையும் போயர்களின் மருந்துவகை பாளைய ரஸ் துக்களையும்பிடித்தனர். ஆனால் இதில் மேஜர் ஸ்காட்டர்னல் கொல் லப்பட்டுப்போனார். ஆகமொத்த சேதம் 22 பேர் கொல்லப்பட்டு 28 பேர் காயமடைந்தனர். இப்படியாக டிசம்பர்மாத முழுவதூஉம் சிறு சிறு போர்கள் நடந்துகொண்டே யிருந்தாலும் அதுவரையில் தான் கிம்பர்லியுள் எல்லோரும் பூரணசுகமாக விருந்தனர்.

ஜனவரிமாதம் 16-ந்தேதி போயர்கள் அருணோதயத்திலிருந்து மறுநாள் காலைவரை சட்டி பீரங்கிப் பிரயோகஞ் செய்தவண்ணமாகவே யிருக்க டீபீர்ஸ் கம்பனியாரால் புதிய ஆயுதவகைகள் கிம்பர்லியைத் தாங்கி நிற்கக் கொண்டுவரப்பட்டது. இந்த கம்பனியார் கிம்பர்லியிலுள்ள ஜனங்களுக்கு மெத்த பேருதவியா யிருந்தனரென்று தெரியவருகிறது. பட்டணம் சூழப்பட்டுவிட்டதில் ஜனங்களுக்கு கஷ்டகாலம் வந்துவிட்டதில் இக்கம்பனியார் பட்டணத்தில் கட்டடங்கள், ரஸ்தாக்கள் முதலியவைகளைப் பழுதுபார்ப்பதனால் வேலைகளை சுதேசிகளுக்குக் கொடுத்து அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில் வாரம் வாரம் 2 ஆயிரம் பவுனுக்கதிகம் செலவுசெய்து வந்தனர். சுகாதார விஷயத்திலுழைத்தனர். தண்ணீர் சப்ளை நிறுத்தப்பட்டுப் போனபோது இந்த கம்பனியாரே உதவிபுரிந்தனர். அதோடு அநேகரை வீரர்களாக ஆயுததாரிகளாக்கியும், யுததாயுதங்கள், குண்டு முதலியவைகளும் தாங்களே செய்தனர். கடைசியாகசெய்த 30 பவுண்டர் பீரங்கி ஒன்றுக்கு "லாங் ஸெஸில் (Long Cecil) எனப் பெயரிடப்பட்டு மிஸ்டர் ஸெஸில் ரோடஸ்ஸே அதில் நின்று குண்டு பிரயோகஞ் செய்தனர். இப்படியாக மிஸ்டர் ஸெஸில் ரோட்ஸ் மெத்தவும் உதவியாயிருந்ததோடு மேற்படியார் பீரங்கியும் வெகு வேலைகள் செய்தது. போயர்களோ மிஸ்டர் ஸெஸ்ஸில் ரோடஸ்ஸைப் பிடித்து புரோயப்பாண்டீனுக்கு கூண்டிலடைத்து அனுப்பப்போவதாய் பெருமை கொண்டாடிக்கொண்டிருந்ததில் உடனே இவர் "C. J. ரோடஸ்ஸின் வந்தனத்துடன்" (with C. J. Rhodes compliments) என்ற வாசகத்தை 12 பீரங்கி குண்டுகளில் பதிப்செய்து அவைகளை உடனே போயர்கள்மீது பிரயோகஞ்செய்ய உத்தரவளித்தனர். இதற்கு போயர்களும் டீபீர்ஸ் கம்பனியாரின் வைர சுரங்கங்கள்மேல் குண்டு பிரயோகஞ்செய்ய அது யாதொருசேதத்தையும் விளைவிக்கவில்லை. ஆயினும் அவர்கள் விட்டுக்கொண்டிருந்த பீரங்கி வெடிகுண்டுகள் சிறுகச் சிறுக நஷ்டத்தையும் உயிர்சேதத்தையுமே கொடுத்துக் கொண்டிருந்தன. பிரிட்டிஷாரும் அப்படியே எதிர் குண்டுவிட்டு தாக்கிக்கொண்டே யிருந்தனர். இவர்களுக்கு இதற்குள் ஆகாரவகைகளுக்கு வழியில்லாமல் போகவே குதிரை மாமிஸமும், சூப்புமே ஆகாரமானது. சுகவீனமா யிருந்தவர்களுக்கு மா

த்திரம் மாட்டுசூப் கொடுக்கப்பட்டது. குதிரைகள் பட்டினியினுல் செத்தன. அப்படிச்செத்த குதிரைகளை காப்பிரிகள் அப்படியே பிய்த்துப்பிடுங்கித் தின்றுவிடுவர். இப்படியான ஆகார கஷ்டத்துடன் குண்டுகளுக்கும் பயந்துகொண்டும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் அநேகர் கெனிகளில் புகுந்துகொண்டும் இராப்பகலாய்க் கிடந்தனர்.

இவர்களிம்மாதிரியான கஷ்டத்தை 4 மாதம்வரை யனுபவித்தனர்களென்றுல் லேடிஸ்மித் பட்டணமும் இதே கெதியிலேயே யிருந்தது. இந்த லேடிஸ்மித் பட்டணம் நவம்பர்மாதம் 2 ந்தேதி போயர்களால் முற்றுகைசெய்யப் பட்டுவிட்டு தங்களது பெரும் பீரங்கிகளையெல்லாம் கொண்டுவந்து சுற்றிலும் மலைகளில் ஸ்தாபனஞ் செய்துகொண்டு குண்டு பிரயோகஞ்செய்து கொண்டிருந்தனர். எனினும் அவர்களுக்கு பிரிட்டிஷாரின் நாவல் பீரங்கிகள் பதில் குண்டுவிட்டுக்கொண்டே யிருந்தன. நவம்பர் மாதம் 8 ந்தேதியன்று போயர்கள் தங்களது மிகுதியான சேனைகளை எல்லாம் திரட்டி ஒரு மோதுதல் மோதக் கருதி 4 மணிக்கு வெடிகுண்டு பிரயோகந் தொடங்கினர். இப்படி மிகுதியான குண்டு பிரயோகத்தி னூடேயே முன்னேறி அருகில்வர அவர்களை காலாட்படையார் மிக உக்கிரமாகத்தாக்கி விடாகுண்டிகளாக எதிர்த்ததில் போயர்கள் கொஞ்சம் மயங்கி பின்தாங்கியும் மறுபடி சட்டென முன்னேறினர். திரும்பவும் பிரிட்டிஷ் படைகள்விட்ட கொடிய நெருப்பினுல் புறங்காட்டி ஓட அவர்களை விடாது வெகு தூரம், இவர்கள் துரத்தியடித்தனர். மீண்டும் திரும்பி வருகையில் போயர்கள் பதிவிருக்கத் தோண்டிவைத்த பள்ளத்தில் பிரிட்டிஷ் படைகள் ஒளிந்துகொண்டு எதிரிகளை எதிர்நோக்கி யிருக்க, போயர்கள் ஷை பிரிட்டிஷார், பட்டணத்திற்குத் திரும்பிவிட்டனர்கள் எனக் கருதி அஜாக்கிரதையாக நடந்துகொண்டே பள்ளத்திற்கு வெகு அருகாமை வந்ததும், பிரிட்டிஷார் சட்டென எழும்பி வாலிபையர் விட்டனர். இதில் ஐயோ! அபரிமிதமான கொடியசேதத்துடன் ஓட்டமெடுத்துவிட்டனர். இப்படியாக இப்பக்கத்தில் 11 மணிக்கு சண்டை முடிந்தது. இதன் நடுவில் வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) அவர்களின் பிறந்த நாளும் வந்துவிட அதை முன்னிட்டு ஜெனரல்வொயிட் 21-மரியாதைகுண்டு சுட உத்தரவளிக்கவும் அப்படியே ஒவ்வொரு குண்டும் மிகுந்த ஆரவார பேரிகை முழக்கக்கூச்ச

லகுதூகலத்துடன் சுடப்பட்டது. இப்பால் தென்மேற்கு பக்கமாக போயர்கள் குன்றுக்கு அப்பக்கத்தில் பிரிட்டிஷாரின் வெடி குண்டு களுக்குப் பதுங்குகிறதையறிந்து, குண்டுகளினூடேயே பதுங்கிச்செ ன்று துப்பாக்கி குண்டுகள்விட்டு கடுஞ்சேதத்தை விளைவித்தனர். இ ப்படியாக போயர்களுக்கு 700 முதல் 800 பேர்வரை சேதமுண்டா கச்செய்தனர்.

பிறகு யாதொரு சம்பவமும் நிகழாதிருந்து 14 ந்தேதியன்று பிரிட்டிஷ் குதிரைப்படை பீரங்கிப்படைகளிரண்டும் கொலென்ஸோ ரோடுபக்கம் வேவுபார்த்ததில் எதிரிகள் இவர்களை சந்தித்துத் தாக்கி கொடுஞ் சேதத்துடன் வெருட்டி விட்டனர். பிரிட்டிஷாருக்கு சேத ம் ஒன்றேதான். அதேதினத்தில் நெட்டால் மவுன்டட் போர்ஸின் ஒரு துருப்பர் தனது கூடாரத்தில் தூங்கிக்கொண் டிருந்தபோது பீரங்கிகுண்டு வெடியினல் கொல்லப்பட்டனன். இதற்குள் காரிஸன் படை ஸ்தானத்தை பலப்படுத்தி சுத்தி நாவல் பீரங்கிகளை ஸ்தாபித் தனர். தென் ஆபிரிக்காவில் சாஸ்திர நிபுணரென பெயர்பெற்ற டாக் டர் ஸ்டார்க் 18 ந்தேதியன்று ராயல் ஒட்டேலுக்கெதிரில் பீரங்கி குண்டு வெடியினல் கொல்லப்பட்டனர். இவருக்கு சட்டென உதவி க்குச்சென்றதும் "என் பூனையை பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங் கள்" என்று சொல்லிக்கொண்டே உயிர்விட்டனர். இப்படியாக போ யர்கள் அடிக்கடி பீரங்கி பிரயோகஞ்செய்து தொந்தரித்ததோடு அ ங்குள்ள டவுன் ஹாலே ஆஸ்பத்திரியாக நியமித்துக்கொண்டதாக கு றிப்பிட்டு அதின் மீது ரெட்கிராஸ் கொடி பறக்கவிட்டும் போயர்கள் யாதொரு ஈவிதக்க மில்லாதவர்களாய் அதின்மீதும் குண்டு பிரயோ கங்கள் செய்ததில் காயமடைந்திருந்த ஒருவன் கொல்லப்பட்டதுட ன் மற்றும் 2 டாக்டர்கள் 7 ஆபீஸர்கள் காயமடைந்தனர். இந்த சமயங்களிலே, இந்திய கூலிகள் ஜெனரல் வொயிட்டுக்கு வெகு உத வியாக விருந்தனரென்று அவர் புகழ்ந்தார். இந்திய கூலிகள் தங்க ள் உயிரையும் ஒரு பொருட்செய்யாது சேனைகளுக்கு பலவிதத்திலு ம் ஏவல் புரிந்திருந்தனர்களாம். எதிரிகள் விடுகிற பீரங்கிகுண்டு கள்வருகிற நேர்வழிகளை, இந்தியர்கள் மரத்தின்மீதேறிப் பார்த்துப் பார்த்து, துரைகளே; குண்டு இப்படி வருகிறது அப்படி வருகிற து! அந்தண்டை பதுங்குங்கள், இந்தண்டை சாயுங்கள் என்று சொ

ல்லிக்கொண்டே யிருந்தனர்களாம். தண்ணீர் வெந்நீர் முதலானவை, தங்களுக்கில்லாமற் போனபோதிலும் சேனையின் பெரிய உத்தியோ கஸ்தர்களுக்கு சவுதரித்துக்கொடுப்பார்களாம். இங்ஙனமிருக்க டிசம் பர் மாதம் 8-ந் தேதி நள்ளிரவு 12-மணிக்கும் 1 – மணிக்கு மிடை யில் ஸர் ஆர்ச்பாள்ட் ஹண்டர் சிறு பகுதியொன்றை யழைத்துக் கொண்டு லம்பார்ட்ஸ் குன்றைத் தாக்கும்படியாக சென்று கல்லி லும் முள்ளிலும் புதரிலுமாக நடந்து விடியற்காலை 2-மணி சமயத் தில் மெதுவாக குன்றின்மீது ஏறினர். அங்கு யாதொரு சப்தமுமி ன்றி கம்மென விருந்தது. பிரிட்டிஷாரும் யாதொரு காச்சு மூச்சு என்னாதபடி ஏறிக்கொண்டிருந்தசமயத்தில் திடீரென "வீ-காட்-டா?" (Wie gaat da?) என ஒரு கூக்குரல் கேட்டது. உடனே இவர்களும் "யாரங்கே போகிறது" (Who goes there?) என கேட்ட க்ஷணத் திற்கெல்லாம் குண்டு சப்தம் கேட்டது. முதலடியிலேயே மேஜர் ஹெண்டர்ஸன்னும் 4, 5 வீரர்களும் விழுந்துவிட்டனர். உடனே இருதரத்தாரும் துப்பாக்கி குண்டுகள் சரமாரியாய் விட்டுக்கொண்டி ருக்குஞ் சமயத்தில் கர்னல் எட்வர்ட்ஸ் மிகுந்த உற்சாக தொனியு டன் "சனியனை மாட்டுங்கள்" (Fix Bayonets) என்றதும் போயர் வெருண் டோட்டமெடுத்துவிட்டனர். குன்றும் பிடிக்கப்பட்டுவிட் டது. போயர்கள் ஓட்டமெடுத்த துரிதத்தில 40 பவுண்டு குண்டு சுடு ம்படியான ஹவிட்ஸார் பீரங்கியொன்றையும், 94–பவுண்டு குண்டு சுடும்படியான (லாங்-டாம்) என்னும் குருஸாட் பீரங்கியொன்றையு ம் விட்டுவிட்டனர். பீரங்கிகளிலெல்லாம் பெரியது இந்த "லாங்டாம்" என்னும் பீரங்கியே. இது 14 மைல் தூரம் சுடக்கூடியது. இப்பீரங்கி மற்றும் பீரங்கிகளைப் போல எதிர் பக்க மிருந்து மருந்து முதலியவை களை போட்டு கெட்டிப் படுத்துவது போலல்லாது பின் பக்கமாயுள்ள கதவைத்திறந்து கெட்டிப்படுத்தி சுடக்கூடியது. இந்த பிரமாண்டமா ன பீரங்கியையும் போயர்கள் க்ஷணநேரத்திற்குள் எப்பேர்பட்ட செங்குத்தான குன்றாக விருந்தாலும் நூறு கணக்காய்க் கூடி இழு த்து ஸ்தாபனஞ்செய்து விடுகின்றனர். முதல்முதலாக லேடிஸ்மித் அ டைக்கப்பட்டு விட்டவுடனே இந்த பெரிய "லாங்டாம்" பீரங்கியைத் தான் பிரிடோரியாவிலிருந்து வோல்ஸ் ராட்வரை ரெயில் மார்க்கமாக க்கொண்டு வந்து இந்த லேடிஸ்மித் பட்டணத்தின் மீது குண்டு பிர

யோகஞ்செய்யும்படியாக அக்கிருந்து சில நாட்களாய் பள்ளம் மேடுக ளிலெல்லாம் அதை வெகு சுலபமாக இழுத்துக்கொண்டு வந்து ஸ்தா பனம் செய்தனர். அதோடு ஏராளமான 40 பவுண்டு 94 பவுண்டு வெ டிகுண்டு, கம்பளிகள், 2-கூடாரங்கள் முதலியவைகளெல்லாம் அப்ப டியப்படியே விட்டுவிட்டிருந்தனர். பிரிட்டிஷார் மருந்து வகைகளு க்காக இங்கு சகலவைகளையும் பரிசோதனை செய்துகொண்டிருந்த போது ஒரு கூடாரத்திலிருந்த ஒரு பெட்டியில் மேஜர் ஏராஸ்மஸ் மேல்பார்வையிட்டு மிஸிஸ் P. J. குரோயின்வாள்டிற்கு கொடுப்பது என்றெழுதியிருந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. அதில் எழுதப்ப ட்டிருந்ததாவது:—

"எனது அன்பான சகோதரியே,—நாங்கள் லேடிஸ்மித்தை முற்றுகை போட்டு ஒருமாதமும் 7-நாள்போலாகிறது. இனி என்ன சம்பவிக்கப் போகிற தெனத் தெரியவில்லை. நாங்கள் எங்கள் பீரங்கிகளால் தினநிதம் சுட்டுக்கொ ண்டே யிருப்பினும் இங்கிலீஷ்காரரும் பட்டணத்தை சுற்றி நடந்துகொண் டேதானிருக்கக் காணுகிறோம். மார்பளவு உயர்ந்த ஸ்திரமான சுவர்கள் வெ ளியே பலமாகக் கட்டியிருப்பதால் பட்டணத்தைத் தாக்குவது கஷ்டமாக வேயிருக்கிறது. பட்டணத்திற்கு சமீபமாக அவர்கள் 2-நாவல் பீரங்கிகள் நா ட்டியிருக்கிறதானது எங்களுக்கு மிகுந்த பயங்கர சேதத்தை கொடுக்கக்கூடி யதாயிருக்கிறது. மிஸ்டர் இங்கிலீஷ்காரர் நன்றாகவும் கடினமாகவும் போர்பு ரிவதாலும் நாங்களாகிய பர்கர்களும் கொஞ்சம் அசக்கப்பட்டிருப்பதால் அவர் கள் சரணடைவதற்குள் கொஞ்ச மதிகமாகத்தான் இரத்தஞ் சிந்துதல் நேரி டுமென நினைக்கிறேன். எனவே சகோதரியே, சீக்கிரமாய் கடிதமெழுதி நீங் கள் எப்படியிருக்கிறீர்கள் என்த் தெரிவி. நான் உனக்கு அதிகமாக எழுதவி ரும்புகிறேனாயினும் வெய்யில் கொடிதாகவும், ஈக்கள் கொஞ்சநேர மீதியாக இருக்கவிடாது தொந்தரிப்பதாலும் இதை உங்களெல்லோருக்கும் என் அன் போடு எழுதி முடிக்கிறேன்.

இப்படிக்கு உன் அன்பான சகோதரன்,

வெஸ்ஸன் குரோய்ன் வாள்ட்.

என்பதே. இப்படியாக பிரிட்டிஷார் அங்கு பரிசோதனைகள் செய்து கொண்டிருக்கும்போதே, போயர்களது பீரங்கிகளை நாசப்படுத்தும்ப டியான மருந்து வகைகளை எல்லாம் பீரங்கியுள் போட்டுத் தயார் செ ய்துவிட்டனர். ஜெனரல் ஹண்டர் உத்தரவுகொடுத்ததும் எல்லோரு ம் குன்றை விட்டு இறங்கிவிட காப்டன் போக்கும் லெப்டினென்ட் டர்னரும் க்ஷெ பீரங்கிகளைக் கொளுத்திவிட அங்கு தாமதித்து அ

ப்படியே கொளுத்தி பீரங்கிகளை உபயோகமற்று போகச்செய்துவிட்டு வந்து சேனையுடன் கலந்து பட்டணத்துள் சேர்ந்தனர். பிரிட்டிஷார் இப்படி வந்து விட்டதும் பழையபடியே போயர் வந்து குன்றுகள்மீது குந்திக்கொண்டனர்.

இங்கு இப்படியானல் பட்டணத்தின் மற்றொரு பக்கத்திலிருந்த ஸர்பிரைஸ் ஹில் (Surprise Hill) குன்றில் போயர்கள் ஹவிட்ஸார் பீரங்கியொன்றை ஸ்தாபித்திருக்கக்கண்டு அங்கு மவர்களைத் தாக்கி பீரங்கியை உடைக்கக் கருதி 10-ந்தேதி யிரவு ரைபில் பிரிகேடின் 5 கம்பனிகளை மேஜர் விங், லெப்டினெட் டிக்பி ஜோன்ஸவர்களுடன் கர்னல் மெட்காப் நடத்திக்கொண்டு பிரயாணமாயினர். பிரயாணமாகி வெளிக்காவலை கடந்து ஆப்ஸர்வேஷன் குன்றில் 1½-மணி நேரம் புல்லின்மீது படுத்திருந்து பிறகெழுந்து நடக்கத் தொடங்கி, அங்கு போட்டிருந்த இரும்புவேலியை யறுத்து ரெயில்பாதையைக் கடக்கும்போது, பின்னடைந்தால் காப்பாற்ற அரை கம்பனியை வைத்துவிட்டு முன்னேறினர். இப்பாதையோ பள்ளமும் மேடும் கரடு முரடான இடமென்றாலும் வீரர் கப்சப் என்னாது தட்டுத்தடுமாறி நடந்தனர். குன்றின் அடியில் வந்து சேர்ந்ததும் அங்கு பின்னும் 2½-கம்பனியை நிறுத்திவிட்டு வெகு உஷாராக கர்னல் மெட்காப் மீதியான 2 கம்பனியுடன் 350 அடி ஏறினர். எதிரிகளின் சந்தடி யாதும் கேட்காதிருக்க சட்டென்று இங்கிலீஷில் "யாரங்கே போகிறது' என ஒரு கூக்குரல் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே பட பட படாவென துப்பாக்கிகுண்டு பிரயோகம் நடந்தது. அதோடுகூட பயங்கரப் படத்தக்கதான பாம் பாம் பீரங்கி பிரயோகஞ் செய்யத் தொடங்கினர். இந்த சண்டை வெகு சுறுக்காக விருந்தாலும் மிகக் கொடிதாக விருந்தது. உடனே கர்னல் மெட்காப் சனியன்களை மாட்டிக்கொண்டு எதிரிகள்மீது பாயும்படி உத்தரவுகொடுக்க க்ஷணநேரத்திற்கெல்லாம் குன்று பிடிக்கப்பட்டது. போயர்கள் ஓட்டமெடுத்துவிட்டனர். குன்றைப் பிடித்தவுடனே பீரங்கிக்காக ஓடிப்பார்க்க யாவரும் பிரமிக்கத்தக்கதாக அதை வைத்த இடத்தில் காணோம். உடனே சுறு சுறுப்பாயிங்கு மங்கும் தேட 10-கெஜ தூரத்தில் மலை சரிவான இடத்தில் இழுத்துவிட் டொளித்துவைத்திருக்கக் கண்டு உடனே பீரங்கியை வெடியுண்டாக்க மருந்துகளை கெட்டிப்படுத்தி நெருப்பு வை

த்தனர். 2-நிமிஷத்தில் வெடிக்கவேண்டியது 3-நிமிஷம் 4, 5-நிமிஷங்களாகியும் வெடிக்கக்காணோம். லெப்டினென்ட் மறுபடி சென்று மற்றொரு வத்தி வைத்துக் கொளுத்திவிட்டார். உடனே மிகுந்த பயங்கரமான சத்தத்தோடு பீரங்கி சுக்கல் சுக்கலாயின. எனவே, எல்லோரும் குதூகலத்துடன் ஆர்ப்பரித்துக்கொண்டு தங்கள் பாளையத்திற்கு திரும்பினர். திரும்பினதும் பின்னடைந்த போயர்கள் ஓடோடிவந்து திரும்பிப் போய்க்கொண்டிருந்த பிரிட்டிஷாரை சுட்டுக்கொண்டே வந்தனர். பிரிட்டிஷாரும் சுட்டுக்கொண்டேயிறங்கி மீதியாக நிறுத்தப்பட்டிருந்த $2\frac{1}{2}$ கம்பனியாருடன் சேர்ந்தவுடன் சுடுவதை நிறுத்திப் பதுங்க உத்தரவு கொடுக்கப்பட்டது. இதற்குள் போயர்கள் கிட்டே நெருங்க திடீரென அவர்களை எதிர்த்துத் தாக்க உத்தரவானதும் அப்படியே தாக்கி சனியனால் குத்தி அதிக சேதத்தை விளைவித்தனர். இதன்பேரில் போயர்கள் பின்னடைந்தே போயினர். போயர்களுக்கு பெருஞ்சேத மொருபக்கமாயினும் பிரிட்டிஷாரும் 59-பேர் சேதத்தோடேயே பட்டணம் வந்து சேர்ந்தனர்.

பட்டணத்துள் அடைப்பட்டுக் கிடப்போர்களுக்கு சீக்கிரத்தில் விஷசுரமும், சீதபேதியும் காணத்தொடங்கியது. ஜெனரல் ஸர் ஜார்ஜ் வொயிட்டும் வியாதியி லகப்பட்டுக்கொண்டார். வெய்யிலுஷ்ணமோ 104 டிகிரியில் மிகக் கொடிதாகவிருந்தது. வரவர எதிரிகளின் பீரங்கிப் பிரயோகங்களும் மும்முரமாயின, ஜெனரலுடைய விடுதியில் பாதி அப்படியே எதிரிகளுடைய பீரங்கிக் கிரையானது. அதன்பேரில் அவரது எட்குவார்ட்டர் மற்றொரு பக்கம் மாற்றப்பட்டது. டிசம்பர் மாதம் 22-ந் தேதி காலை போஜனம் (Breakfast) அருந்திக்கொண்டிருந்தபோது ஒரு வெடி குண்டு வந்து விழுந்து கிளௌசெஸ்டர் படையின் 6-பேர் கொல்லப்பட்டு 9-பேர் காயமடைந்தும் 5-வது லான்ஸர் படையின் 5-ஆபீஸர்கள் காயமுமடைந்தனர். இதற்குள் கிறிஸ்மஸ் பண்டிகையும் வந்து எல்லோரும் ஒருவாறு தின்று குடித்து ஆடிப்பாடி சந்தோஷங் கொண்டாடினர். அன்றுதினம் ஒவ்வொருவருக்கும் சுருட்டும், "பிளம் புடிங்" (Plum Pudding) என்னும் ருசியான பதார்த்தமும் கொடுக்கப்பட்டது. ஆனால் அன்றையதினமும் போயர் குண்டு பிரயோகஞ் செய்யாதிருக்கவில்லை. டிவான்ஷைர் படையின் ஆபீஸர் விருந்து மண்டபத்தில் ஒரு வெடிகுண்டு விழுந்து 9-ஆபீஸர்களைக் கொன்றும் காயமும் படுத்தியது

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தினநாள் நள்ளிரவில் ஒரு போயர், பதுங்கியே பாளையத்திற்கு அருகாமையாய் வந்து 5-துப்பாக்கி குண்டு சுட்டு "இக் காலத்திற்குரிய வந்தனங்கள்," "சந்தோஷமான கிறிஸ்மஸ்!" (Compliments of the Season! A Merry Christmas.) எனக் கூவிவிட் டோடிவிட்டனனும். பிறகு 2-குண்டுகள் "புதிய காலத்தின் வந்தனங்கள்" என வர்ணந்தீர்க்கப்பட்ட வாசகத்துடன் வந்து விழுந்ததில் ஒன்றில் பிளம் புடிங் இருந்ததாம். அங்கிருந்த சுமார் 200 பிள்ளைகளுக்கு ஒருவாறான "கிறிஸ்மஸ் டிரீ" என்னும் தமாஷான மரம் நட்டு அவர்களைச் சந்தோஷிப்பிக்கச் சில விளையாட்டு வகைகள் கொடுக்கப்பட்டது. இந்த சொற்ப சந்தோஷத்திற்கிடையே போயர்களுடைய பீரங்கி குண்டுகளும் அமளிகுமளியாக்கின. குண்டுகள் வந்து சேதப்படுத்திய நஷ்டமோ அநேகம்.

ரெயில்வே ஸ்டேஷனுக் கருகாமையாய் கிரிக்கட் பந்தாட்ட மாடிக்கொண்டிருந்த போது பந்தை போடுவதற்கு, டாட் என்பவன் கையில் வைத்திருக்கும் போதே ஒரு குண்டு வந்து வெடித்து ஒரு துண்டு அவனது தலையின் பின் பாகத்தில் பட்டு கையிலிருந்த பந்துடன் விழுந்து உயிர் துறந்தனன். இப்படியாக, போயர்கள் பீரங்கிகளை விட்டுக்கொண்டே யிருந்து கடைசியாக ஜனவரி மாதம் 6-ந் தேதி பிற்பகல் பிரிட்டிஷாரின் சீஸர் காம்ப் வாகன் ஹில்ஸ்தானங்கள் மீது தாக்கினர். இந்த வாகன் ஹில் 3 முறை போயர்களால் பிடிக்கப்பட்டு பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. இந்த தாக்குதல் சாயந்தரம் 7½ மணிவரை நடந்தது. இதில் ஒரு ஸ்தானம் போயர்கள் கைப்பற்றியிருந்தார்களெனினும் பொழுது போகும் சமயத்தில் கொடிய மழையிலேயே சனியனால் போயர்களைக் குத்தி விரட்டினர். இவ்விதமே போயர்கள் நாலாப்பக்கமும் சேதத்துடனே பின்னடையச் செய்யப்பட்டனர். ஒரு பக்கத்தில் லெப்டினெண்ட் ராய்ஸ்டன் ஒரு ஸ்குவாடரன் படையை போயர்கள்மீது பாய உத்தரவளித்தபோது "எங்களைச் சுடாதேயுங்கள், நாங்கள் பட்டணத்து காவலாளர்" எனக் கூற உடனே சுடாதிருக்க உத்தரவளிக்கப்பட்டதுதான் தாமதம், சட்டென போயர்களிவர்களை குண்டுகளால் சுட்டு பெருஞ்சேதத்தை விளைவித்தனர். உடனே பிரிட்டிஷார் வீராவேசமாயெழும்பி ஒரு போயரைக்கூட மீதிவிடாது நாசப்படுத்திவிட்டனர். ஆயினும் இம்பீரியல்

லைட் ஆர்ஸ்படையாரின் 10 ஆபீஸரில் 8 பேர் கொல்லப்பட்டும் காய மடைந்தும் போயினர். மிகுந்த வீரமான செய்கைகளையெல்லாம் புரிந்துகொண்டிருந்த லெப்டினெனன்ட் டிக்பி ஜோன்ஸ் இச்சண்டையில் மரணகாயமடைந்தனர். கர்னல் டிக்–கன்னிங்காம் V. C. தமது கார்டன்படைவீரரோடு சண்டையில் கலக்க உத்தரவிற்காக எதிர்நோக்கி தயாராக விருக்கும்போதே எங்கிருந்தோ ஒரு போயரின் துப்பாக்கி குண்டுவந்து இவரை மரணகாயப்படுத்திவிட்டது. இவ்விடம் பிரிட்டிஷாரின் பட்டாளங்கள் ஒன்ருகச்சேர்ந்துவிட போயர்களும் சந்துபொந்துகளிலிருந்தவர்க ளெல்லோரும் ஈச்செல்லைப்போல கூடிவிட்டதில், இது சிறுபோராக இருந்து பெரும் யுத்தமாய் முடிந்துவிட்டது. இந்த சண்டையில் போயர்கள் பெருங் காற்றிலிலைகள் உதிருவது போல உதிர்ந்து விழுந்தனர். பிரிட்டிஷாருக்கும் சேதமோ அபரிமிதமே. 41-ஆபீஸர்களும் 379 நன்கமிஷன்ட் ஆபீஸர்களும் வீரர்களும் விழுந்தனர். மறுநாள் செத்தவர்களைப் புதைத்தனர்.

இது விஷயமாய் ராயல் ஆர்மி மெடிக்கல் கார்ப்ஸ் படையின் ஒரு ஆபீஸர் எழுதிய கடிதமாவது:—"ரெட்கிராஸ் (சிவப்பு சிலுவைக்குறி) போட்ட கொடியுடன் ஒரு போயர் மெடிக்கல் ஆபீஸர் வந்து, எங்களுள் கொல்லப்பட்டவர்களை வந்து புதைத்துவிடக் கேட்கவும் அப்படியே நாங்கள் சென்று புதைத்தோம். ஆனால் இங்கு செத்துகிடந்தவர்கள் துப்பாக்கிகுண்டடியினல் பிய்க்கப்பட்டு இருந்த அகோர நிலைமையைப்பார்த்த நான் அதை மறந்துபோகக் கூடாததாயிருக்கிறது. போயர்கள் மிகுந்த நல்லவர்கள். உண்மையில் அவர்களை யாரும் எதிரிகளென்றே நினைக்கவில்லை. அவர்கள் எங்களிடம் வெகு சாதுரியமாகப் பேசி கல்லறைகள் வெட்டவும், செத்தவர்களைத் தூக்கிவரவும் உதவி புரிந்தனர். எங்கள் மேஜர் சவ கைங்கிரிய ஆராதனை செய்து முடிந்தவுடனே ஒரு போயர் சட்டென முன்வந்து இந்த சண்டை சீக்கிரம் முடிய தெய்வத்தை நோக்கி ஒரு உருக்கமான ஜெபம் புரிந்தான். அது முடிந்ததும் டச்சு பாஷையில் ஒரு ஞானப்பாட்டு பாடினர். அது மனதை உருக்கத்தக்க செயலாயிருந்தது. இந்தவித நற்செய்கை மனதில் பூரிக்கச்செய்து நாங்கள் சில நேரம் வரையும் பேசாமலிருக்கச் செய்துவிட்டது" என்பதே.

சண்டைமுடிந்த மறுநாள் ஆங்கிலிகன் ஆலயத்தில் ஒரு ஸ்தோத்திர தேவாராதனை நடந்தது. இதில் வீரரே மிகவாக நிரம்பிவிட்டனர். இந்த ஆராதனைக்கு ஜெனரல் ஸர் ஜியார்ஜ் வொயிட், ஜெனரல் ஸர் ஆர்ச்பாள்ட் ஹண்டர், கர்னல் ஐயன் ஆமில்டன் இன்னும் இராணுவ பரிவார பெரும் உத்தியோகஸ்த ரெல்லாம் வந்திருந்தனர். சனிக்கிழமை சண்டையில் ஜெயம் பெற்றதை முன்னிட்டு ஆர்ச் டீக்கன் பார்க்கர் வெகு சாதுரியமாய்ப்பேசி பிரசங்கத்தை முடித்தார். பிரசங்கம் முடிந்ததும் ஜெனரல் வொயிட்டும் அவர் பரிவாரத்தாரும் அழைக்கப்பட்டு அல்தாருக் கருகாமையாய் நிற்கவைத்து "டீடம்" பாட்டு பாடப்பட்டு கடைசியாக "காட் சேவ் தி குயின்" பாட்டோடு ஆராதனை முடிந்தது. அதன் பிறகு 6-ந்தேதிய சண்டையைப்பற்றி வீரர் தங்கள் தங்கள் அனுபவத்தில் நடந்த காரியங்களைப் பேசியவைகளைகேட்க மிகுந்த மனப்பற்றுதலா யிருந்தது. 19-வது உஸார்ஸ் படையின் கூப்பர் என்னும் வீரன் வெளிக்காவலில் நிறுத்தப்பட் டிருந்தபோது, ஒரு பெரும் பாராங்கல்லுக்குப் பின்னிருந்து சுடுஞ் சமயத்தில் கையில் காயமடைந்தனன். இதன்பேரில் இருட்டாகும்வரை அங்கேயே யிருந்து, பிறகு எழுந்து பாளையத்திற்கு நடந்து வந்துகொண்டிருக்க இருட்டில் வழிபிசகி ஒரு மலையடிவாரமாய் போய்க்கொண்டிருந்தபோது போயரால் சிறைபாக்கப்பட்டனன். இவனை அவர்கள் விடியும்வரை நிறுத்தி அவன் காயத்திற்கு சிகிச்சைசெய்து பிறகு ஒரு டப்பி ஜாமும் (ஒருவகை இனிப்பான பதார்த்தம்) ஒரு பெட்டி சாக்கிலெட் மிட்டாயும் அவனுக்குக் கொடுத்து லேடிஸ்மித்திற்கு வழிகாட்டி அனுப்பிவிட்டனர். நிற்க, லேடிஸ்மித் பட்டணத்திலுள்ள காரிஸன் படைகளை ஜனவரிமாத மத்திக்குள் விடுதலை கிடைத்துவிடுமென எண்ணியிருந்தனர், ஆயினும் போயர்கள் தினநிதம் வெடிகுண்டுகள் விட்டுக்கொண்டே யிருக்கவும். இதில் ஒருகுண்டு ஜெனரல் வொயிட் ஜெனரல் ஹண்ட ரிவர்களுடைய குவார்டர்ஸ்களை அதம்பண்ணிவிட்டது. அதோடு விஷ சுரத்தாலும் சீதபேதியாலும் தினநிதம் 10-பேர்வரையில் மாண்டுகொண்டிருந்ததாகக் கணக்கிடப்பட்டது. இதற்கிடையே சூரியோஷ்ணத்தில் தூரதிருஷ்டி கண்ணாடியினால் சங்கதி தெரிவிக்கும்படியான (ஹிலியோகிராப்" என்னும்) யந்திரத்தாலும், "புறாவிட்டு அதி


ன்மூலமாய் சங்கதி கட்டியனுப்புகிற (Pigeon Post) புருத்தபால் வழியாகவும் அங்கத்திய நடவடிக்கைகள் ஜெனரல்வொயிட்டிற்கும் ஜெனரல் புல்லருக்கும் நடந்துகொண்டிருந்தன. இப்படியான கஷ்ட நஷ்டங்களெல்லாம் இப்பட்டணத்துள் அனுபவித்துக்கொண்டிருக்கும்படி யாயிற்று.

## உலகெங்கும் இச்சண்டையின் அமளி குமளி.

டிசம்பர்மாதம் 10-ந்தேதி ஜெனரல் காட்டாகர் ஸ்டாம்பர்க்கிலும், 11-ந்தேதி லார்ட் மெத்யூன் மாடர்நதியண்டையும் 15 ந்-தேதி ஜெனரல் புல்லர் டுகிலா நதியண்டையும் பெருமிதமான சேதங்களடைந்து இப்படியாக எல்லாப்பக்கமும் தோல்விகளாய் விட்டதில் இந்த அபஜெய சங்கதி உலகமுழுதுமே பரவிவிட்டது. எங்கும் பெருத்த அமளிகுமளியாகிவிட்டது. உலகத்தின் எத்திசையிலும் சிலர் துக்கிக்கவும் சிலர் ஏளனம்பண்ணவும், சிலர் பரிகசிக்கவும் தொடங்கிவிட்டனர். ஜெர்மன் பிரன்சு பத்திரிகைகள் கோமாளித்தனமான படங்களெல்லாம் போட்டு ஆங்கிலேயரை ஏளனம்பண்ணி நகைத்தன. ருஷியாவோ "பலவீனமான இங்கிலாந்து" என அசட்டையாகப்பேசிற்று. இது இப்படியானால், பிரிட்டிஷாரின் இராஜ்ஜியங்களிலெல்லாம் துக்ககாரிருள்மூடின. இந்தியாவிலே இராஜவிசுவாசிகளான அநேக இந்தியர்களும், ஈஸ்ட் இந்தியர்களும் வாலின்டியர் படைகளாக இங்கிலாந்திற்கு உதவிக்கு முன்னேற எதிரோடிவந்தனர். அநேக ஐஸ்வரிய இளவரசரும் தங்களால்கூடிய உதவிபுரிய முன்வந்தனர். மைசூர் இராஜா, ஐதராபாத் நவாப் முதலானவர்களெல்லாம் குதிரைகள் முதலானவைகள் கொடுக்க விண்ணப்பஞ்செய்தனர். காஷ்மீயர், ஜாட்பூர், மஹாராஜாக்கள் துருப்புகளும் குதிரைகளும் கொடுப்பதாகக் கேட்டனர். உடனே அநேக ஐரோப்பியர்களும் தங்கள் சுயேச்சையாய் சிறுசிறு படைகள் சேர்த்தனர். கல்கத்தாவில் கர்னல் லம்ஸ்டன் என்பவர் ஓர் சேனை திரட்டக்கருதியதில் உடனே நூறுகணக்காய் இந்தியாதேசத்து ஐஸ்வரிய கிருஷிகரெல்லாம் தங்கள் உயிரையும் ஒரு பொருட்செய்யாது அதில் சேர்ந்து சண்டைக்கேகினர். மற்றுமான இராஜவிஸ்வாச இந்தியப்பிரஜைகளெல்லாம், அவரவர்கள்

தேவதைகளுக்கு ஆராதனே முதலியவைகளைத் தொடங்கிக்கொண்டனர். அங்கிலேய இராஜாங்கம் ஜெபம் பெறும்படி சுவாமிகளைப் பிரார்த்தித்தனர். சிலர் கோவில்களில் ஆயிரந்தீபம், லக்ஷ தீபம் ஏற்றுகிற பிரார்த்தனைகள் புரிந்தனர். பின்னும் பலர் தங்கள் தங்கள் சக்திக்கியன்றவரையில், சண்டையில் மாண்டுபோன பிரிட்டிஷ் வீரரின் பெண்டு பிள்ளைகளுக்கு உதவிபண்டு பணத்திற்கு துட்டு சேர்த்தனுப்பினர். இந்தியாவிலிப்படியென்றால், ஆஸ்திரேலியா அமெரிக்கா இங்கிருந்தெல்லாம் படைகள் சேர்ந்து வந்தன. இங்கிலாந்திலோ எத்திசையிலும் பற்கடிப்பும், புலம்பலும், சஞ்சலமுமானது. எந்த வீதியிலும் அழுகைக்குரலே கேட்கப்பட்டது. எவ்வீட்டினுள்ளும் பெருமூச்சுகளும் கண்ணீரும் நிரம்பின. தென்னாபிரிக்காவிலிப்படியான சேதம் விளைந்துவிட்டதில் அநேக பெண்டுகள் கைமைகளாகவும் பிள்ளைகள் தகப்பனற்றதுகளுமாயின. ஓவென்ற புலம்பலின் இறைச்சலாய்விட்டது. இந்த பரிதாபகோலத்தைக்கண்ட அநேகர் கைமைகளுக்கும் அனாதைகளுக்கும் சகாய நிதிகள் சேகரிக்கத்துவங்கினர். அநேக பாலியர்கள் தங்களினத்தாருக்கு நேர்ந்த சேதத்தை யுன்னி போயர்களை அப்படியே அதம் பண்ணிவிட மனம் பதை பதைத்து சண்டைக்கேக சேனைகள் கூட்டிவிட்டனர். உடனே 40 ஆயிரம் மிலிடியாவீரர்கள் சீமையைக் காவல் புரியவும் சண்டைக்குப்போகவும் எழும்பிநின்றனர். அங்குள்ள எல்லா சேனைகளினின்றும் சண்டைக்குப்புறப்பட தங்களை வாலின்டியர்களாக எடுத்துக்கொள்ள கவர்ணமென்டாருக்கு தெரிவித்துக்கொண்டனர். அநேக பார்லிமென்ட் மெம்பர்களும் லார்ட் குடும்பத்தார்களும் சண்டைக்குக் கிளம்பினர். உடனே “இம்பீரியல் யோமன்றி என்ற நாமத்துடன் ஒரு படை சேர்க்க அநேகர் நூறுநூறு கணக்காய் சேர்ந்துவிட்டனர். லண்டன் பட்டணத்து வாசிகளான அநேகர் எழும்பிவிட்டு “சிட்டி ஆவ் லண்டன் இம்பீரியல் வாலின்டியர்” என்ற பெயருடன் அறுநூறு குதிரையேறிய வீரர் எழும்பிவிட இப்படியாக சேர்ந்த 1400 பேரடங்கிய சேனையை யனுப்ப முனிசிபாலிட்டியாரும் வர்த்தகர் முதலியவர்களும் பணஞ் சேகரிக்கத் தொடங்கி 75 ஆயிரம் பவுண் சேர்ந்தது. ஆஸ்திரேலியாநாடு, டாஸ்மீனியா நாடுகளில் குதிரையேறிய வீரர்களாக 1100 பேர், அரைபீல்ட் ஆஸ்பத்திரி 180 வீரரடங்கிய ஒரு பீல்ட் பத்திரியுடன் தயாராகினர். நியூஸிலன்டிலிருந்து 240 பேர்

4 ஆட்ச்கிஸ் பீரங்கிகளுடன் பிரயாணமாயினர். கானடா தேசமானது 2-வது படையாக தனித்தனி 6 பீரங்கிகளுடன் 3 பீல்ட்பத்திரி, 4 ஸ்குவார்டன் குதிரையேறிய ரைபில் படையாக மொத்தம் 1250 பேரனுப்பினது. இப்படியாக பிரிட்டிவ்ஷ் ராஜ்ஜியங்களிலிருந்தவர்களெல்லாம் தங்கள் தாய் தேசமான இங்கிலாந்துக்கு உதவிபுரிய ஓடோடி வந்தனர். இதற்குள் (வார் ஆபீஸ்) சண்டை ஆபீஸாரும் ஜனவரிமாத முடிவிற்குள் தென்னுபிரிக்காவிற்கு துணைப்படையாக 72 பீரங்கிகள் 3710 வீரர்கள் 2210 குதிரைகள் இவைகளை யனுப்பிவிட்டனர்.



# V-அத்யாயம்.

லார்ட் ராபர்ட்ஸ் வருகை:—இரண்டு பட்டணங்கள் விடுதலை:—பேர்போன கிராஞ்சி பிடிபடுகை.

இப்படியான அமளிகுமளிகளாய்விட்டதில் பார்லிமெண்டு சபை மந்திராலோசனை சபைகளிலெல்லாம் இனி செய்யவேண்டிய வழிவகைகளென்னவென் றாலோசிக்கக் கூட்டங்கள் கூடினர். அவ்வித கூட்டங்கள் கூடி ஆலோசித்ததில் அநேக பேச்சு பிரஸ்தோத்தரங்கள் நடந்து கடைசியாக வீராதிவீரரும் ஐயர்லாந்து போர்சுகளுக்கெல்லாம் கமான்டரின்-சீப்புமான லார்ட் ராபர்ட்ஸூம் அவருக்குச் சீப்ஸ்டாப்பாக பிரக்யாதிபெற்ற எகிப்திய வீரரான லார்ட் கிச்சினரும் சண்டை முகத்துக்கு அனுப்பத்தீர்மானமானது.



லார்ட் ராபர்ட்ஸ்.

ஸர் லார்ட் பிரெட்ரிக் ஸ்லீக் ராபர்ட்ஸ் P. C., K. P., G. C. B., V. C., என்னும் இந்த ஜெயப்பிரதாப வீரர் ஓர் இந்திய ஆபீஸரான ஸர் எபிராம் ராபர்ட்ஸின் குமாரர். இவர் காண்பூரில் 1832-ம் வருஷம் பிறந்தவரானாலும், சீமையிலுள்ள ஈடன், ஆடிங்கோம் கலாசாலைகளில் பயின்று வங்காளத்து பீரங்கி படையில் 1851-ம் வருஷத்தில் சேர்ந்து இந்திய சிப்பாய்க் கலகத்தில் கலந்திருந்து விக்டோரியா கிராஸ் என்னும் வீர மெடல் பெற்றவர். குவார்டர் மாஸ்டர் ஜெனரலாகவிருந்து 1868-ம் வருஷத்தில் அபிஸீனிய யுத்தத்தில் வேலை செய்தவர். ஆப்கானிய யுத்தத்தில் வெகுநாள் போராடி பிரிட்டிஷார் அலுத்துப்போகிற வேளையில் தான் முன்னேறி 15 நாளில் ஆப்கானை வசப்படுத்திவிடுவதாய் சபதம் கூறி அப்படியே சொற்ப காலத்தில் சாராஸியாவில் ஜெ

யம் பெற்றதிலும், காபூலிலிருந்து காண்டஹாருக்கு பெரும் பிரயாணஞ் செய்ததிலும் மிகுந்த கீர்த்தி பெற்றவர். இவர் 1892-ம் வருஷத்தில் லார்ட் பட்டம் பெற்று இந்தியா கமாண்டரின்சீப்பாகவுமிருந்து 1893-ம் வருஷத்தில் சீமைக்குத் திரும்பினர். இப்படியாக இவர் இந்தியாவில் 41 வருஷம் வேலை செய்து சீமைக்குச் சென்றும் அங்கும் ஐயர்லாந்து போர்சுகளுக்கெல்லாம் கமாண்டரின்-சீப்பாக நியமகம் பெற்றனர். இங்ஙனமான ஜெய வீரர் இப்போது இந்த யுத்தத்திற்கு கமாண்டரின்-சீப்பாக அதாவது பீல்ட்மார்ஷலாக பிரயாணமாகி வந்துவிட்டனர். இவர் இதுதான் முதல் தடவையாக இங்கு வந்தவரல்ல, இதற்குமுந்தியும் இங்குவந்துள்ளவர்தான். தாம் எழுதிய "இந்தியாவில் 41 வருஷம்' என்னும் புத்தகத்தில் இவர் தாம் அங்கு அனுப்பப்பட்டதைதெரிவிக்கிறதில், "1881-வதுவருஷ கடைசிவரைக்கும் நான் இந்தியாவிற்குத் திரும்பவில்லை. ஸர் ஜியார்ஜ் காலி மாஜூபா குன்றில் விழுந்து போய் ஆபத்திலிருக்கும்போது நான் கமாண்டரின்-சீப்பாக நியமகம் பெற்று போய்க்கொண் டிருக்கும்போதே, ஆச்சரியமாகவும் அதி சீக்கிரமாகவும், எதிர்ப்பாராத விதமாகவும் போயர்களோடு சமாதானஞ் செய்யப்பட்டுவிட்டது. ஐயோ! சமாதானமா! கவுரவமில்லாத சமாதானம். அதனுடைய பிரதிபலனைகத்தான் சமீப காலத்தில் விசனப்படத்தக்க விஷயங்கள் சம்பவமானது. நான் கேப்டவுனில் 24-மணி நேரந்தான் இருந்தேன். என்னை அவ்விடத்திற்கு அவசரப்படுத்த கவர்ண்மெண்டார் எவ்வளவு ஆவலோடிருந்தார்களோ; என்னை வரவழைத்துவிடவும் அவ்வளவு ஆவலோடிருந்தார்கள்' என்பதே. இவரின்மீது இவரின் வீரர்களுக்கு மெத்த பிரீதி. அதைக்கொண்டு இவரை "பாப்ஸ்" (Bobs) என்றும் மிகுந்த ஆசையோடழைப்பார்கள்.

இவர் தென்னாபிரிக்காவிற்கு லண்டன், பட்டணத்திலிருந்து பிரயாணமாகும்படி டிசம்பர் மாதம் 23-ந் தேதி நியமிக்கப்பட்டது. இப்படி இவரது பிரயாணமும் குறிக்கப்பட்டு விட்டதில் இவர் இராணியாரைக்கண்டு உத்தரவு பெறச்சென்று, இருவரும் சம்பாஷித்து, இராணியார் லார்ட் ராபர்ட்ஸுக்கு "குட்-பை" சொல்லியபோது இவரின் இருகரங்களையும் இராணியார் பிடித்துக்கொண்டு தமதுகண்களில் நீர்த்ததும்ப "லார்ட் ராபர்ட்ஸே! கடவுள் உ

ப்மோடும், எனக்காக வீரமாய்போர்புரிகிற என் எல்லா பராக்கிரம வீரரோடுமிருப்பாராக. எனது எல்லா வீரர்களுடைய ராஜபக்தியையும் அன்பையும் நான் எவ்வளவாய் உணருகிறேன் என்பதை அவர்களுக்கு தயவுசெய்துதெரிவியும். உம்மாலேயும் மற்றெல்லோராலேயும் செய்யவேண்டிய கடமை என்னவோ அது செய்யப்படடேதீரும் என நான் நன்கு அறிவேன்" என்றுசொல்லிய வுடனே லார்ட் ராபர்ட்ஸ் (Madam) "அம்மணீ! இங்கிலாந்தின் அநேகாயிரமான வீரர்கள் இராணியாரான தங்களை கண்ணால்தான் கண்டிருப்பார்கள். அவர்களே தங்களுயிரை மனப்பூர்வமாய் தத்தம் செய்வார்களாயின், நான் கண்ணால் கண்டது மாத்திரமல்ல, என்னுடைய இராணியாரை பூரணமாகவு மறிவேனே! அப்படியானல் மகிமையும் அன்பும் பொருந்திய தமக்காக என்னுயிரை முதலாய் தத்தம் செய்யவேண்டியதாயிருக்கிறது' எனக்கூறி விட்டுத்திரும்பினர்.

பிறகு குறிக்கப்பட்ட டிசம்பர்மாதம் 23-ந்தேதியும் வந்தது. அன்றையதினமோ, திருப்திகரமற்ற காலநிலையாகவிருந்தது. சூரியனனது தன்து பிரகாசத்தைகாட்டாது மந்தாரமப்புக்குள் ஒளிந்துகொண்டதுபோல மந்தாகாரமா யிருந்தது. ரெயில் வண்டியானது வாடர்லூ ஸ்டேஷனைவிட்டு சென்றவுடனே மிருகனத்த மூடுபனி லண்டன் பட்டணத்தையே கப்பிக்கொண்டது. இப்படியான நல்ல காலநிலையாயில்லாதது ஓர் கெட்ட சகுணமென்றே, லண்டன் டைம்ஸ் பத்திரிகைகூறியது. எனினும் காலநிலை நல்லதாக இல்லாதிருந்தும் லார்ட் ராபர்ட்ஸிற்கு குட்-பை (Good-Bye) அதாவது வாழ்த்து சுபம் கூறும்படியாக ஸ்டேஷனில் ஜனங்கள் திரள் திரளாககூடியிருந்தனர். அதோடு வேல்ஸ் இளவரசர், கன்னுட்பிரபு, கேம்பிரிட்ஜ்பிரபு இன்னும் பெரும் பெருந்தலைகளெல்லாம் வந்திருந்தனர். அநேகமான ராணுவ உத்தியோகஸ்தர்களும் பீல்ட்மார்ஷல் ஸர் டானேள்ட் ஸ்டீவர்ட்டும் வந்திருந்தனர். வந்திருந்த ஒருவராவது இராணுவ உடுப்பு தரித்திருக்கவில்லை. லார்ட் ராபர்ட்ஸும் சிவில் உடுப்பையேதான் உடுத்தியிருந்தனர். மேலும் அங்குவந்திருந்த ஸ்திரீகளெல்லாம் லார்ட் ராபர்ட்ஸின் மகன் இறந்துபோன துக்ககுறியாக கறுப்புடுப்பு உடுத்தியிருந்தனர். வண்டியிலிருந்த லேடி ராபர்ட்ஸும் அவர்கள் குமாரத்திகளும் மிகக்கடிய விசனக்குறியுள்ள உடை உடுத்தியிருந்தனர். பிரயாணத்தின் கடைசி நிமிஷம்வரை லார்ட் ராபர்ட்ஸ், வேல்ஸ் இளவரசர் மற்றும் பெ

ரியோர்களிடமே சம்பாஷித்துக்கொண்டிருந்து பிரயாண நேரத்தில் சடுக்கென பார்லிமென்ட் மெம்பரான மிஸ்டர் பெல்போரைப் பார்த்துவிட அவருக்கு குட்பை சொல்லிக்கொண் டிருக்கும்போதே வண்டியும் நகரத்தொடங்கியது. உடனே லார்ட் ராபர்ட்ஸ் வண்டியின் படிமீது குதித்தேறியதும் ஜனங்கள்போட்ட ஆரவாரத்தொனிக்கு பிரதிமறுமொழியாக தன் தொப்பியைக்கழற்றி வந்தனம் புரிவதற்கொப்பாக ஆட்டிக்கொண்டேசென்றனர். அப்படியே வந்திருந்த ஜனங்கள்யாவரும் வண்டி கண்ணுக்கு மறையும்வரை தொப்பிகளையும் கைக்குட்டைகளையும் விசிறிக்கொண்டே யிருந்தனர். பிறகு வண்டி தன் வழியை நோக்கிச்செல்ல ஜனங்களும் கலைந்துவிட்டனர். ரெயில் வண்டியானது மிகுந்த காம்பீரமாகச்சென்று சௌத்தாம்டன் வந்துநிற்க, அங்கும் லார்ட் ராபர்ட்ஸுக்கு குதூகலத்துடன் நல்வரவு கொடுக்கப்பட்டு தமக்காக முஸ்திப்பு செய்து தயாராகவிருந்த "டாம்ணூட்டர் காஸெல்" ஸ்டீமர்வற, தமதுசிநேகர் பரிவாரத்தார், பத்தினி இருபுத்திரிகளுடன் வாராவதிமீது சென்றுகொண்டிருந்தபோது அங்கு காவலாக நிறுத்தப்பட்டிருந்த கானிஸ்டேபில்களில் ஒருவனான ஆட்ஸன்என்பவனின் மார்பில் ஆப்கானியமெடல் ஜுவாலிக்க அதைநோக்கி அருகில்சென்று, அவனும் தன்னோடு காண்டஹார் பெரும் பிரயாணத்தில் வந்தவனாகக்கண்டு உற்சாகமடைந்தனர். பிறகு ஸ்டீமர் ஏறி அங்கு தமது பத்தினி இருபுத்திரிகளிடம் விடைபெற்றுக்கொள்ள அவர்களும் ஸ்டீமரிலிருந்து இறங்கிவிட்டனர். பிறகு காலை 6½ மணிக்கு மிகுந்த ஆரவாரதொனியின் மத்தியில் ஸ்டீமரானது மகன்கொல்லப்பட்ட தேசத்திற்கு தகப்பனை ஏற்றிக்கொண்டு பிரயாணமானது. பிறகு லேடி ராபர்ட்ஸும் அவர்களின் இருமக்களும் மிகுந்த துக்கத்துடனே ஸ்பெஷல் வண்டியேறி லண்டன் பட்டணத்திற்குத் திரும்பினர்.

இப்படியாக இவர் பிரயாணமாகி ஜிப்ரால்டர் பட்டணம் வந்து சேர்ந்து தமக்கு சீப்ஸ்டாப்பாக நியமகம்பெற்ற லார்ட் கிச்சினர். G. C. B., K. C. M. G., (Major General Lord Kitchener of Khartoum G. C. B., K. C. M. G., &c.) அவர்கள் எகிப்திலிருந்து வருவதை எதிர்நோக்கினர். இந்த லார்ட் கிச்சினர் சௌதானில் மிகுந்த கலகஞ் செய்துகொண்டிருந்த மகமதியர்களை சங்காரம்புரிந்து அவர்களுடைய தலைவனாகிய கலிபாவையும்

கொன்று கலகத்தை யடக்கி ஸர்தார் பட்டம் பெற்றவர். இவர் மிகுந்ததீரஸ்தன், வயதோ 50 என்றாலும் கலியாணமில்லாத பாலியரே. இவரும் எகிப்திலிருந்து அலெக்சான்டிரியாபட்டணம் வந்து சேர்ந்து அங்கிருந்து ஸ்டீமர்ஏறி மால்டாவந்து, மால்டாவிலிருந்து சண்டைக்கப்பலொன்றில் ஏறி ஜிப்ரால்டர்வந்து லார்ட் ராபர்ட்ஸை சந்தித்தனர். உடனே அங்கிருந்து இருவரும் பிரயாணமாகி ஜனவரி மாதம் 10-ந் தேதியன்று கேப்டவுன் வந்திறங்கி தங்களது படையெழுச்சிக்குத் தகுதியான போர்சுகளை சவகரிப்பதில் வேலை தொடங்கினர். லார்ட் ராபர்ட்ஸ் வந்து சேர்ந்ததும் முதலாவது தம்மோடிருந்து வேலை செய்யப்போகிற பிரிகேடுகளை நோக்கி சில புத்திமதிகளடங்கிய உபன்னியாசம் ஒன்று செய்து அதோடு தமது பத்தினியாரும் போர் முகத்தில் வந்துநிற்கிற சேனாவீரர்களின் பெண்டு பிள்ளைகளுக்காக உழைப்பதையும் கூறினர். சேனாவீரர்களும் லார்ட் ராபர்ட்ஸுக்கு 3-வந்தனோபசார மொழிகள் (Cheers) கூறி, அப்படியே லேடி ராபர்ட்ஸுக்கும் 3 வந்தனோபசாரம் கூறினர். பிறகு லார்ட் ராபர்ட்ஸ் தமது பரிவாரத்துடன் பெப்ரவரி மாதம் 9-ந் தேதி மாடர் நதி வந்து சேர்ந்ததும் தமது வேலையைத் தொடங்கினர். தொடங்கினதும் இவரது யூகையின்பேரில் ஜெனரல் பிரென்ச் தமது காவல்ரி (குதிரை) படையுடன் ஜேகப்ஸ்டாலுக்கு நேராக ரையட் நதியைக் கடந்து அந்நதிக்கும் மாடர் நதிக்கும் கோணமாயுள்ள பாகத்தில் முன்னேறி எதிரிகளுடைய பாளையங்களைப் பிடித்து வட கரையைத் தாங்கி நின்றனர். அடுத்த நாளே ரையட்ஸ் நதியை டீக்கல் ஸ்டிரிப்டண்டை 6-வது, 7-வது டிவிஷன்கள் கடந்துவிட ஜெனரல் பிரென்ச் தமது காவல்ரி படையுடன் இன்னும் மேற்கு முகமாய்த் திரும்பி மற்றும் 3 போயர் பாளையங்களைக் கைப்பற்றினர். இந்த ரையட் நதியில்தான் மாடர் நதிவந்து கலந்து ஆரஞ்சிநதியில் போய்விழுந்து மேற்கே ஓடி அத்லாந்திக் சமுத்திரத்தில் கலக்கிறது. இந்நதியைக்கடந்துவிட ஜெனரல் பிரென்சின் முழுக்காவல்ரி படையானது மாகர்ஸ்பாண்டீனுக்கு கிழக்கும் மாடர்நதிக்கு மேற்குமான இடத்திலும் 6 - வது டிவிஷன் இதைத் தாங்கிக்கொண்டும் இதற்கு பிந்தி 7-வது டிவிஷன் தாங்கிக்கொண்டுமிருந்தன. பிறகு 13-ந்தேதியன்று ஜெனரல் பிரென்ச் லார்ட் ராபர்ட்ஸின் யோசனைப்படி முன்னேறி எதிரிகளை விரட்டி படிப்படியே இரண்

டோரைக்கெல்லாம் கிப்டிரிப்ட், டிரிபுட்டிரிப்ட் இவைகளைக் கைப்பற்றிவிட்டு 15-ந்தேதி யன்று கிம்பர்லிமீது ஏறினர். ஏறினதும் கிம்பர்லிக்கு 18-மைலிலும் 4-மைலிலுமாக 2 போர்புரிந்துவிட்டு கிம்பர்லியுள் புகுந்து விடுதலை செய்துவிட்டனர்.

இப்படி யிவர் விடுதலை செய்துவிட்டதில் இவருக்கு நேர்ந்த சேதம் 20 பேர் தான். இங்ஙனம் கிம்பர்லியின் உள்சென்று விடுதலை செய்துவிடவே அங்கு அடைப்பட்டுக் கிடந்தவர்களெல்லாம் மிகுந்த குதூகலத்துடன் ஆர்ப்பரிக்க கெனிகளில் அநேக நாட்களாய் ஒளிந்துகொண் டிருந்தவர்களெல்லாம் வெளிகிளம்பினர். அதிலிருந்தவர்களோ, வெளேரென வெளுத்துப்போய் பஞசத்திலடிப்பட்டவர்களைப் போலிருந்தனர். இதை மீட்டு விட்டதற்காக ஜெனரல் பிரென்சுக்கு மேஜர் ஜெனரல் பட்டமும் அப்பட்டணத்தை வெகு யூகையாய் காத்துநின்ற லெப்டினெண்ட் கர்னல் கிக்குவிக்குக்கு கர்னல் பட்டமும் உடனே கொடுக்கப்பட்டது. இம்மீட்சியை முன்னிட்டு இங்கிலாந்து இந்தியா மற்றும் பிரிட்டிஷ் இராச்சியங்களிலெல்லாம் வந்தனோபசார Cheers அகமகிழ்சி கொண்டாடினர். மறுநாளே லார்ட் ராபர்ட்ஸ் மாகர்ஸ்பாண்டீன் குன்றங்களிலிருக்கும் போயர்களுக்கு ரஸ்துக்கள் போக ஏதுவாயிருந்த ஜேகப்ஸ்டாலைப் பிடித்துவிட்டனர். இப்பட்டணத்தை போயர்கள் எளிதில் விடவில்லை. 300 பேராயிருந்த எதிரிகள் மிகவாக எதிர்த்து நின்றார்களாயினும் கடைசியாக மிகுந்த சேதத்துடன் பின்னடையப்பட்டனர். இதில் பிரிட்டிஷாருக்கு 2 பேர் கொல்லப்பட்டும் 7 பேர் காயமுமடைந்து சேதமாயினர். இப்பட்டணத்துள் பிரிட்டிஷார் உள்நுழைந்து பார்க்க தங்களது குண்டு பிரயோகங்களில் அங்குயாதொன்றும் சேதமில்லாமலும் ஸ்திரீ பிள்ளைகளும் க்ஷேமமாக விருந்தனர். அதோடு ஜெர்மன் வாலண்டியர் ஆஸ்பத்திரியுமிருந்தது. இப்பட்டணம் எலிக்டிரசிட்டி அதாவது மின்சார விளக்குகளாலேற்றப் பட்டிருந்தது. இதற்குள் போயர்களும் தங்களது தளபதியான கமான்டெண்ட் கிராஞ்ஜியுடன் மாகர்ஸ் பாண்டீனைவிட்டு துரிதமாக புளோயம் பாண்டீன் பக்கம் ஒட்டமெடுக்கத் தொடங்கினர். இப்படி இவர்கள் இரவிற்கிரவே பிரயாணப்பட்டு விட்ட காபுராவில் பெரிய பீரங்கி யொன்றையும் அநேக உணவு, மருந்து ஆயுதங்கள் முதலியவைகளையும் விட்டு விட்டனர்.



ஜெனரல் கிராஞ்ஜி.

இந்த கமாண்டெண்ட் கிரான்ஜி என்பவர் ஒரு பேர்போன பராக்ரம வீரன். யுத்தத்தில் எவ்வளவு வல்லமைசாலியோ, அவ்வளவிற்கு கல்வியிலும் விவேகத்திலும், தந்திரத்திலும் சமயோசித புத்தியிலும் ஸ்திரமானவர். செல்வத்திலும், பூஸ்திதி முதலாகியதிலும் நல்ல அந்தஸ்து பெற்றவர். இவரது யுக்தி சாதுரியத்தை முன்னிட்டே "யுத்தத்தின் சாமி" என போயர்கள் இவரை சொல்லிக் கொள்வார்களாம். கழுகைப் போல சண்டையில் எதிரிகளின் சேனை வருகையை பார்த்துக்கொள்வதோடு நரியைப்போல அவர்களின் ஸ்தானத்தையும் முகர்ந்து வாசனையாலேயே கண்டுகொள்ளும் சமர்த்துடையவராம். முந்தியுமிவரிடத்தில்தான் கலகஞ்செய்த டாக்டர் ஜேமிஸனும் டான்கார்ப்பின் சண்டையில் சரணடைந்துவிட்டது. இவர் மூயி ஆற்றையடுத்த பாட் செப்ஸ் டுரூமில் குடியானவர்களின் ஒரு பெரும் ஜமீன்தாரியானதால் இவர் ஏராளமான பசுக்கள்வைத்து வேலை நடத்திவந்தவர். இவரதினால் பெரும் ஆஸ்திக்காரரானாலும் சண்டையில் மெத்த பிரீதிகொண்டவரானதால் போயர் சண்டையில் தலைவராயிருந்தனர். இப்பேர்பட்ட வீரர் கொஞ்சத்தில் இப்படியான இடுமுடுக்கி லகப்படமாட்டாராயினும், காலவசத்தால் எதிர்த்துநின்றிருந்து கடைசியாக லார்ட் ராபர்ட்ஸின் சேனை வெள்ளத்தைக் கண்டு திக்பிரமை கொண்டுவிட்டனர். இவர் மாகர்ஸ் பான்டீனிலிருக்கும்போது லார்ட் ராபர்ட்ஸின் சேனை வெள்ளத்தைக்கண்ட போயர்களின் பிரெஞ்ச் ஆபீஸரான கர்னல் டி – வில்லிபாய்ஸ் மாரியல் என்பவர் இது விஷயமாய் கிராஞ்ஜிக்குத் தெரிவித்து, அங்கு தரித்திராமல் வந்து விடும்படியாகவும், இல்லையேல் அகப்பட்டுக் கொள்வாய் எனவும் ஆள்மூலமாய்த் தெரிவிக்க, அதற்கு கிராஞ்சி, வந்த ஆளிடத்தில் "அவன் தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே நான் சண்டைக்காரனாயிருக்கிறேன்." என அந்த அன்னியனுக்குச்சொல்" என பதிலுரைத்தனுப்பினராம். இப்படியான சமர்த்

தாய்ப்பேசியும் லார்ட் ராபர்ட்ஸ் அருகாமையாய் வந்துவிட்டதின் பேரில் மாகர்ஸ் பான்டீனிலிருந்து ஓடத் துவங்கினர். உடனே ஜெனரல் கெல்லிகென்னி தமது டிவிஷனுடன் துரத்தத் தொடங்கி அவரும் கிட்டுமுட்டும் நெருங்கி 7300 கெஜத்தில் பீரங்கி குண்டு வெடிகள் பிரயோகித்தனர். அப்படியே விடாது துரத்திக்கொண்டேபோனதில் சிறுகச்சிறு மருந்தாயுதங்கள் உணவுவகைகளிவைகளடங்கிய 78 வாகன்கள் பிடிக்கப்பட்டன. இதற்குள் ஜெனரல் நாக்ஸ் 12-வது பிரிகேடுடன் சென்று எதிரிகளின் முக்கிய பகுதியைத் தாக்கினர். அன்று முழுதும் ஓடிக்கொண்டே போர் நடந்தது. ஒவ்வொருதடவையும் எதிரிகள் முன்னேற ஏற பிரிட்டிஷாரின் குதிரை காலாட்படை எதிர்நோக்கி மறைத்தது. ஆயினும் எதிரிகளின் முக்கிய பகுதியைத்தாக்க துணைப்படையை எதிர்நோக்கி பீரங்கி பிரயோகஞ் செய்யக்கூடாதிருந்தது. பெப்ரவரி 17-ந் தேதி ஜெனரல் போல்காரியூ மாகர்ஸ் பான்டீன் போயர் ஸ்தானங்களுக்கு முன்னேற அங்கு எல்லாம் காலாகோலமாய் பாளையங்கள் விடப்பட்டிருந்தன. உடனே அப்பக்கத்தில் போயர்களால் பெயர்க்கப்பட்டுவிட்டிருந்த இருப்புப்பாதைகள் செவ்வை செய்யப்பட இன்ஜினியர்களமர்த்தப்பட்டனர். 19-ந் தேதிக்குள் பாதையும் செவ்வைப்படுத்தப்பட ரெயில்வண்டி போக்குவரத்தும் தொடங்கியது. லார்ட் மெத்யூனும் கிம்பர்லிக்கு துணைப்படையுடன் சென்றனர்.

இப்பால் மறுபக்கம் போயர்கள். பிரீஸ்டேட்டுள் புகுந்துவிட பிரிட்டிஷாரும் அவர்களைத் தொடர்ந்தே பிரீஸ்டேட்டுள் புகுந்துவிட்டு பின்தொடர்ந்துகொண்டேயிருந்தும் சடுக்கென இரவி லிவர்களுக்கும் தெரியாது போயர்கள் நழுகிவிட மறுநாள் காலை சங்கதி தெரிவிக்கப்பட்டு குதிரைப்படை பீரங்கிப்படைகள் ஒரு பக்கமும் லார்ட் கிச்சினர், 6-வது டிவிஷனுடன் கிழக்குப்பக்கமாகவும் அனுப்பப்பட்டதோடு ஜெனரல் கெல்லிகென்னியின் டிவிஷன் மாடர்நதியின் ஓரமெல்லாம் வேலைசெய்தனர். இதற்குள் ஜெனரல் பிரென்சும் பின்னடைந்தோடுகிற போயர்களை மடக்க கிம்பர்லியிலிருந்து ஒருபக்கம் புறப்பட்டனர். இவர்களும் சமயத்திற்கு வந்து சேர்ந்துவிட்டதில் 18-ந்தேதியன்று(ஞாயிற்றுகிழமை) பார்டிபர்க்கில் மிகக் கொடிய போர் ஒன்று நடந்தது. கமான்டெ

ன்ட் கிராஞ்ஜி மிகு சமர்த்தாக மாகர்ஸ்பான்டீனிலிருந்து கிளம்பி தப்பிக்கொள்ள முயற்சித்தும் கடைசியில் இடுமுடுக்கில் மாட்டிக் கொண்டார். அவரின் முக்கிய பகுதிசேனை மாடர்நதிப்படுக்கையில் நல்ல வசதியாக அகப்பட்டுக்கொண்டது. அதற்கு முந்தியநாளாகிய சனிக்கிழமை இரவே பிரிட்டிஷ் குதிரையேறிய காலாட்படைகள் கமான்டன்ட் கிராஞ்ஜியின் பின் அணியைத் தொடர்ந்து முக்கிய பகுதியை பின்னுக்கே துரத்தினது. உடனே போயர்கள் மாடர்நதிப் படுக்கையில் இரவிற் கிரவே ஸ்தாபனஞ்செய்து குதிரையேறிய காலாட்படை முன்னேறுவதை தடுத்தனர். மறுநாள் காலை பிரிட்டிஷாரின் மற்றும் பகுதிகள் வந்துவிட நதியின் இருகரையையும் நெருக்கிப்பிடித்து கிராஞ்சியை வளைத்துவிட்டனர்.

## பார்டிபர்க் சண்டை.

### இரவும் பகலும் 9-நாள் பெரும் பயங்கர யுத்தம்!

இப்பால் ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 7½ மணிக்கு இருதரத்தாரும் சண்டை துவங்கினர் எதிரிகள் விடும் குண்டுகள் மிகு மும்முரமாயிருந்தன. பிரிட்டிஷ் படையார் இரண்டொருதடவை போயர் பாளையத்துள் புகுந்துவிட நெருங்கியும் அவர்கள் துப்பாக்கி பிரயோகங்கள் அக்கினி மாரிபோல் வந்து எரித்ததில் பின்னடைந்துவிட்டனர். இதற்குள் பிரிட்டிஷார் விட்ட குண்டுகளினால் போயர்கள் பக்கமும் மிகுந்த நஷ்டத்தை விளைவித்தது. போயர் பாளையத்திலிருந்த அநேக வாகன்கள் தீப்பிடித்துக்கொண்டதில் அன்றிரவெல்லாம் எரிந்துகொண்டிருந்தன. பீரங்கிகுண்டுகளின் சத்தத்தோடு துப்பாக்கிக்குண்டுகளின் சத்தமும் கலந்து மிகுந்தபயங்கரத்தை விளைவிக்கத் தக்கதாயிருந்தது. போயர்களோ உடலுக்கும் உயிருக்குமாய் ஒட்டி போர்புரிந்து நின்றனர். பிரிட்டிஷாரும் அடிக்கடி பாளையத்தை நெருங்க முயற்சித்தும் பின்னடையச்செய்யப்பட்டனர். அன்றிரவெல்லாம் வீரர்கள் இரணக்களத்திலேயே படுத்துத் தூங்க, கூலிக்காரர்கள் செத்துக்கிடந்த பிணங்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிச்சென்றனர். இதனடுவில் பிரிட்டிஷ் சேனைகள் நள்ளிரவிலேயே போயர்களின் பாளையத்தைச் சுற்றி

வெகு தூரத்தில் கொஞ்சம்கூட சந்துவிடாது சூழ்ந்துவிட்டனர். அன்று முழுதும் வீரர்கள் குடிக்கத் தண்ணீர்தானுமின்றி மிகவே வருந்தினர். ஜெனரல் மெக்டானுள்டும் காலில் அசகாயமடைந்த னர். மறு நாள் 19-ந் தேதி திங்கட்கிழமை விடிந்ததும் போயர் கள் அன்று இரவிற்கிரவே ஸ்தானங்களைப் பலப்படுத்திக்கொ ண்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கே ஜெனரல் கிராஞ்ஜி தனது வீரரின் பிணத்தைப்புதைக்க சண்டையை நிறுத்தும்படியா க 24-மணி நேரம் கேட்க, லார்ட் கிச்சினர் அதற்கிசையமாட்டே னென்று மறுத்துவிட்டனர். இதன்பேரில் மறுபடி ஜெனரல் கிரா ஞ்ஜி "செத்தவர்களைப் புதைக்கும்படி சண்டையை நிறுத்த பிரிட் டிஷார் அவ்வளவு ஈவு இதக்கமற்றவர்களா யிருப்பதால் சரணடை வதைவிட வேறு வழியில்லை" எனச்செய்தி அனுப்ப, உடனே லார் ட் கிச்சினர் அவரைப் பிடித்துக்கொள்ளும் ஒழுங்குகளைச் செய்யு ம்படி போயர் பாளையத்திற்குச் சென்றுகொண்டிருக்குஞ் சமயத் தில் எதிரே ஒருவன் ஓடோடி வந்து ஜெனரல் கிராஞ்ஜி சரணடை யப் போகிறதில்லை. மரணமடையும்வரை போர்புரியக் கருதியிருக் கிறார் எனச்சொல்லவும் லார்ட் கிச்சினர் பின்னுக்குத் திரும்பி எதிரிகள்மீது குண்டு பிரயோகஞ் செய்ய உத்தாவளித்தனர். 18–வது, 62–வது, 75–வது, 76–வது, 81–வது, 82–வது பீல்ட் பத்திரி களும், 65–வது ஹவிட்ஸார் பீரங்கி படையும், 2-நாவல் பீரங்கியும் அநேக 4.7 அங்குல பீரங்கிகளும் நாலா பக்கமும் சுற்றி கொடிய குண்டு பிரயோகஞ் செய்தன. போயர்களும் எதிர் தாக்குதலில் மிகுந்த சமர்த்தாய் பதில் குண்டு விடுத்துக்கொண்டிருந்தனர். போயர்கள் பக்கமோ மிகுந்த கொடிய சேதமாயின. பிரிட்டிஷா ரும் கொடிய நெருப்பிலேயே வேலை செய்தனர். பிரிட்டிஷாரின் ஷிராப்ஷைர் படையே ஞாயிற்றுக்கிழமையிலிருந்து விடாது போய ர் பாளையத்தைத் தாக்ககிட்டே அணுகி அணுகி கடைசியாக வியா ழக்கிழமை 200 கெஜத்தில் சமீபித்துவிட்டனர். போயர்கள் பாளை யத்தில் ஸ்திரீகளும் பிள்ளைகளுமிருந்து வருந்துவதைக் கண்ட லார்ட் ராபர்ட்ஸ் ஜெனரல் கிராஞ்ஜிக்கு சமாசாரமனுப்பி, ஸ்திரீக ளையும், பிள்ளைகளையும், அவர்களுக் கிஷ்டமான இடத்திற்கு அனு ப்பிவிடவும் அதோடு தேவையாயின் மருந்து வகைகளும், டாக்

டர்களும் கடனுக அனுப்பி வைப்பதாகவும் கேட்க, கிராஞ்ஜி வேண்டாமென்றே மறுத்துவிட்டனர். ஷிராப்ஷைர் படை இப்படியாக கஷ்டத்தோடு 200 கெஜத்தில் வந்து காவல் செய்ய அவர்களே கார்டன்ஸ் படை மார்பால் நகர்ந்து ஊர்ந்துசென்று விடுவித்தது. அந்த விடுவித்தல் பெரும் விநோதமாயிருந்தது. கார்டன்ஸ் படையார் படுத்துக்கொள்ள அவர்கள் தேகத்தின்மீது புரண்டு கொண்டு மார்பாலேயே நகர்ந்துவந்தனர். அப்படிப்பட்ட கொடிய அக்கினி மழை போயர்களால் வருஷிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வீரர் இப்படியாக கொடிய நெருப்பில் வெந்துதணிந்து சரியான அன்னுகாரமின்றியிருப்பினும் யாதொன்றுக்கும் முரணவில்லே. உற்சாகத்தோடேயே வேலேசெய்தனர். ஒவ்வொரு நாளும் சிலகெஜதூரம் முன்னேறுவதும் பள்ளங்கள் தோண்டிப் பதிவிருப்பதுமாகவே யிருந்தனர். ஜெனரல் கிராஞ்ஜியின் சங்கதியிப்படி நாலாபக்கமும் சூழப்பட்டு விட்டிருக்க ஆயிரம் போயர்களடங்கிய ஒரு படை கமான்டென்ட் டிவெட்டினுல் நடத்தப்பட்டு பிரிட்டிஷ் காவலாரைத்தாக்கி உள்புகுந்து கிராஞ்ஜியை விடுவிக்கும்படியான அவ்வளவு சமீபத்தில் திடீரென வந்துவிட்டனர். உடனே பிரிட்டிஷார் அவர்களுடன் கடும்போர் புரிந்து கொடிய சேதத்துடன் துரத்த, மற்றொரு பக்கம் போய்தாக்கினர். அங்கும் பின்னடைய, மூன்ருவதாக மற்ருேர் இடத்தில் எதிர்த்தனர் அங்கும் பெருமித சேதம் விளேந்துவிட்டதில் பின்னடைந்தே போய் விட்டனர். பிறகு பிரிட்டிஷ் வேவுக்காரர் அடிக்கடி ஆகாய கூண்டிலேறி கிராஞ்ஜி பாளேயத்தின் சங்கதிகளே தெரிவித்துக் கொண்டிருந்ததில் அவர்களிடமிருந்த மருந்து வகைகளடங்கிய 4 வாகன்களிருந்த ஸ்தானத்தை யறிந்து வெடிகுண்டுவிட்டு வெள்ளிக்கிழமையன்று அதில் தீப்படச்செய்ததில் அப்படியே அவை வெடித்துவிட்டன. இப்படியாக தினநிதமும் அதம் பண்ணிக்கொண்டேயிருந்து கடைசியாக பெப்ரவரி மாதம் 27-ந் தேதியன்று விடியற்காலே கானடியபடை, கார்டன் படை, ஷிராப்ஷைர் படைகளிவைகளெல்லாம் மிக மும்முரமாய்த் தாக்கி சரேலென 80 கெஜத்தில் வந்துவிடவும் ஜெனரல் கிராஞ்ஜி அதிகமான சேதத்தை முன்னிட்டு தானும் தன் சேனேயும் இணங்கிப்போய் விட்டதாகச் சொல்லி துப்பாக்கிகளேக் கீழே போட்டு விட்டனர்.

இங்ஙனம் சரணடைந்துபோக காலை 6 மணிக்கு வெள்ளைக் கொடி தூக்கப்பட்டது. இது பிரிட்டிஷாருக்கு பெருஞ் ஜெயமேயாயினும் சேதமோ அபரிமிதம். அநேகாபீஸர்கள் விழுந்துபோயினர். முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்று மாத்திரம் 750 பேர் வீழ்ந்தனர். இப்படியே மீதியான 8 நாளும் நூறு நூறு கணக்காய் சேதமாயினர். போயர்களின் பக்கமும் மிகக்கொடுமையே! ஜெனரல் கிராஞ்ஜி ஆபத்தில் அகப்பட்டுக்கொள்ளும்படியான இடுமுடுக்கிலானதை யறிந்ததும், உடனே தம்மிடமிருந்த 10 ஆயிரம் சேனுவீரரில் 5 ஆயிரம் பேரை தெரிந்துகொண்டு மீதியானவர்களை தங்கள் இஷ்டம்போல தப்பிக்கொள்ளச்சொல்லி விட்டனர். தப்பித்துக்கொள்ள பிரயத்தனப்பட்டதில் இதில் எத்தனை பேர் சேதமாயினரோ தெரியவில்லை. ஆனல் சரணடைந்தவர்களெல்லாம்கூடி 47 ஆபீஸர்களுட்பட 4000 பேரே. அப்படியானல் ஒராயிரம் சேதமிருக்கலாம். இதில் 1500 பேர் பிரீஸ்டேட்டர்கள்.

சேதமிப்படியானல் காலை 6 மணிக்கு போயர் பாளையத்தில் சரணடைந்து விடுவதாக வெள்ளைக்கொடி காண்பிக்கப்பட்டதும், உடனே ஜெனரல் பிரெட்டிமான், போயர் பாளையத்திற் கனுப்பப்பட்டார். இவருஞ்சென்று 7 மணிக்கெல்லாம் ஜெனரல் கிராஞ்ஜியை அவர் ஏ-டி-காம்ப், செகிரடெரி இவர்களுடன் பிரிட்டிஷ் பாளையத்திற்கு கொண்டுவந்தனர். ஜெனரல் கிராஞ்ஜியின் முகம், நெருப்பில் கருகியிருந்தமேதாடு தாம் உடுத்தியிருந்த உடையின் ஓரம் சுருண்டிருந்தது. பெரிய சாம்பல் வர்ண தொப்பி, கரும்பச்சை வர்ண நீண்டகோட்டும், கறுப்பு கால்சட்டையும் (Trousers) சிவந்த பூட்ஸும், மாஞ்சிவப்பு தோல்பையைத் தோளிலு மணிந்தவராய் கையில் ஒரு கனத்த தடி பிடித்துக்கொண்டுவர, இவர் வரவிற்கு மரியாதையாக பிரிட்டிஷாரின் சிபோர்த் படையாரை வரிசையாக அணிவகுத்து நிறுத்தி, லார்ட் ராபர்ட்ஸ் தமது காக்கி இராணுவ உடைதரித்து பட்டயமணிந்தவராய் பரிவாரத்துடன் எதிர் நோக்கியிருந்தனர். போயர் ஜெனரலையு மவர் பரிவாரத்தையும் ஜெனரல் பிரட்டிமான் அழைத்து வந்து சேர்ந்ததும், லார்ட் ராபர்ட்ஸ் "கமாண்டென்ட் கிராஞ்ஜி, ஐயா" (Commandant Cronje, Sir.) எனவும், கிராஞ்ஜியும் தமதுகையால் தொப்பியைத் தொட்டு லார்ட் ராபர்ட்ஸுக்கு வந்தனம் புரிந்தனர். லார்ட் ராபர்ட்ஸும் பிரதிவந்த

னைக்கூறி ஒரு அடி முன்சென்று ஜெனரல் கிராஞ்ஜியுடன் கை குலுக்கி "நீர் மகா வீரத்துவமாய் எதிர்த்து நின்றீர், ஐயா! (You have made a gallant defence Sir!) என்று கூறி, பிறகு அவரை உள்ளே அழைத்துச்சென்று உட்காரச்செய்து சில நேரம் இருவரும் உற்சாகமாய் சம்பாஷித்தனர். இப்பேச்சுகளை கிராஞ்ஜியின் செகிரடெரியான கெய்ஸர் இன்டர்பிரிடராக (துவிபாஷியாக) மொழி பெயர்த்துச் சொல்லிக்கொண்டிருந்தனர். ஜெனரல் கிராஞ்ஜி தமது மனைவி, மகன், பேரன், செகிரடெரி, எய்-டி-காம்ப் இவர்களெல்லாரும் தன்னுடன் எப்போதுமிருக்க லார்ட் ராபர்ட்ஸை கேட்டுக்கொள்ள அப்படியே சம்மதித்தப் பிறகு ஜெனரல் கிராஞ்ஜி பரிவாரத்துடன் காலை போஜன மருந்தினர். எனவே ஜெனரல் கிராஞ்ஜி பிரிட்டிஷாரின் கையிலகப்பட்டு விட்டனர்.

1881-ம் வருஷம் இதேமாதம் இதே தேதியில் பிரிட்டிஷாரை "மாஜூபா" குன்றில் தோற்கடித்த வெற்றி வீரனான இந்த கிராஞ்ஜி அதே மாஜூபா தினமான அன்றே பிரிட்டிஷாரின் கையில் சிக்கிக்கொண்டது மெத்த ஆச்சரியமும் மிகுந்த குதூகல சந்தோஷமுமான செய்தியாயிருந்தது. உடனே காலை 7½-மணிக்கெல்லாம் லார்ட் ராபர்ட்ஸ் வார் ஆபீஸூக்கு பின்வருமாறு தந்தியடித்தனர். "பார்டிபர்க் பெப்ரவரி 27-ந் தேதி; 7-45-மணிக்கு ஜெனரல் கிரான்ஜி தமது சேனையாரெல்லாருடனும் இன்று காலை யாதொரு நிபந்தனையின்றி பிடிக்கப்பட்டுவிட்டு, இப்போது எனது பாளையத்தில், சிறையாக விருக்கிறார். சேனையின் பலம் பின்னால் தெரிவிக்கப்படும். இச்சம்பவம் மாஜூபா வருஷோத்சவத்தன்றே நிகழ்ந்ததுபற்றி மாகனிமை தங்கிய ராணியாரின் கவர்ணமென்டார் மிகுந்த திருப்திகரமா யிருப்பார்களென்று நம்புகிறேன்" என்பதே. இதற்குள் பன்னிரெண்டாவது லான்ஸர் படையின் காப்டென் காப், குதிரையேறிய படையுடன் ஜெனரல் கிராஞ்சியின் செகிரடெரியான கெய்ஸருடன் போயர் பாளையத்திற்குச் சென்று சரணடைந்த வகையைச் சொல்ல எல்லோரும் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். அங்கு கிழங்கெட்டுகள், மத்திய வயதுடையோர், வாலிபர், சிறு பொடியான்களெல்லாமுமிருந்தனர். ஸ்திரீகளிலநேகர் தங்கள் கைகளில் பாலகரை வைத்துக்கொண்டு புலம்பிக்கொண்டிருந்தனர். ஸ்திரீகளின் அழு

கைக் குரலே மிகுந்த பரிதாபத்தை விளைவிக்கிறதாயிருந்தது. இவர்களை ஆற்றித் தேற்றுவதிலேயே மிகுதியான நேரம் கழிந்தது. போயர்களின் பாளையமோ, மிகுந்த பரிதாப பதங்குறம்பையாயிருந்தது. அதற்கேற்றாப்போல மழையும் பெய்து ஆற்றில் தண்ணீரிங்குமங்குமாய் போய்க்கொண் டிருந்ததால் அதிலும் சில போயர்பிணங்க ளடித்துக்கொண்டு போகப்பட்டது. ஒவ்வொரு 10-கெஜ தூரத்தில் குதிரைகளும், கழுதைகளும் மற்றும் கால் நடைகளும் செத்துக்கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. பிணவடியென்னும் நாற்றமும் ஒருவாறு வீசியது. மீதியாக அங்கிருந்தவர்களெல்லோருடைய முகமும் குண்டு பிரயோகத்தின் அனலினால் தீய்ந்து கருகலடைந்திருந்தது. ஏறக்குறைய பாளைய முழுதுமே நாசமாக்கப்பட்டிருந்தது. அன்று காலே காப்பி காய்ச்சிக் குடிக்கும்படியாக பற்றவைத்த தீ இன்னுமவியாமலேயிருந்தது. பிறகு புருஷர்களெல்லோரையும் பிரிட்டிஷ் பாளையத்திற்குக் கொண்டு போகப்பட ஸ்திரீகளனைவரும் தம் தம் வீடுகளுக்குப் போய்விடும்படி உத்தரவு பெற்றுவிட்டனர். ஸ்திரீகளில் ஒரே ஒரு சிறுபெண்ணுக்கு விரல் நுனியில் கொஞ்சம் அசகாயமடைந்திருந்ததே யொழிய வேறு ஒருவரும் சேதமில்லை. ஜெனரல் கிராஞ்ஜி தமது 5-ஆயிரம் வீரருடன் பிரிட்டிஷாரின் 20-ஆயிரம் என்று கருதப்பட்ட பெருஞ் சேனையினால் சூழப்பட்டு நெருப்பு மாரிபோல் வெடிகுண்டுகள் வருஷிக்கப்பட்டும், மனஞ் சளையாது இந்த பயங்கர யுத்தத்தின் நடுவிலேயே வெகு சாமர்த்தியமாய் பூமியை நோண்டி 2-மைல் நீட்டம், 150-அடி அகலம், 50-அடி ஆழமான சுரங்கமொன்று செய்து பிரிட்டிஷாரின் குண்டுகளுக்கு தலைமறைவு தடைசெய்து கொண்டிருந்தனர். இது மிகவும் வியக்கத்தக்கதாயிருந்தது. இவர் இன்னமும் போராடியே யிருப்பார்தானேயாயினும் உயிர்களதிகமாக நஷ்டமாவதைக் கோரியே சரணடைந்துபோயினர். இந்த ஜெயம் பிரிட்டிஷாருக்கு இளப்பம் சளப்பமானதல்ல. ஏனெனில் ஜெனரல் கிராஞ்சி ஜெனரல் ஜோபர்ட்டுக்கு இரண்டாவதாயிருந்தவர்.

இவர் கீழ்ப்படிந்துபோன சங்கதியை உடனே நமது இராஜாத்தியம்மாளுக்குத் தெரிவிக்கவும் அந்தம்மாள் உடலம் பூரித்து ஆநந்த சொரூபியாய்ப் புளகாங்கிதம் கொண்டுவிட்டு உடனே வீர தீர லார்ட் ராபர்ட்சுக்கு உபசார முகமன் (Congratulation) அனுப்பி

னர். இது இப்படியானல் இச்சங்கதியைக் கேட்டதும் இத்தாலிய ஹம்பர்ட் அரசரும், ஜெர்மன் கெய்ஸர் சக்கரவர்த்தி இவர்களெல்லாமும் பிரிட்டிஷாரின் ஜெயத்திற்காக இராணியாருக்கு உபசார முகமன் கூறினர். அமெரிக்கா அஸ்திரேலியா இங்கெல்லாம் சந்தோஷம் கொண்டாடினர். லண்டன் பட்டணத்திலே வெகு விமரிசையான பாண வேடிக்கைகளெல்லாமும் செய்யப்பட்டது. அங்கத்திய கோவில் மணிகளெல்லாம் அடிக்கப்பட்டு மிகுந்த ஆரவார சந்தோஷகரமா யிருந்தன. இந்தியாவிலும் மிகுந்த சந்தோஷ ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டது. கல்கத்தாவுக்கு தந்தி வந்ததும் கவர்ணமெண்டு ஹாலில் ஆடிப்பாடி மகிழ்ந்து விருந்துண்டு களித்தனர். விருந்து முடிந்ததும் வைசிராயாகிய லார்ட் கர்ஜன் பெருமான் விருந்தினர்களை நோக்கி,—"இந்தியாவில் முக்கிய சேனாதிபதியா யிருந்தவரும், இப்போது தென்னாப்பிரிக்காவில் முக்கிய சேனாதிபதியாக இருப்பவருமான வீராதிவீர யுத்த வீரராகிய லார்ட் ராபர்ட்சுக்கு உபசாரம் கூறும்படி கேட்கிறேன். மாஜூபா சண்டையின் 19-வது வருஷத்திய தினமாகிய இன்றைய தினமே இவர் அந்த சண்டையில் நேர்ந்த அவமானத்தை நீக்கி, மாக்ஷிமை தங்கிய இராணியாரின் சேனைகளுக்கு பெருமையும் கீர்த்தியும் வாய்ந்த வெற்றியுண்டாக்கினர்" எனக்கூறி 3-உபசார வந்தனோபசாரம் (Cheers) அளித்தனர். அப்படியே இன்னுமற்ற சுதேச இராஜாக்கள் நவாப்பு முதலியவர்களெல்லாமும் உபசார முகமன் கூறினர். பிரிட்டிஷாரின் ஒவ்வொரு குடிகளும் குதூஹல சந்தோஷமடைந்தனர். எனவே தென்னாபிரிக்காவில் சேதமான எத்தனையோ அரும் பெரும் உயிர்களுக்காக துக்கங் கொண்டாடிய தெல்லாவற்றையும் இந்த "தென்னாப்பிரிக்காவின் சிங்கம்" என்றழைக்கப்பட்ட ஜெனரல் கிராஞ்ஜி சரணடைந்துவிட்டதில் எல்லா துக்கமும் நீங்கி சந்தோஷக் களரியாகிவிட்டதால் இச்சண்டையிலிது வோர் விசேஷித்த சம்பவமே.

இப்படியாக ஜெனரல் கிராஞ்ஜி சரணடைந்துவிட்டபிறகு உடனே ஜெனரல் பிரெட்டிமென்னின் காவலில் இவர்களெல்லோரும் கேப்டவுனுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து, 1815–வருஷம் முதல் 1821–ம் வருஷம் வரை இருந்து இறந்துபோன மகாவீர நெப்போலியன் போனபார்ட் சக்கரவர்த்தி சிறையாக வைக்கப்

பட்டிருந்த செண்ட் ஹெலீனு தீவுக்கு 1881-ம் வருஷத்தின் மா ஜூபா விரரும், தற்போது பார்டிபர்க் வீரருமாக விளங்கிய ஜெனரல் கிராஞ்சி தமது பெண்டுபிள்ளை பேரன் பரிவாரத்தார் மற்றெல்லா போயர் சிறைகளோடும் "மில்பாங்கி' என்னும் ஸ்டீமரில் ஏற்றியனுப்பப்பட்டனர்.

இந்த ஸ்டீமரின் தலைவராகிய காப்டன் வெல்ஸ்டர் என்பவர், ஸ்டீமர் யாத்திரையின்போது கிரான்ஜிக்குப் பொழுதுபோக்காகத் தான் செய்ததை அடியில் வருமாறு சொல்லுகிறார்:—

"நானும் மற்ற கப்பல் உத்தியோகஸ்தர்களும் எங்கள் கப்பலில் வரும் கிராஞ்சியின் பொழுது போக்குக்காக என்ன செய்யலாமென்று தெரியாமலிருந்தோம். இவரும் இவர் மனைவியும் ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல் ஒருவர் கையை யொருவர் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். சில சமயங்களில் வேத புத்தகத்தை வாசிப்பார்கள். கப்பல் உத்தியோகஸ்தர்கள் இவரை கொஞ்சம் உற்சாகப்படுத்த உத்தேசங்கொண்டு அதிஷ்ட வசமாய் கப்பலிலிருந்த கிராபோப்போன் என்னும் வாத்தியக் கருவியை நினைத்துக்கொண்டார்கள். இந்த வாத்தியக் கருவியைக் கொண்டு அதில் முதலில் 'ஸவுஸாய் மார்ச்' என்னும் பாட்டை அதின் உருளையில் புணைத்து, கிராஞ்சி அவர் மனைவி, மற்றொரு போயர் ஆபீஸர், அவர் மனைவி இவர்களை வாத்திய ஓசை கேழ்க்கும்படி கப்பலின் உள்ளறைக்கு அழைக்கப்பட்டது. அவர்கள் கேழ்க்கப்போகும் வாத்தியத்தை முதலில் சமுசயம் கொண்டிருந்தார்கள். ஆனல் வாத்தியப் பெட்டியை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்ததில், முதலில் வாசித்த வாத்தியமானவுடனே ஸாங்கி என்பவரால் இயற்றப்பட்ட "நைண்டி அண்டு நைண்" என்னும் பாட்டைத் துவக்கப்பட்டவுடன் கிராஞ்சி துரை கண்ணீர் விடவும் மற்றொரு துரைசானி அந்த பாட்டுடன் தானும் சேர்ந்து பாடவும் நேர்ந்தது. கிராஞ்சி துரை இதில் விசேஷமாய் மனமுருகியதாகக் காணப்பட்டார். இதன்பின் அவரது விரைப்பைத் தவிர்க்க, "பாஞ்ஜோ" என்னும் கேவல் சங்கீதத்தை வாத்தியக் கருவியில் துவக்கப்பட்டது. அப்பொழுது சட்டென கிராஞ்சி துரை மனமாறுதலடைந்து தலையையசைக்கவும், பாதத்தால் தரையில் தாளம்போடவும் ஆரம்பித்தார். கடைசியில் இவ்வாத்தியமானது புறத்தியில் எத்திசையிலுமிருந்தெழும் சத்தத்தாலுண்டாவதா மற்றென்னவென்று கிராஞ்சி துரை கேட்டார். அப்பொழுது நான் வாத்தியக் கருவியைத் துண்டு துண்டாகக் கழற்றி அதன் யந்திர உறுப்புகளைச் சொல்லிக் காட்டி, செண்ட் ஹெலினுவில் அவர் விநோதமாய்ப் பொழுதுபோக்கக் கூடியதாக அந்த வாத்தியக் கருவி அவருக்கு உதவுமென அவருக்கே வெகுமதி செய்தேன். இந்த

சிறைப்பட்ட போயர்களோடு நான்கு ஆங்கிலேயருமிருந்ததை தெரியப் படுத்த விசனமாகிறேன். இதில் ஒருவர் ஹூஸ்ஸார் படையில் கர்னலாக விருந்து தள்ளிவிடப்பட்டு போயர்களைச் சேர்ந்துகொண்டவர் போலும். இவரை வெகு அரோசிகயாகப் பாராட்டினேம்" என்பதே.

## ஸெய்ன்ட் எலீனு தீவில் ஜெனரல் கிராஞ்ஜியின் நிலைமை.

பயொனியர் பத்திரிகையின் கடிதநேய ரெழுதுகிறதாவது:—எப்பிரல் கடைசியில் யூனியன் லைன் ஸ்டீமர் மூலமாக நான் புறப்பட்டு இவ்விடம் சேர்ந்தபோது ஜெனரல் கிரான்ஜியும் 500 சிறைப்பட்ட போயர்களும் அதற்கு முந்தியே வந்திறங்கியிருப்பதைக் கண்டேன். இன்னும் 400 பேர், வழியில் வந்துகொண்டிருந்தார்கள். ஜெனரல் கிராஞ்ஜியும் சிறைப்பட்ட போயர்களின் முதற் கூட்டமும் அப்போதைக்கு அவ்விடம் வந்து ஒருவாரமாகிறது. ஜெனரல் கிராஞ்ஜியும் அவருடைய பரிவாரமுந் தவிர கர்னல் ஸ்கியெல் என்பவரும் மற்ற போயர்களும் இரண்டொரு ஆபீஸர்களும் நெப்போலியன் சக்கரவர்த்தியை வைத்திருந்த லாங்க்வுட் என்னுமிடத்திற்கு சமீபமாக பெரிய அடைப்பிடத்தின் கூடாரத்தில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். ஜெனரல் கிராஞ்ஜியின் வாசஸ்தானமானது லாங்க்வுட்டுக்கு சுமார் 7 மைல் தூரத்திலுள்ள வேறொரு பாகத்திலிருந்தது. அவரும் அவர் மனைவியும், மிஸ்டர் கேய்ஸர் என்னும் அவரின் அட்ஜுடண்டும், இப்பொழுதான் 15 வயதான அவரின் பேரனும் ஆகிய இவர்கள் வசிக்க "கென்ட் காடேஜ்" என்னும் அடக்கமுள்ள சிற்றில் ஒன்று அளிக்கப்பட்டிருக்கிறது. அதுவரையில் ஜெனரல் கிராஞ்ஜியைப் பார்க்க ஒருவரும் அனுமதி பெறவில்லையாதலால் வெகு கஷ்டத்தோடு அனுமதியைச் சம்பாதித்து மேற்படி சிற்றில்லுக்குப் புறப்பட்டுச் சென்றேன். அவ்விடம் சேரவேண்டுமானல் புறப்படும்போது ஜேம்ஸ் டவுனுக்குத் தென் கிழக்கிலுள்ள ஓர் செங்குத்தான கன்மலையைத் தொத்தி ஏறவேண்டியிருக்கிறது. அப்படி யேறுவதற்கு 700 இருப்புப் படிகளுள்ள ஜேகப்ஸ் லாடர் என்னும் நிறுதிட்டமான ஏணி வழியாகவாவது அல்லது வளைவான ஓர் வழியாகவாவது செல்லவேண்டும். கடினமான தொத்தி ஏறுதலை நிவர்த்திக்க வளைவு வழியாகச் செல்வதே நலமென யோசித்து அவ்வழியாகச் சென்றேன். கன் மலைமேல் சேர்ந்த பிறகு இன்னும் இரண்டு மயில் மலை வழியாய்ச் சென்று "கெண்ட் காடேஜ்" வந்து சேர்ந்தேன். இவ்விடத்தில் என்னுடைய அனுமதிச் சீட்டை சோதிக்கும்படியாக ஸ்டாபோர்ட்ஷையர் படையின் காவற்காரனொருவனல் நிறுத்தப்பட்டு, பிறகு ஆறு பெயரடங்கிய ஓர் சிறு காவற்கூட்டத்து சார்ஜெண்டால் என் அனுமதிச் சீட்டை பரிசோதிக்கப்பட்டு கிராஞ்ஜியின் செகிரடெரியாகிய மிஸ்டர் கெய்ஸருக்கு என் வரவைத் தெரிவிக்கப்பட்டது. அவர் என்னைச் சந்

தித்துக்கொண்டு தாழ்வாரத்தில் என்னை விட்டுவிட்டு மறுபடியும் சிற்றில்லுக்குள் பிரவேசித்தார். நான் அமைதியோடு காத்திருந்தபோது கிராஞ்ஜியின் அட்ஜுடென்டாகிய பழுத்த தாடியையுடைய போயர் தன்னுடைய நீண்ட ஜெர்மனிய சுங்கானிலிருந்து புகையைவிட்ட வண்ணமாகவே யிருந்தார். நான் நினைத்ததற்குச் சரியாக அவருக்கு இங்கிலீஷ்பாஷை தெரியாது. ஐந்து நிமிஷங்களுக் கெல்லாம் ஜெனரல் கிரான்ஜி நானிருந்த தாழ்வாரத்திற்கு வந்து என்னோடு கைகுலுக்கினார். இவர் தாஷ்டீகமாகவும், நேர்த்தியான கறுப்புத் தளருடையும், நெற்றியை மறைத்த மிருதுவான பெல்ட்ஹாட் என்னும் தொப்பியும் அணிந்திருந்ததால் அத்தொப்பியின் கீழிருந்து ஆழமாய்ப் புதைந்தனவும், என்னவேண்டுமென்று கேழ்க்கும் பாவனையான ஆராய்வான தமது இரண்டுகண்கள் என்னை நோக்கின. அவரைப்பார்த்த மாத்திரத்திலேயே நான் நினைத்தவண்ணமான சங்கைமானாக விருப்பதோடு அவரைப்பற்றி வெகுவாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய அவ்வித குணாதிசயம் படைத்தவரென்றும் கண்டுகொண்டேன். அவர் உடுப்பு தளர்ந்ததாகவும், தொப்பி முகத்தைக் கொண்டிருப்பதாகவும் காணப்பட்டபோதிலும் மனோதிடஸ்தனென்பது செவ்வையாய்க் காணப்பட்டது. ஓர் கும்பலிலிருந்தாலுங்கூட இவரை இன்னாரென்று கண்டு பிடிக்கக்கூடிய வடிவாகாரமுள்ளவர். இவரைப்பற்றி நான் கேழ்விப்பட்டிருந்த நிதார்த்தமற்ற வதந்திகளுக்கு மாறாக இவர் என்னை உட்காரும்படிச்சொல்லி தானும் உட்கார்ந்ததுமான கபடமின்மையும் கவுரவமும் என்னை ஆச்சரியப்படுத்தின. பிறகு மெத்த மரியாதையோடும் பூரணமாயும் என் கேழ்விகளுக்கு பதிலுரைத்ததோடு, தயவோடு இன்னும் அதிக சமாசாரங்களைத் தானாகவே சொல்லத்துணிந்தார். ஸெயின்ட் ஹெலினாவானது வசிப்பதற்கு மிக்க நடுராசியான இடமாகத் தான்நினைப்பதாகவும் தேசஸ்திதி நன்றாயிருக்கிறதென்றும், ஆனால் கீழ்மட்டமான தீவில் தான் வசிப்பதைவிட காற்றுள்ளதும் இன்னும் 1500 அடிக்கு உயர்ந்ததுமான மேட்டு நிலத்தில் வசிக்க தனக்கு சம்மதியாயிருக்குமென்றும் சொன்னார். போஜனபானங்களில் இவருடையவும் இவர் தோழர்களுடையவும் தேவை சொற்பமாக விருந்ததோடு கவர்ன்மென்டார் கொடுக்கும் போஜனபதார்த்தங்கள் அவர்களுக்கு முழு திர்ப்தியாக விருந்தன.

தற்காலம் இவருடையவும் இவருடைய மனைவியுடையவும் உலாவுதல் 100 கெஜ நீளமும் 50 அடி அகலமுள்ளதும் தமது சிற்றில்லுக்கு சேர்ந்திருப்பதுமான சிறு தோட்டத்தில் நடந்தேறிவருகிறது. எனக்குக் குதிரைச்சவாரியில் விருப்பமென்று இவர் கேழ்விப்படவே, மாக்கர்ஸ்பான்டீனில் நாள்முழுதும் சில சமயங்களில் இராத்திரி நெடுநேரம் வரையிலுங்கூட இவர் குதிரைமீதிருந்த வண்ணமாகவே யிருந்ததைச் சொல்லிக் காட்டினார். பார்டிபர்க்கில் 11-நாள் வரையிலும் இரவும் பகலுமாக பீரங்கி வைத்து சுட்டதினாலுண்டான ஜனசேதம் வெகு சொற்பமென்றும் ஏககா

லத்தில் நாலாப்பக்கங்களிலிருந்தும் குண்டுகள் வந்துகொண்டிருந்ததினுல் மறைவுக்கேற்ற முன் எச்சரிக்கைக் கொடுக்க சாத்தியமாகாமற் போய்விட்டதென்றும் சொன்னுர். கிரான்ஜி துரைசானி யுட்பட வீரத்துவம் பொருந்திய 10 ஸ்திரீகள் பார்டிபர்க்கில் நடந்த பயங்கர சண்டையில் தமது புருஷன்மார் பக்கத்திலேயே பயமின்றி யிருந்தார்களென்பதைக் கேழ்விப்பட என் மனது ஆச்சரியத்தோடு பதைத்தது. லிட்டைட் என்னும் சக்கை சக்கையாய்ப் பெயர்த்தெரியும் குண்டுகள் வீழ்ந்துகொண்டிருந்துங்கூட சுவாலைகளால் பொசுங்கிப்போன ஒரு சிறு குழந்தையைத்தவிர இந்த ஸ்திரீகளில் யாரும் கிஞ்சித்தாவது காயமடைய வில்லையாம். லிட்டைட் வெடிகளானது வண்டிகளையும் சாமான்களையும் தவிடுபொடியாக்கினதோடு குதிரைகளையும் கால்நடைகளையும் பொசுக்கிவிட்டனவாம். பார்டிபர்க்கில் தம்முடைய சேனைக்கு ஒரு ஸர்ஜனுவது இல்லையென்றும் காயப்பட்டவர் தங்கள் தோழர்களால் கூடுமானவரைக்கும் சிகிச்சை செய்யப்பட்டார்களென்றும் இவ்வித கஷ்டத்திலும்கூட அவர்களின் திட்காத்திரமான தேகத்தன்மையானது காயங்களினுல் அதிக மரண முண்டாக்கவில்லையென்றும் கிரான்ஜி சொன்னுர். பிறகு என்னை சம்பாஷணை அறைக்குள் அழைத்தார். அந்த அறையானது போஜன அறையாகவும் உபயோகப்படுவதுபோல் எனக்குத் தோன்றிற்று. அங்கு கிரான்ஜி துரைசானிக்கு என்னை இன்னுரென்று தெரிவித்தார். கிரான்ஜி துரைசானியோ இந்நாளிலுங்கூட ஸ்காட்லான்ட் தேசத்தின் கிராமங்களில் காணக்கூடிய "நல்ல மனைவி" என்னும் ஸ்திரீகளைப்போல் நகை முகத்தோடும் கூடிய அழகான ஓர் ஸ்திரீ. அந்தம்மாளின் வயதென்னவென்று விசாரிக்க நான் துணியவில்லை. ஆனுல் கிரான்ஜிக்கு 64-வயதாகிறபடியால் அவர் மனைவிக்கு 60-வயதுக்குமே விராதென நினைக்கிறேன். இந்த தம்பதிகள் வெகு கஷ்ட நிஷ்டூரங்களையும் மனே கிலேசத்தையும் அனுபவித்திருந்தும் அவர்கள் வயதிற்கேற்றபடி யல்லாமல் வாலிபத்தோற்ற முள்ளவர்களாகவே யிருக்கிருர்கள். அவர்களின் குடும்பவாழ்க்கையோ வென்ருல் ஒருவருக்கொருவர் எறுமாறில்லாமல் அன்னியோன்னிய நேசம் பாராட்டிவருகிருர்கள். இவ்விதமாக ஜெனரல் கிரான்ஜி தன்னிஷ்டமாக எனக்குச் சமாசாரங்களைச் சொல்லிக்கொண்டு வந்தபோது தன்னுடைய மனைவியைப்பற்றி வெகு பற்றுதலோடும் கவுரவத்தோடும் பேசிவந்தார். போயர்கள் தமது மனைவிகளைப்பற்றி விசேஷ அன்பு பாராட்டுவதில்லை யென்ருலும் கிரான்ஜியின் மட்டில் இவ்விஷயம் சிலாகிக்கத்தக்கதாக விருக்கிறது. இவருடைய முகத்தில் பெருந்தன்மையும் மனேதிடமும் விடாப்பிடியும் குடிகொண்டிருக்கிறது. இவர் 1881ஞுத்திய போயர்சண்டையில் செய்த கிருத்தியங்களால் இவரை ஆங்கிலேயர் வெறுக்க நேரிட்டதுபோலும். ஆனுலும் இவர்பேரில் சொல்வது எவ்வளவுதூரம் சரியானதோ தெரியவில்லை. இப்பொழுது கலோனியல்கள் இவர் பெயரென்ருல் அறுவருக்கிருர்கள். பாட் செப்ஸ்ட்

ரும் விஷயத்தில் நிதார்த்தமில்லாமலும் கவர்தலாகவும் இருந்தாரென்ப து ஒருவேளை உண்மையானதாக விருக்கும். ஆனால் எரியட் என்பவர் ஸ்பூருயிட்டை கடக்கும்போது துணைப்போக்கனல் சுடப்பட்டதையும் இவர்மேல் சுமத்தப்படுவது சரியாக ஆராய்ந்து பார்க்காத அனியாயமென்றே நான் நினைக்கிறேன். எப்படியாயினும் கிராஞ்ஜி சில நிதானமற்ற செய்கைகளை நடத்தினரென்றால், இங்கிலாந்தில், கிராம்வெல் என்பவர் கீழிருந்துபோ திருந்ததைக்காட்டிலுமா இது பெரிதென்று நாகரீக மற்ற அவர் இருந்ததை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சமீபகாலத்தில் (அவரைப்போல் சிலர் விக்கிரகமொன்றும் செய்துவைக்கப்பட்ட) கிராம்வெல் என்பவர் ஐயர்லாந்திலும் இங்கிலாந்திலும் செய்த கிருத்தியங்களானது அவரைக்காட்டிலும் குறைந்த வாசிப்புள்ள கிரான்ஜியானவர் பயந்து பின்வாங்கத்தக்கதாக விருந்தன. மொத்தத்தில் இப்பொழுதிய சண்டையில் கிரான்ஜி நூதனமான அனுசரணைகளைக் காட்டினரென்பதற்கும் கொஞ்சதூரம் வரையில் டிரான்ஸ்வால் நாடு இப்பொழுது நாகரீகத்திற்கு வந்திருப்பதால் இவர் இதற்குமுந்தி யிருந்ததுபோலல்லாமல் இப்பொழுதிருக்கிறதைப்போல இவரை பாவிக்க வேண்டுமென்றும் லார்ட் மெத்யூன் என்பவருடைய அத்தாட்சி பலமாகக் காண்பிக்கின்றது. கிராஞ்ஜியோடு நான் சந்தித்து வார்த்தையாடிய பிறகு அவர் விஷயத்தில் அநுகூலமான அபிப்பிராயத்தோடு திரும்பி வந்துவிட்டேன். லார்ட் ராபர்ட்ஸினுடைய உருக்கத்தைப்பற்றி அவர் பேசியபோது இவருடைய முகம் மலர்ந்ததையும் தன் மனைவிபேரில் இந்த வலிவுள்ள வீரன் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பார்த்தவர்கள் இவ்வளவு விசுவாச இருதயத்தைக்காட்டிய மனிதன் அடிக்கடி சொல்லிக்காட்டப் படுவதுபோல இரக்கமற்ற கொடூரமான நிதார்த்தமற்ற ஒருகாட்டுமனிதனை இருக்கமாட்டாரென்றே என்னைப்போல் அபிப்பிராயப்படுவோர்கள்'' என்று தெரிவிக்கிறார்.

## லேடிஸ்மித் விடுதலை, ஜெனரல் புல்லரின் 4-வது கொடிய யுத்தம்!

ஜெனரல் கிராஞ்ஜியின் விஷயம் இப்படியானல் லேடிஸ்மித்தை விடுவிக்க ஜெனரல் புல்லர் பெப்ரவரி மாதம் 14-ந்தேதி புறப்பட்டனர். டுகிலாநதிக்கு அந்தண்டை பக்கத்தில் போயர்கள் பலமாக அரண்செய்து கொண்டிருந்தும் எதிரிலும் பக்கத்திலுமாக தாக்கி பின்னடையச்செய்து சிங்கோலாவி லிருந்த ஸ்தானங்களை மான்டிகிறிஸ்டோ குன்று, ஹிலாங்வேன் குன்று இவைகளை 18, 19-ந்தேதிகளில் கைப்பற்றினர். இந்த 3 நாளில் இவருக்கு சேதம்

81 பேர். இவர் 19-ந்தேதி சிவிலியாவிலிருந்து எழுதிய கடிதத்தில், போயர்களை பின்னடையச்செய்து அநேக பாளையங்கள் யுத்தாயுதம், அநேக வாகன்களைப் பிடித்தும் சிலரை சிறையாக்கியதுமாகவும் அதோடு வெய்யில் மிகக்கொடியதாகவும் பூமியைக் கடப்பது மிகுந்த கஷ்டமாகவிருப்பதாகவும், ஆயினும் சேனுவீரர் மிகுந்த சாதுரியமாகப் போர்புரிவதாகவும் தெரிவித்தனர். 20-ந்தேதியன்று ஜெனரல் ஹார்டின் பிரிகேடு கொலென்சோவிற்குள் புகுந்து போயர்களால் விடப்பட்டுப்போன ரஸ்து முதலியவைகளைக்கைப்பற்றினர். மறுநாள் ஜெனரல் புல்லர் ஹிலாங்வென் குன்றுக் கருகாமையாக டுகிலாநதியின்மேரில் ஒரு தொட்டில் பாலம்போட்டு 3 பிரிகேட் காலாட்படை 5 பத்திரிகள் தார்னிகிராப்ட் குதிரைப்படை இவைகளை கடத்திவிட்டனர். பாலத்திற் கருகாமையாயிருந்த ஸ்தானங்களில் பகல் ஒரு கொடிய போர் நடந்ததில் பிரிட்டிஷார் பக்கம் ஜெனரல் வின்னி காயமடைந்ததுடன் 150 பேர் சேதமாயினர். 22-ந்தேதியன்று போயர் ஜெனரல் புல்லரை மறுபடி நதிக்கு பின்னே துரத்தும்படியான உக்ராவேச போர்புரிந்தனர். பிரிட்டிஷாரும் அடிக்கடி கைகலந்த சண்டைப்போட்டனர். இதில் பிரிட்டிஷாருக்கும் கொடிய சேசமாயினும் போயர்களுக்குமப்படியே சேகமானது. இதில் பிரிஸிடெண்டு குரூகரின் பேரப்பிள்ளை யொருவர் கொல்லப்பட்டனர். இருகரத்தாரிலும் அனேக ஆபீஸர் வீரர்கள் விழுந்தனர். இப்படியாக 21-22-தேதிகளில் போட்டசண்டையில் பிரிட்டிஷார் டுகிலாவிற் கடுத்தாப்போலுள்ள எல்லாஸ்தானங்களையும் பிடித்துவிட்டனர். 23-தேதியன்று ஜெனரல் புல்லர் ஜெனரல் ஹார்ட்டை முன்னேறச் சொல்ல அவரும் அப்படியே பகல் ஒரு மணிக்கு ஏறிப்போக திடீரென போயர் அக்கினியை வருஷித்ததுபோல் மிக்க கொடிய குண்டு பிரயோகங்கள் செய்யவும், இதில் ஏறக்குறைய ஆபீஸர்களெல்லாம்விழுந்துவிட்டாரெனினும் சேனுவீரர் பின்வாங்காது படுத்துக்கொண்டு விடாதுண்டிகளாக அன்றிரவெல்லாம் மல்லாடிக் கொண்டிருந்ததில் விடிந்ததும் துணைப்படைகள் வந்துவிட்டதில் போயர்கள் பின்னடையச் செய்யப்பட்டனர்.

இப்படியே குன்றின்பின் குன்றாய்ப் பிடித்துக்கொண்டே சென்று பீய்டர்ஸ் குன்றைப் பிடித்துவிட்டனர். இக்குன்றைப்

பிடித்ததில் மிகுந்த கீர்த்தி கர்னல் கிச்சினருக்கே. இவர்தான் தமது சேனையினுடன் மத்தியில் மிகுந்த கொடிதாக போர்புரிந்து குன்றைப் பிடித்தனர். இந்த கர்னல் கிச்சினர், லார்ட் லாபர்ட்ஸின் சீப்ஸ்டாப்பான சர்தார் லார்ட் கிச்சினரின் தம்பி. இவரும் தன் அண்ணனைப்போல மிகுந்த பிரக்கியாதியான சண்டைகளெல்லாம் செய்து அநேக மெடல்கள் பெற்றுள்ளார். இவர், இக்குன்றைப் பிடித்ததில் போயர்கள் மிகுந்த சேதமடைந்தனர். பிரிட்டிஷார்விட்ட லிடைட் வெடிகுண்டுகள் பூமியைப் பிளந்துசென்றன. அநேக மாசூர், மார்டினி துப்பாக்கிகளும் ஒரு மாக்ஸிம் பீரங்கியும் ஏராளமான மருந்து வகைகளும் பிடிக்கப்பட்டன. அநேக போயர்கள் காயமடைந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டனர். இதில் 16-வயதான சிறுவன்களும் அநேகரிருந்தனர். அதோடு 2-ஸ்திரீகளில் ஒருத்தி காயமடைந்தும் ஒருத்தி இறந்தும் கிடந்தனர். ஆனால் பிரிட்டிஷார் சேதம் ஏறக்குறைய 200 பேராயிருந்தனர். இப்பால் ஜெனரல் வாரனின்கீழ் கர்னல் கிச்சினர் 11-வது பிரிகேடையும் கர்னல் நார்காட் 4-வது பிரிகேடையும் நடத்திபோயர்களின் முக்கியபாகத்தைத் தாக்கி அவர்களை சிதறடித்து 60 பேரை சிறையாக்கினர். 28-ந்தேதி பிற்பகல் லார்ட் டன்டானுள்ட் ஒரு குதிரை பிரிகேடை நடத்தி லேடிஸ்மித் பக்கமாகவும், கர்னல் பர்ன்-மர்டாக் மற்றொரு குதிரை பிரிகேடை நடத்தி புல்வானு குன்றின்மீதும் புறப்பட்டனர். உடனே போயர்களும் தங்கள் பீரங்கிகளுடன் இரண்டு பிரிகேடுகள் மீதும் குண்டு பிரயோகஞ் செய்துகொண்டிருக்க 4-மணி சமயத்தில் முன்னணியில் சென்ற மேஜர் காப் லேடிஸ்மித்தை சுற்றியுள்ள பள்ளங்களிலும் ஸ்தானங்களிலும் போயர்களில்லையென லார்ட் டண்டானுள்டுக்குத் தெரிவிக்க, அவரும் உடனே ஒரே மூச்சாய் இம்பீரியல் லைட் ஆர்ஸ் கார்பைனியர்ஸ் படைகளில் 2-ஸ்குவாடர்ன்களுடன் பட்டணத்துள் எப்படியாவது புகுந்து விடவே வேண்டுமென தீர்மானித்து மீதியானவைகளை ஜெனரல் புல்லர் ஸ்தானத்துக் கனுப்பிவிட்டனர். இப்படி போயர்களிங்கெல்லா மில்லாததற்கு காரணம்; இச்சமயத்தில் ஜெனரல் கிராஞ்சி பிரிட்டிஷாரால் சூழப்பட்டிருந்தமையால் அவருக்காக உதவிசெய்ய லேடிஸ்மித் முற்றுகையை விட்டுவிட்டு அங்குபோய் விட்டதே. ஜெனரல் கிராஞ்சி சரணடைந்த பெப்ரவரி மாதம் 27-ந்தேதி செவ்வாய்க்கிழமைய அன்று சாயங்

திரமே லார்ட் டன்டாளுள்ட் புறப்பட்டு இரவுக்கு இரவாய் பள்ளம் மேடு, காடு செடி, தாழ்வு ஏற்றம் எனவும் பாராது, வேகமாய் குதிரைகளை விட்டுக் கொண்டேவந்து பட்டணத்தைக் கிட்டியதும் "யார் அங்கே போகிறது?" என ஒரு சப்தம் பிறந்தது. உடனே இவர்கள் "லேடிஸ்மித்தை விடுவிக்கும் சேனை" எனக் கூறினதும்; காலில்கூட ஜோடில்லாதவர்க ளநேகரும் கிழிந்த கந்தை பொந்தைகளை யணிந்தவர்களுமாய் அநேகரும் வந்து சூழ்ந்து விட்டு ஆர்பரித்து சந்தோஷ கூச்சலிட்டனர். அவர்கள் மெத்தவும் மெலிந்து போனவர்களாக விருந்தும் சந்தோஷக் களரியிலாழ்ந்த பிறகு விடுதலை சேனையார் மிகுந்த ஆரவாரத்துடன் ஹெட்குவார்டர்ஸுக்கு நடத்தப்பட அங்கு ஸர் ஜியார்ஜ் வொயிட், ஜெனரல் ஹண்டர், கர்னல் ஐயன் ஹாமில்டன் இவர்களை சந்தித்தனர். உடனே ஒரு பக்கம் புருஷாள் சந்தோஷித்துக் கூச்சலிட மறுபக்கம் ஸ்திரீகள் சந்தோஷத்தால் ஓவென்று கூச்சலிட்டழ, அதற்கிடையில் காப்பிரிகளும் கூலிக்காரர்களும் மிகவாகக் கூவி கூத்துகளாடினதுமான சம்பவம் அச்சமயத்தி லங்கிருந்தவர்களின் மனதை விட்டு ஒருநாளும் பிரியவே பிரியாது.

போஸ்டாபீஸண்டை வந்து சேர்ந்ததும் ஜெனரல் வொயிட் ஜனங்களை நோக்கி:—"ஓ! லேடிஸ்மித்தின் ஜனங்களே; இந்த லேடிஸ்மித் பட்டணம் முற்றுகை செய்யப்பட்டிருந்தபோது நீங்கள் மிகுந்த வீரமாயும் பொறுமையாயும் என்னுடன் உதவிபுரிந்து செய்த வீர செயல்களுக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் என் வந்தனஞ் செலுத்துகிறேன். இன்னமும் என் இருதயத்தின் ஆழத்திலிருந்து வந்தனம் புரிகிறேன். உணவு வகைகள் குறைந்துபோனதின் பேரில் உங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் கொடுக்க நேர்ந்ததற்காக நான் மிகவும் மனநொந்தேனுகிலும், நாம் நமது கொடியை பறக்கவிட்டுக்கொண் டிருந்ததற்காக கடவுளுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லியவுடனே "கடவுள் இராணியாரை இரட்சிப்பாராக" (God Save the Queen) என்னும் கீதத்தை மிகுந்த சந்தோஷமாய்ப் பாடினர். ஜெனரல் கிராஞ்ஜி அகப்பட்டுக்கொண்ட விஷயமாய் இவர்களுடைய சந்தோஷமிப்படியானுல், சீமையிலே சந்தோஷம் கொண்டாடிக்கொண்டிருக்கும் சமயத்திலேயே அடுத்த நாளே இப்பட்டணம் விடுபட்ட சங்கதியும் எட்ட, அம்மம்ம!

லண்டன் பட்டணமே கொல்லென்றாய்விட்டது. கட்டடங்கள் மே லெல்லாம் பாவுட்டாக்கள் பறந்தன. சின்னஞ் சிறிய பொடியான் களெல்லாம் "யூனியன் ஜாக்" கொடிகளைப் பிடித்துக்கொண்டு வீதி வீதியாய் ஜெயவார்ப்பரிப்புடனே ஓடினார்கள். அப்படியே மற்றும் பிரிட்டிஷ் இராஜ்ஜியங்களிலெல்லாம் சந்தோஷ களரியா யின. மறுநாள் வியாழக்கிழமை ஜெனரல் புல்லர் தமது பரிவா ரத்தாருடன் பட்டணத்துள் புகுந்துவிட்டனர். இவர் வருகையை எதிர்நோக்கியில்லாதிருந்தும் உடனே சங்கதி பரவிவிட ஜெனரல் வொயிட்டும் அவரின் பரிவாரத்தாரும் எதிர் சென்று நல்வரவு கொடுத்தனர். இப்படியாக ஜெனரல் புல்லர் 3-முறை படையெ ழுச்சி செய்தும் ஜெயம் பெறாது ஒவ்வொரு முறையும் "ஆக்கினி மாரி பொழிகிறது' என தமது வாயாலேயே சொல்லி, சேதங்க ளுக்காக அழுதும், தாமும் காயமடைந்தும் மனஞ்சோராதவராய் இந்த நாலாமுறை படையெழுச்சியில் தமது கையின் கீழ் நடத்து தலிலிருந்த லார்ட் டண்டானல்டின் மூலமாய் பட்டணத்தை விடு வித்துவிட்டனர். இந்த லேடிஸ்மித் பட்டணம் முதல் தடவையாக அடைப்பட்டுவிட்டபோது 12 ஆயிரம் வீரருடன் 2 ஆயிரம் சிவி லியன்களும் 4 ஆயிரம் சுதேசிகளு முள்ளிருந்தனர். முற்றுகை யின் பிறகு விஷ சுரமும் சீதபேதியும் துவங்கிவிடவே, 8 ஆயிரம் பேர்வரை சுக்வீனமாகவும் குண்டடி சேதமாகவும் நஷ்டமாயினர், இதில் முதல்தடவையி லவ்வளவான சேதமில்லாவிடினும் ஜனவரி மாதத்திலிருந்து மருந்துவகை முதலியன குறைந்துபோனதில் அ திகமான மரணங்கள் சம்பவிக்க நேரிட்டது. அதற்கேற்றாப்போல உணவு வகைகளும் வெகுவாய் குறைந்துவிட்டது. தினகிதமும் கிழக் குதிரைகளும் கோவேறு கழுதைகளுமாக 30-அடிக்கப்ப டும். இவைகளில்தான் சூப்புகளும் சாசேஜ்களும் செய்து சாப்பிட் டனர். ஜனவரிமாதம் 15-ந் தேதியிலிருந்து விடுவித்த நாள் வரை சுகவீனமாக மாத்திரம் 200 பேருக்கு மேலாக இறந்துபோயினர். அநேக குதிரைகள் உணவிற்காக கொல்லப்பட்டு போனதில் குதிரைப்படை வீரர்களை காலாட்படை வீரர்களாக மாற்றிவிடப் பட்டிருந்தன. சில பீரங்கிகளுக்குகூட குதிரைகளின்றியிருந்தன. அடைக்கப்பட்டுவிட்டதிலிருந்து காயப்பட்டு செத்தவர்களும் கொ ல்லப்பட்டவர்களும் 24 ஆபீஸர்கள், 250 மனிதர். விபாதியினால்

6 ஆபீஸர், 340 மனிதர். காயமடைந்தவர்கள் 70 ஆபீஸர், 520 மனிதர். விடுவிக்கப்பட்டபிறகு அங்கிருந்த வீரர்கள் சண்டைக்கே உபயோகமற்ற பெலவீனர்களாக விருந்தனர்.

இப்படியான பெலவீனர்களை வைத்துக்கொண்டு மிருந்த கஷ்டநஷ்டத்துடன் சமர்த்தாய் தாங்கிக்கொண்டிருந்ததை முன்னிட்டு ஜெனரல் வொயிட்டிற்கு நியூஸிலண்ட் குடிகள் யாவரும் கூடி ஓர் பொன் செங்கல்செய்தனுப்பினர். அதில் ஒரு பக்கம் "இது ஒரு செங்கல்" என்றும், மறுபக்கம் "சீர் மற்றொன்று" என்றும் சித்திரித்திருந்தனவாம். இப்படியான பல வெகுமதிகளிருவருக்குக் கிடைத்ததுடன் சீமையிலும் இவருக்கு கவுரதா பட்டாக்கத்தி (Sword of Honor) பரிசளிக்கப்பட்டது.

# VI-வது அத்யாயம்.

ஆரெஞ்சி பிரீஸ்டேட் பிடிபடல்;—ஜெனரல் ஜோபர்ட் மரணம்;—மாபிகிங் விடுதலை;—பிரீஸ்டேட்டின் பிரமாதமான யுத்தங்கள்!

பார்டிபர்க்கில் கிராஞ்சியைப்பிடித்த ஜெயமுண்டான உடனே லார்ட் ராபர்ட்ஸ் ஆரஞ்சி பிரீஸ்டேட்டின் தலைநகரமாகிய புளோயம்பாண்டீனைப் பிடிக்க தமது வேலையைத் தொடங்கினர். இந்த பிரீஸ்டேட்டு 70-வருஷங்களுக்கு முன்னே காட்டு துஷ்ட மிருகங்களின் வாசஸ்தலமாகவும் பெருங்காடாகவுமிருந்தது இந்த காட்டில் எங்குபார்த்தாலும் புலி, சிங்கம் முதலான கொடிய மிருகங்களும், மான், கடம்பை, வரிக்குதிரை முதலானவைகளும், ஆற்றோரங்களில் ஹிப்போபோடாமெஸ் என்னும் நதிக்குதிரைகளும் மேய்ந்துகொண்டு திரியும். இப்படிக்கிடந்த இந்த நாடானது போயர்கள் 1830 வருஷத்தில் வந்து குடியேறவும் இவைகளை சங்காரம் செய்யத் துவங்கினர். இப்படி சங்காரம்பண்ணத் துவங்கியகாலத்தில் புளோயம்பாண்டீனிலிருந்த ஒரு பிரிட்டிஷ் ஆபீஸர் மாத்திரம் ஒரு வருஷத்தில் 17 சிங்கங்களை சுட்டனராம். ஆனால் வேட்டை வல்லர்களாகிய டச்சுக்கார போயர்களோ, இப்போது ஒரு சிங்கங்கூட அகப்படுவதற்கு அருமையாக்கிவிட்டனர்.

ஆரஞ்சி பிரீஸ்டேட்டானது எங்கும் பசுமையாயும் இங்குமங்கும் மலைகளும் குன்றுகளுமாய் 400 மைல் நீளமும் 200 மைல் அகல முள்ளதாய் 70 ஆயிரம் சதுரமைல் பரப்புமுள்ள சதுப்பு நிலத்தில் முந்தி காட்டு ஜீவன்களுக்கு உணவாகவிருந்த பசுமையான புல்லு கள் இப்போது ஆடுமாடு குதிரைகளுக்கு போதுமான போஷிப் பாகவிருக்கிறது. இங்கத்திய பசுமையான போஷிப்பால் கால்ந டை மிகவும் விர்த்திபடைந்து நல்ல கொழுமையாக விருக்கின்ற ன. இப்போது நடந்த சண்டைக்கு முந்தி இங்கு கணக்கெடுத்த தில் 2 லக்ஷத்து 50 ஆயிரம் குதிரைகளும் 20 ஆயிரம் கோவேறு கழுதைகளும் சாதாரண கழுதைகளுமிருந்தன. இங்கத்திய குடி யேற்ற டச்சுக்காரரோ, விசேஷமாய் கிருஷித்தொழில் புரிபவர் களே. இங்கத்திய பூமிகள் மிகக் கொஞ்ச விலைக்கு கொடுக்கப்படுவ தால் ஒவ்வொருவரும் அநேகமைல் நீண்டநிலமுள்ளவர்களாய் நன் றாகஉழுது பயிர்செய்து நல்ல மகாராஜாராயிருக்கின்றனர். இதின் மு க்கியபட்டணமான புளோயம்பான்டீனின் ஜனத்தொகைமாத்திரம் 8 ஆயிரம்பேர். மற்றுமிந்நாட்டின் முக்கிய பட்டணங்கள் லேடி பிரான்ட், ஆரிஸ்மித், வின்பர்க், பாரிஸ்மித், ஊப்ஸ்டாட், ஜேகப்ஸ் டால், குரூன்ஸ்டாட், பிக்ஸ்பர்க், செனிக்கல், ஸ்மித்பீல்ட் ரோக் ஸ் வில்லி என்பவைகளே. இந்த நாடானது 1848-ம் வருஷத்தி லிருந்து 1853-ம் வருஷம்வரை பிரிட்டிஷாரை சார்ந்திருப்பதாக வேயிருந்தது. இதற்குள் ஆங்கிலேயர் ஸ்காட்லான்டர், ஜெர்மா னியர் இவர்களும் கொஞ்சம் கொஞ்சமாய் வந்து சேர்ந்தனர். இப் படியிருக்க பாஸ்டோஸ்கள் கலகங்கள் செய்துகொண்டேயிருக்க 1853-ம் வருஷத்தில் ஸர் ஜியார்ஜ் காத்கார்ட் இருமுறை சண்டை த்தொடுத்தும் நாட்டுள் சமாதானத்தை நாட்ட இன்னும் ஈராயிர ம்சேனை வேண்டுமென தெரிவித்ததின்பேரில் அச்சமயத்தில் காப் பிரியுத்தம்செய்து கொஞ்சம்தோய்ந்திருந்தமையால் ஹோம் கவர் ணமென்டார் அன்னியநாடுகளின் தொந்தரைகளை விட்டொழிக்க தீர்மானித்ததின்பேரில் 1854-ம் வருஷத்தில் புளோயம்பாண்டீன் உடன்படிக்கைசெய்து டச்சுக்குடிகளுக்கே இந்நாட்டைக்கொடுத் துவிட அதினின்று சுயாதீன அரசாய்விட்டது. அதுமுதற்சொண் டு கடந்த வருஷம்வரை யாதோர் தொந்தரை கலகங்களின்றி பிரி ட்டிஷாருடன் சமாதான நிலையிலேயேயிருந்தது. ஆயினு மிதற்கி டையில் இரண்டொரு சந்தற்பங்களில், கேப் கவர்ணரான ஸர் பி

லிப்வுட், அவுஸ்பாஸ்டுஸ்கள் பிரிட்டிஷருக்கடங்கிய குடிகள் எனச் சொல்லியதில் பிரீஸ்டேட்டார் மிகவான மல்லுகளெல்லாம் செய்து அக்காரியத்தில் ஜெயமடைந்தனர்.

மறுபடி கிம்பர்லியில் வைரச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்படவும் அதற்காகவும் சிலரோதனைகள் நடந்தது. டச்சுக்காரர் வடக்கே குடியேறுவதற்கு முந்தியே கிர்குவாலான்ட் வெஸ்ட் என்னும் ராஜ்ஜியத்தில் கிர்குவாக்கள் வசித்துக்கொண்டிருந்தமையால் பிரிட்டிஷார் அவ்வைரச்சுரங்கங்களை கிர்குவா தலைவனான வாடர்போயரிடமிருந்து, ஷை தலைவனை காப்பாற்றுவதுடன் உபகார சம்பளமும்கொடுக்க வாக்களித்து சம்பாதித்துக்கொண்டனர். இதற்காக டச்சுக்காரர் மிகவும் வாதாடி முணுமுணுத்து கடைசியாக 90-ஆயிரம் பவுண்டுகள் அதற்கு ஈடாகப்பெற்றனர். இவர்களுக்கு கிம்பர்லி வைரச்சுரங்கங்கள் தான் சொந்தமில்லாவிடினும் அதையடுத்த தங்கள் எல்லையிலுள்ள ஜாகர்ஸ் பான்டீனுள்ள வைரச்சுரங்கங்களிலிருந்து மாத்திரம் எடுக்கும் விலையுயர்ந்த வைரங்களினால் வருஷா வருஷம் 5-லக்ஷம் பவுண் சம்பாதிக்கின்றனர். இச்சுரங்கத்திலிருந்து 1853-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட பெரும் வைரமானது $4\frac{1}{4}$ அங்குலம் சுற்றளவுள்ளதாய் 991 மாற்று நிறையுள்ளதாயிருந்தது. இதே சுரங்கத்தில் 1895-ம் வருஷத்தில் மற்றொரு பெரிய வைரம் 634 மாற்று நிறையுள்ளதா யகப்பட்டது. இந்த ஆரஞ்சிபிரீஸ்டேட் நாடானது சுரங்கங்களிலும் உலோக தாதுவஸ்துக்களிலும் மிகுந்த விலையுள்ள ரவைகளிலும் அபரிமிதமா யகப்படுவதில் விசேஷித்துள்ளது. நிலக்கரி குரூன்ஸ்டாட், ஹில்பிரான் இந்த இடங்களில் கிடைக்கிறது. காந்த தன்மையுள்ள இரும்புலோகம், உப்புலோகம், செமன்ட், வெடியுப்பு, களிமண் முதலியவைகளெல்லாம் அபரிமிதமாக அகப்படுகின்றன. இன்னமும் பொன்னும் இந்நாட்டின் வடபாகங்களில் அகப்படுமென்றே பலநாள் கோரிக்கைபாகவே யிருக்கிறது. எனவே இந்த ஆரஞ்சி பிரீஸ்டேட்டானது மிகுந்த ஐஸ்வரிய நாடுகளிலொன்று எனச்சொல்லவும் வேண்டுமோ!

அல்லாமலும் ஆரஞ்ஜி நதியின்மேலுள்ள பாலங்கள்தான் வெகு முக்கியமானவையாக விருக்கின்றன. நான்கு இடங்களில் அது ரெயில்வண்டிகளால் கடக்கப்படுகிறது. தென் ஆப்பிரி

க்காவிலுள்ள நதிகட்கெல்லாம் மிக்க நோர்த்தியான் ஆரஞ்சிநதிபாலத்தின்வழியாய் பிரிட்டிஷார் கடக்கவேண்டியிருக்கிறது. இது 15 வருஷங்களுக்குமுன் ஆரம்பமாகி 60—ஆயிரம்பவுன்கள் செலவிட்டுக்கட்டப்பட்டது. 1230—அடி நீள இரண்டாவதுபாலம் ஆற்றின் மேலிருக்கிறது. இது போர்ட் எலிஜபெத்தையும் ஆரஞ்சிபிரீட்ரங் க்லேயும் ஒன்றாய்சேர்க்கின்றது. இவ்விடத்தில்தான் போயர்கள் பலமாய் சேர்ந்திருந்தார்கள். இது 1690 அடி நீளமுள்ளதாய் 1890-வருஷத்தில் 96,593 பவுன்கள் செலவிட்டு கட்டப்பட்டது. கர்னல் பிரெஞ்சி ஜபத்தோடு வேலைநடத்திய நார்வல்ஸ் பாண்டுக்கு இரண்டுமைலுக்குக் கிழாக கோல்ஸ்பர்க் இருக்கிறது. இந்த கோல்ஸ்பர்கில்தான் பிரெஸிடெண்ட் குருகர் பிறந்தது. பிரீஸ்டேடார்கள் கேப்காலொனி பேரில் படைபெடுத்த கோல்ஸ்பர்க்கைத் தான் ஆரம்பஸ்தானமாக ஏற்படுத்திக் கொண்டார்கள் அச்சமயத்தில் அங்கிருந்த படையெல்லாங்கூடி போலீசாரின் ஒரு சிறு கூட்டமும் ஒரு பிரிடிஷ் சார்ஜந்துமே. ஆகவே அவர் ஒப்புக்கொடுத்துக்கொண்டு பாலத்தை ஒன்றும் செய்யாமல் விடப்பட்டது மூன்றாவது பாலம் பெதியூலிக்கு சமீபத்திலிருக்கிறது. இந்த பெதியூலி என்னும் பட்டணம் ஆரஞ்சி பிரீஸ்டேட் நதியின் பக்கமாகவிருந்து கீழ்கோணமாக அமைந்திருக்கிறது. பெதியூலிக் கருகாமையாயுள்ள பாலத்தின் வழியே போயர்கள் கடந்து கேப்காலொனிக்குச்சென்று நார்வால்ஸ் பான்ட்டுக் கருகாமையில் பிரிடிஷ் இராஜ்ஜியத்தில் பிரவேசித்த படையோடு சேர்ந்துகொண்டு ஸ்டார்ம்பர்க் வரையில் கெட்டிவந்தார்கள். அங்கே ஓர் ரெயில்வேலேயை போயர்கள் கூடிச் சிதற அடித்தார்கள். மேற்சொன்ன பாலம் வெகு கெட்டியானதும் 1486 அடி உயரமுள்ளதுமாகவு மிருக்கிறது. ஸ்டார்ம்பர்க், பெதியூலி என்னு மிவ்விரண்டிற் கிடையில் பர்கர்ஸ்ட்ராம்பும் அதற்கு 3 மைலுக்கப்பால் ஆல்பர்ட் ஜங்க்ஷனு மிருக்கிறது. அங்கிருந்து வட ஆலிவாலுக்கு கிளைப்பாதை போகிறது. ஸ்டார்ம்பர்க்கை போயர்கள் எதிர்த்தபோது பர்கர்ஸ்ட்ராப் அவர்கள் கவனத்தைக் கிரகிக்கவில்லைபோலும். ஆலிவாலண்டை ஆற்றின்பேரில் ப்ரியர் பிரிட்ஜ் என்னும் பாலமிருக்கிறது. இது மேஸோடாலாண்டுக்கும் போக்குவரத்தை உண்டுபண்ணுகிறது. இது ஜெனரல் புல்லர் சொலன்ஸோவிலிறங்கிய ப்ரியர் என்னுமிடமல்

ல; இது வேறு. இந்த ப்ரியர் பாலம் 86:) அடி நீளமுள்ளது. இதற்கு பட்டுப்படி மொத்தம் 59000 பவுன்கள். ஆரஞ்சி ஆற்றிலிருந்து மேற்குப்பக்கமாக போகும் லைன்களையெல்லாம் போயர்கள் நாசமாக்கிவிட்டார்கள். போயர்கள் இவற்றைமாத்திரம் நாசமாக்கிவிட்டிருக்கிறார்களில்லை. லேடிஸ்மித் முதலிய அழகிய பட்டணங்களையும் நசித்து நசகுசலாக்கி விட்டிருக்கிறார்கள். அவைகளைப் புதுப்பிக்க எத்தனைகோடி ரூபாய்கள் செல்லுமோ தெரியவில்லை.

## லார்ட் ராபர்ட்ஸ் படையெழுச்சி.

### கெடிபிடி சண்டைகள்!

இதிப்படியிருக்க, இங்கு போயர்கள் லேடிஸ்மித் பக்கத்திலிருந்து முக்கால்வாசியும் மற்றும்பக்கத்திலிருந்தெல்லாமும் திரள் திரளாய் மாடர்நதியின் பக்கமாயுள்ள பாப்புலர் குரோவில் வந்து கூடி வடக்கே 4—மைல் தூரமும், தெற்கே 7-மைல் தூரமுமாய் வேலிபோல் வளைத்து ஸ்தானம் கட்டினர். இப்பகுதியை கமான்டென்ட் டிவெட்டும், கமான்டென்ட் டிலாரியும் நடத்த ஜெனரல் ஜோபர்ட் புளோயம்பாண்டீனிலிருந்து யோசனை சொல்லிக்கொண்டிருந்தனராம். உடனே லார்ட் ராபர்ட்ஸும் தமது சேனையை அணிவகுத்தனுப்ப மார்ச்சு மாதம் 7—ந் தேதியன்று ஜெனரல் பிரென்ச் எதிரிகளைத் தாக்கி அவர்கள் ஸ்தானங்களிலிருந்து புறமுதுகு காட்டியோட விரட்டியடித்தனர். இதில் பிரிட்டிஷாரில் 2 பேர் கொல்லப்பட்டு 38 பேர் காயமடைந்தனர். இதற்குள் லார்ட் ராபர்ட்ஸ் தமது சீப் ஸ்டாப்பான கிச்சினருடன் கிம்பர்லிக்குச் சென்று மாபிகிங்கை விடுதலை செய்யும்படியான வழிவகையை லார்ட் மெத்யூனுக்கு சொல்லிக்கொடுத்துத் திரும்பி, இங்கு போயர்கள் ஒன்று கூடுவதை தடுக்கும்படியான பிரயத்தனங்களெல்லாம் செய்துகொண்டே புளோயம்பாண்டீனுக்கு முன்னேறினர். இங்கும் பின்னடைந்த போயர் மறுபடி ரீன்பான்டீனில் எதிர்க்க ஒன்று கூடவும், மறுபடி 3 நாள் பொறுத்து மார்ச்சுமாதம் 10—ந் தேதியன்று இவர்களை பிரிட்டிஷார் எதிர்த்தனர். இங்கும் போயர்கள் வெகுவான போர் செய்து மல்லாடினரெனினும் கடைசியில் தோற்கடிக்கப்பட்டு ஓட்டமெடுத்தனர். இதில் பிரிட்டிஷாருக்கு 320 பேர் சே

தம். இங்கேயும் ஜெனரல் பிரெஞ்ச் எதிரிகளை பின்னடையச் செய்து அவர்கள் ஸ்தானங்களைக் கைப்பற்றி ரெயில் பாதையைப் பிடித்துக்கொண்டார். இது விஷயமாய் லார்ட் ராபர்ட்ஸ் "இவ்விரவு விடிவதற்குமுன் புளோயம்பாண்டீன் ரெயில் ஸ்டேஷனைப் பிடித்து போயர்களுடைய சாமான் வண்டிகளையெல்லாம் பிடித்துக் கொள்ளும்படி ஜெனரல் பிரென்சையனுப்பினேன். அடுத்த ராத்திரியில் ஸ்டேஷனுக்கடுத்த இரண்டு குன்றுகளை ஜெனரல் பிரென்ச் பிடித்துக்கொண்டதாய் தெரிவித்தார். பட்டணத்து சேனைகள் அங்கிருந்து பலமாய் எதிர்த்தும் அவர் குன்றுகளைப் பிடித்ததோடு பிரஸிடென்ட் ஸ்டேய்னின் சகோதரனையும் சண்டையில் சிறையாகப் பிடித்துக்கொண்டார். பட்டணத்திலிருந்து வடபுறம் போகிற தந்தி கம்பிகளையும், ரெயில் பாதைகளையும் அறுத்துடைத்துப் போட்டார்கள். நான் இப்போது ஜெனரல் பிரென்சுக்கு ஒத்தாசைக்குப் போகிறேன்" எனத் தெரிவித்தனர்.

## புளோயம் பாண்டீன் பிடிப்படுதல்.

இப்படியாகபட்டணத்து காவல்படை தப்பி ஓடிவிடாவண்ணம் ரெயில் பாதைகளைத் தகர்த்துவிட்டு 13-ந் தேதி காலை ஜெனரல் பிரென்ச் பட்டணத்தின் அருகாமையாயிருந்த சில குன்றுகளின் மீது பீரங்கிபிரயோகஞ் செய்ய, போயர்கள் ஓட்டமெடுத்துவிட்டனர். உடனே இவர் பட்டணத்து அதிகாரிகளுக்குச் செய்தியனுப்பி பட்டணத்தை ஒப்புவித்தாலாச்சுது அல்லது சட்டி பீரங்கிகொண்டு ஊரை யழிப்பதாய் சொல்ல உடனே வெள்ளைக் கொடி பட்டணத்தின்மீதிலேற்றப்பட்டு, கவர்ண்மெண்டின் முக்கியமெம்பரான மிஸ்டர் பிரேஸல், மேயர், செகிரிடெரி, லான்டிராஸ்ட் மற்று முத்தியோகஸ்தரெல்லோரும் பட்டணத்தி லிருந்து 2 மைல் தூரம் எதிர்கொண்டோடிவந்து லார்ட் ராபர்ட்ஸிடம் பப்ளிக் உத்தியோகசாலைகளின் சாவிகளனைத்தையும் கொடுத்துவிட்டு பட்டணத்துள் அழைத்துச் சென்றனர். லார்ட் ராபர்ட்ஸூம் தமது பரிவாரத்துடன், சேனவீரர் புடைசூழ வெகு காம்பீரமாக புளோயம் பாண்டீனுள் பிரவேசித்தனர். ஜனங்கள் திரள்திரளாய்கூடி மிகுந்த ஆரவாரத் தொனியோடு நல்வரவு கொடுக்கவும், லார்ட் ராபர்ட்

ஸாம் கவர்ண்மெண்ட் கட்டடங்களை யெல்லாம் பார்வையிட்டு பிர ஸிடென்ட் ஸ்டேய்னின் மாளிகையி னுட்சென்று பிரிட்டிஷ் வீர துவஜமாகிய யூனியன் ஜாக் கொடியை பறக்கவிட்டனர். இச் சந் தோஷசெய்தியை லண்டன் பட்டணத்திற்கு 13-ந்தேதி யன்றே லார்ட் ராபர்ட்ஸ் தந்திகொடுத்த விபரமாவது:–"கடவுளுடைய ஒத் தாசையாலும் சக்கரவர்த்தினியுடைய சேனுவீரர்களின் சௌரிய பராக்கிரமத்தாலும், எனது கைகீழின் நடத்துதலிலுள்ள வீரர் புளோயம் பாண்டீனே கைப்பற்றிவிட்டனர். ஆரெஞ்சி பிரீஸ்டேட்டின் பழைய பிரஸிடென்டான மிஸ்டர் ஸ்டேய்னுல் நேற்று சாயந்தரமே விடப்பட்டுவிட்ட மாளிகையில் பிரிட்டிஷ் துவஜம் பறக்கிறது. பழைய கவர்ண்மெண்டின் முக்கிய மெம்பரான மிஸ்டர் பிரேஸர், மேயரதிகாரி, செகிரிடேரி லான்டிராஸ் அதிகாரி மற்றுமுள்ள அதிகாரிகளெல்லோரும் பட்டணத்திற்கு 2 மைலுக்கு தூரத் திலேயே என்னேவந்து சந்தித்து பப்ளிக் ஆபீஸுகளின் சாவிகளே என் கையில் ஒப்புவித்தனர். அயலிலிருந்த எதிரிகளெல்லாம் ஓடிவிட்டு எல்லாம் அமைதியாயிருக்கிறது. புளோயம்பாண்டீன் குடிகளெல்லோரும் சேனைகளுக்கு நல்வரவு கொடுத்தனர்" என்பதே. பிரிட்டிஷார் தென்முகமாய் புளோயம்பாண்டீனுள் பிரவேசிக்க ஆலோசனையிலிருக்கும்போதே பிரஸிடென்ட் ஸ்டேயன் வடபக்கமாய் யுத்தவீரர்களுடன் பிரிடோரியாவுக்குபோகும் ரெயில்பாதை வழியாய்சென்று புளோயம்பான்டீனுக்கு 120 மைல் தூரத்திலுள்ள குரூன்ஸ்டாட் என்னும் பட்டணத்தைச் சேர்ந்து அதை புதிய இராஜதானி பட்டணமாக இராஜபத்திரம் பிரசித்தப் படுத்தினர். இவர் புளோயம்பாண்டீனே விட்டு வெளிகிளம்பிவிட்ட பிறகு பிரஸிடென்ட் குரூகர் இரு குடியரசுநாட்டிற்கும் பிரஜாதிபதியாகவும் மிஸ்டர் ஸ்டேய்ன் ஆரெஞ்சிபிரீஸ்டேட் முழுமைக்கும் கமான்டென்ட் ஜெனரலாகவும் நியமகம் பெற்றுக்கொண்டனர்.



பிரசிடேன்ட் ஸ்டேயின்.

இந்த மிஸ்டர் ஸ்டெய்ன், ஆரஞ்சி பிரீஸ்டேட்டில் தான் புளோயம் பாண்டீனுக்கு வடகிழக்கே 50 மைல் தூரத்தில் ஓர் பட்டணத்தில் 1857-ம் வருஷம் அக்டோபர்மீ 2உ பிறந்தவர். இவர் தற்சமயம் படத்தில் தாடியும், கீடியுமாய் தள்ளாதவரைப்போல காணப்படினும் வயதென்னமோ ஏறக்குறைய 43–தான். இவர் தமது இளம்பிராயத்தில் நல்ல கல்விபயின்று தமது 19-வது வயதில் ஐரோப்பாவிற்குச் சென்று ஸ்காசட்டம், இங்கிலாந்திலும் ஹாலந்திலுமாக வாசித்து 25-வது வயதில் தமது நாட்டிற்கு வந்தவுடன் அட்டார்னி ஜெனரல் உத்தியோகம் பெற்று 6–வருஷத்திற்குப்பிறகு ஜட்ஜியாயினவர். கடைசியாக இப்போது 4–வருஷங்களுக்கு முந்திதான் பிரிஸிடெண்டாக நியமகம் பெற்றனர். இவர் இங்கிலீஷ்காரருடன் மெத்தப் பழக்கமுள்ளவராதலின் இச்சண்டையில் அவ்வளவாக தலையிட்டுக்கொள்ள மாட்டார் என்று எண்ணப்பட்டது. ஆனால் வர வர இவரும் பெருத்த கைகாரராகவே தோன்றுகிறது. இவர் ஒரு சமயத்தில் போயர்களும் பர்கர்களுமாக பாளையத்தில் கூடியிருக்குஞ் சமயத்தில் அவர்களை நோக்கிச் சொன்னதாவது:—

"எனது சகோதரராகிய ஆப்பிரிக்காண்டர்களே! இந்த யுத்தவிஷயமாய் நீங்கள் யாவரும் ஆயுதபாணிகளாய் இங்கு கூடியிருப்பதைப் பார்க்க சந்தோஷிக்கிறேன். இந்த சண்டையின் காரணம் நாமே தேடிக்கொண்டதல்ல; பிரிட்டிஷாரே நம்மேல் கொண்டுவந்திருக்கிறார்கள். நமது இரத்தஞ் சிந்துதலை அவர்கள் பார்க்க விரும்பியதுபோல பல விடங்களிலுஞ் சிந்தவைத்தனர். இன்னமும் நம் நாட்டின் முழுவதிலு முள்ளவர்களெல்லோரின் இரத்தம் சிந்துதலையும் பார்க்க விரும்புகின்றனர். ஆயினும் நாம் நம்பியிருக்கிற சகல வல்லமையுள்ள கடவுள் அவர்களது விருப்பத்தின் பிரகாரம் நாம் அழிந்து போக விடமாட்டார். கடவுள் நம்மோடிருக்கிறார். ஆகவே தைரியமாய் நம் சத்துராதிகளை எதிர்த்து நின்று போர் புரியுங்கள். நாம் சுயாதீனத்திற்கும் நம் சீவனுக்குமே சண்டை

போகிறேம். எவனொருவன் தன்னுயிரைக் காப்பாற்ற பிரயாசைப்படு கிறனே அவன் தன்னுயிரை இழப்பான், எவனொருவன் தன்னுயிரை இழக்க விரும்புகிறனே அவன் தன்னுயிரைக்காப்பான். என நமது பிரசிடென்ட் குரூகர் சொன்னதை நினைவு கூருங்கள். ஆகையால் உங்கள் சத்துராதிகளின் தொகை அதிகமாயிருக்கிறதென எண்ணி மனச்சோர் வடையாதேயுங்கள். நமது வல்லமையுடைய கடவுள் நம்மோடிருக்கிறர்; நமக்கு வெற்றியையே கட்டளையிட்டிருக்கிறர். நீங்கள் சோர்ந்து போகாதேயுங்கள். நம்முன்னேர்கள் கடவுளில் விசுவாசம் வைத்ததுபோல நீங்களும் உங்கள் விசுவாசத்தை அவரில்வையுங்கள்; கொள்ளைகளையும் அக்கிரமங்களையும் செய்யாதபடி ஜாக்கிரதையாயிருங்கள்; அப்பேர்பட்ட துர்ச்செய்கைக்காரர்களுக்கு கடவுள் உபகாரியா யிருக்கமாட்டார். நீங்கள் கிறிஸ்தவர்களைப்போல போர்புரியுங்கள்; அப்போது நம் கடவுள் உங்களை ஒருநாளும் உங்கள் சத்துராதிகளின் கையில் ஒப்புக்கொடுக்கமாட்டார். நமது நாட்டின் சுயாதீனத்திற்காக பாடுபடும் நம் விருப்பத்திற்கு நமது வல்லமையுடைய கடவுள் கிருபை புரிவாராக" எனக்கூறினர்.

இவர் சங்கதி இப்படியாளுல் ஆரெஞ்சி பிரீஸ்டேட்டுள் தெற்கேயிருந்து 3-ரெயில் பாதைகள் போகின்றன. ஒன்று கோலஸ் பர்க்கிலிருந்து நாவால்ஸ்பாண்ட் என்னுமிடத்தில் ஆரஞ்சி நதியைக்கடந்து புளோயம் பாண்டீனுக்குப் போகிறது. இன்னொன்று ஸ்டார்ம்பர்க்கிலிருந்து பர்கர்ஸ்டிராப்பில் போய்பிரிந்து வடமேற்காய் பெத்தியூலுக் கருகாமையா யிருக்கும் ஆரஞ்சி யென்னும் நதியைக் கடந்து முன்சொன்ன பாதையோடு ஸ்பிரிங்பாண்டீனில் கூடுகிறது. மூன்றுவது பாதை பர்கர்ஸ்டிராப்பிலிருந்து வடகிழக்காய் ஆரஞ்சிபிரீஸ்டேட் தெண்கீழ் எல்லையிலுள்ள அலிவால் நார்த்துக்குச் செல்லுகிறது. மேற்சொன்ன முதல் பாதையிலுள்ள நார்வால்ஸ்பாணடில் ஜெனரல் கிளமென்ஸும் 2-வது பாதையிலுள்ள பெத்தியூவில் ஜெனரல் காடாகரும் 3-வது பாதையிலுள்ள அலிவால் நார்த்தில் கர்னல் பிரபாண்டு மிருந்துகொண்டிருந்தனர். அதற்கு முந்திய ஞாயிற்றுக்கிழமைதான் இதை யிவர் மும்முரமான சண்டையிட்டுக் கைப்பற்றினர்.

ப்ளோயம்பாண்டீன் பிடிப்பட்டதை யறிந்த டச்சுக்குடிகள் ஆயிரமாயிரமாய் கர்னல் பிரபாண்டினிடம் சரணடைந்து கீழ்ப்படிந்தனர். லேடிஸ்மித் விடுதலையாகிவிட போயர்கள் மறுபடியும் நெட்டால்பக்கத்தில் கிளென்கோவிற்கு தென்புறத்தில் ஸ்தானஞ்செய்துகொண்டிருக்க அவர்களை விரட்டியடிக்க ஜெனரல் புல்லர் கர்

னல் பெச்யூலிடம் 350 கலோனியல் படையை அனுப்பினராயினும் பீரங்கி போதாமையால் டுகிலாவிற்கே திரும்பி வந்து விட்டனர். ஆயினும் தகுதியான சேனைபலத்துடன் மறுபடி ஜெனரல் புல்லர் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறினர். இப்படியாக பிரிட்டிஷாருக்கு நாலாப்பக்கத்திலும் ஜெயக்குறிகள் காணப்படவே போயர்களும் சுறுசுறுப்பாய் வேலைசெய்யத் தொடங்கி புளோயம் பாண்டினைச் சுற்றியுள்ள பெத்துவி, ரோக்ஸ்வில்லி, ஸ்மித்பீல்ட், புஷ்மான்காப், அலிவால்நார்க், ரெட்டர்ஸ்பார்க், வெப்பன்னர், தபான்சு முதலிய இடங்களிலெல்லாம் சூழ்ந்துகொண்டிருந்தனர்.

போயர்களிப்படியாக அதம்பண்ணிவரினும் அவர்களின் கமாண்டென்ட் ஜெனரலாகவிருக்கும் ஜெனரல் ஜோபார்ட் தமது சேனைவீரர்களைநோக்கி, "என் வீரர்களே! நீங்கள் சோல்ஜர்களைச்சுடாதீர்கள். ஏனெனில் அவர்கள் வயிற்று ஜீவனத்திற்காக சம்பளத்திற்கு உழைப்பவர்கள். இங்கிலீஷ் ஜெனரல்களை சுடாதீர்கள்; அவர்கள் விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள். ஆனால் யுத்தத்தில் சைகை காட்டி நடத்துகிற ஆபீஸர்களைச் சுடுங்கள்" என இம்மாதிரி புத்திகளைப் புகட்டி வந்தனராம்.

## ஜெனரல் ஜோபர்ட் மரணம்.

ஜெனரல் ஜோபர்ட் இவ்வண்ணம் தன் சைனியங்களை யுக்தி புத்தியாய் நடத்திவரும் நாளில் திடீரென வயிற்று நோய் கண்டு சுகவீனமடைந்து உடனே பிரிடோரியாவுக்குத் திரும்பிவிட அந்த அதே வியாதியால் மார்ச்சுமீ 27-ந் தேதி செவ்வாய்க்கிழமையன்று மரித்துப்போயினர். இவர் மரித்துப்போகுஞ் சமயத்தில் "ஆ! என் ஏழை ஜனமே; ஆ! என் ஏழை தேசமே! எனச் சொல்லிக்கொண்டே உயிர் துறந்தனராம். தமது கடைசித் துளி இரத்தம் சிந்தும்வரை போர் புரிவதாய்க் கூறி வீராவேசமாய் எதிர்த்து நின்ற இந்த வீர கிழச்சிங்கம் மரித்துப்போனது பிரிட்டிஷாருக்கு மிகுந்த அனுகூலமாய் முடிந்தது. ஆயினும் இவர் மரித்ததற்காக ஆங்கிலேய சேனா நாயகர்களில் அநேகர் விசனமுற்றனர். மகாராணியுங்கூட இவரது மரணத்திற்காக துக்க ஆறுதல் தந்தியொன்று பிரசிடென்ட் குருகருக்கு அனுப்பிவைத்தனர். மற்றும் பெரிய மனுஷர்களும் துக்க ஆறுதல் தந்திகளனுப்பிவைத்தனர். இவர் சவச்சேம கைங்கிரியம் வெகு விமரிசையாகவே பிரிடோரி

யாவில் நிகழ்ந்தது. அச்சமயத்தில் அங்கு போயர்களின் குருவாகிய ரெவரெண்ட் மிஸ்டர் போஸ்மான் பிரசங்கித்ததை அவ்விடமிருந்து தன் காதால் கேட்டிருந்த ஒரு ஐரிஷ் சீமானான மிஸ்டர் மிச்சல் டேவிட் என்பவர் அந்த பிரசங்கத்தை பின் வருமாறு எழுதி பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கிறார். அதாவது :—

"ரெவ்ரெண்ட் மிஸ்டர் போஸ்மான் தமது பிரசங்க வாக்கியங்களாக, ஆதியாகமம் 48-ம் அதிகாரம் 21-வது வசனமாகிய:

"இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, இதோ நான் சாகிறேன்; ஆனால் கடவுள் உன்னோடிருந்து உன்பிதாக்களுடைய தேசத்தில் உன்னை மறுபடியும் கொண்டுவந்து சேர்ப்பார் என்று சொன்னார்" என்பதையும், சங்கீத புஸ்தகம் 77-வது அதிகாரம் 10-ம் வசனமாகிய 'கடவுள் இரக்கமுள்ளவரா யிருக்க மறந்துபோனாரா?" என்பதையும் எடுத்துக்கொண்டு பிரசங்கித்தனர். இவரது பிரசங்கமாவது :—" இப்போது நம்மை ஓர் காரிருள் சூழ்ந்திருக்கிறது. தற்போது நம் கையிலுள்ள ஆயுதங்கள் ஆசீர்வதிக்கப்படாமலிருக்கிறது. நமது எதிர்காலமும் மந்தாரமாக விருக்கிறது. துக்கம், துன்பம், இடுக்கண்கள் எல்லாம் சாதாரணமாயுள்ளதுதான். உண்மையாகவே இது இருட்டாகவே யிருக்கிறது. கிம்பர்லி லேடிஸ்மித் பட்டணங்கள் விடுவிக்கப் பட்டாய்விட்டது. ஜெனரல் கிரான்ஜி 4000 பர்கர்களுடன் சிறையாக்கப்பட்டுவிட்டனர். புளோயம்பான்டீன் பட்டணம் அதில் மீதியாயுள்ள குடிகளின் சந்தோஷ தொனியோடு எதிரிகளின் கையில் விழுந்தது. இப்போதோ, எல்லாவற்றிற்கும் மேலாக நமது கமாண்டென் ஜெனரலான ஜோபார்ட் இறந்துபோயினர். அப்படியானால் கடவுள் இரக்கமுள்ளவரா யிருக்க மறந்துபோனாரா? நமது முற்பிதாக்களின் நிலத்திற்காக அநேக நூறு கணக்கான விலையுயர்ந்த உயிர்களை பலிகொடுத்தும், அநேக நூறுகணக்கான உயிர்கள் காயமடைந்தும் சிறையாக பிடிக்கப்பட்டும் இப்படியான சேதமாகியும் இன்னும் முடிவைக்காணோம். நமது மொத்தசேனைகள் அநேகமாயிரத்திற்குக் குறைவாகிவிட்டது. கடந்த ஆறு நீண்டமாதங்களாக இரத்தப்பிரிய சண்டையில் நமது பர்கர்கள் பல்லாட வேண்டியதா யிருந்து போராடினர். எனினும் இப்போதுதான் கடும்போரின் துவக்கமெனக் காணுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பூமிக்கும் வீட்டுக்கும் நியாயத்திற்கும் சுயாதீனத்திற்குமாய் போர்புரிந்த நமது வீராதி வீரரான இவர் இந்த மரணத்தினால் நம்மிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டார். உண்மையாகவே இது காரிருள். என்றாலும் கடவுள் இரக்கமுள்ளவரா யிருக்க மறந்துபோனாரா? இந்த இரண்டு குடியரசுகளின் பர்கர்கள் தற்போது போர்புரிய அதைரிய மடைந்து கடவுளால் கொடுக்கப்பட்ட இத்தேசத்தின்மீது எதிரிகளேறிவர கைகளை கட்டிக்

கொண்டு பார்த்துக்கொண்டிருக்கத் துணிவார்களா? அது ஒருபோதும் இல்லவேயில்லை. அப்பேர்பட்ட கோழைத்தனமாயும் அவநம்பிக்கை யுள்ளவர்களாயு மிருப்போமானால் கடவுளால் நாம் சபிக்கப்பட்டவர்ளாவதுடன் சுயாதீனமான ஜனங்கள் என்றழைக்கப்படவும் நாம் பாத்திர மற்றவர்களாவோம். ஒருவேளை இப்போதுதான் நமது நீதியும் பரிசுத்தமுமான காரணத்தின் போர்புரியும் துவக்க காலமாக விருக்கலாம். நமது சகோதரரின் மரணமே நமது துன்பங்களை மாற்றுவதின் காலமாயிருக்குமாயின் அதை யார் அறிவார்! விடியற்காலைக்குமுன் காரிருள் மூடுவதுபோல இப்போதிவரின் மரணமே நமக்கு இரக்ஷிப்பைக் கொடுப்பதா யிருக்கலாம். அப்படியே யிருக்குமாயின் இவரது பெண்ஜாதி பிள்ளைகள் யாவரு மிவருக்காக துக்கிக்காது கடவுளினிஷ்டத்திற் கொப்படைத்து குதூகலமா யிருப்பார்களென நம்புகிறேன். இந்த இறந்த நமது சகோதரர் இன்றைய்தினம் மாத்திரம் உயிரோடு நம்முடன் பேசக்கூடியவரா யிருப்பாரானால் அவரது வார்த்தைகள் "நான் சாகிறேன்; ஆனால் கடவுள் உங்களோடிருப்பார்" என்பதாகவே யிருக்கும். கடவுளின் பிள்ளைகளே! கடவுள் உங்களோடிருந்தார் என்பதிலும் இப்போதும் அவரே நமக்கு தஞ்சமும் அடைக்கலமுமா யிருக்கிறார் என்பதிலும் சந்தேகிக்கிறீர்களோ? நாம் உண்மையாகவே சஞ்சலக்கடலி னழுந்திவிருக்கிறோம். என்றாலும் அங்கும் ஆண்டவர் அவரது மக்களாகிய நம்மோடிருக்கிறார்.

கடவுளிப்படி யிருப்பாரானால் நரகம் மோக்ஷமாகவும், இருட்டு வெளிச்சமாகவும், நமது பலவீனம் தெய்வ பலமாகவும் மாறும். ஆகவே நாமவரிடத்தில் நம்பிக்கை வைப்போமாக. அவர் நம்மை ஒருநாளும் கைவிடமாட்டார். எதிரிகள் நம் தேசத்தை அடையவேண்டியதா யிருக்குமாயின் அவர்கள் நமது பிணங்களின் மீதேறிச்சென்று அடைந்துகொள்ளட்டும். முற்பிதாக்களின் தேசத்திற்காக மரிப்பதே இனிமையாகும். அல்லது இவ்வளவுகாலம் சிந்திய விலையுயர்ந்த இரத்தமெல்லாம் வீணாகப் போக விரும்புகிறீர்களா? இந்த தேசத்திற்காக நமது முற்பிதாக்கள் நெட்டாலிலும் கேப்காலனியிலும் இன்னுமிந்த நம் தேசத்திலேயும் இரத்தஞ் சிந்தினர். பயப்படாமல்மட்டு மிருங்கள், "காலைக்கு கடவுள் உங்களுக்கு அனுகூலமாய் அதிசயங்களைச் செய்வார்" என்பதை மனதில் வைத்து தைரியமாயிருங்கள். எல்லாக் காரியங்களையு மியற்ற கடவுளே வல்லமையுள்ளவர். அநேகாயிரமா யிருந்த சேனையை கிடியனால் நடத்தப்பட்ட 300-பேர் அடங்கிய சிறுபடை தோற்கடிக்கவில்லையா? ஜெனரல் கிரான்ஜி யில்லாவிடினும் மஜூபா வீர பராக்கிரமசாலி யில்லாவிடினும் கடவுள் ஜெயத்தைத் தருவார். அதிகமான சேனைபலத்தின்மீது உங்கள் நம்பிக்கையை வைக்காது எப்போதும் நீதியுள்ள கடவுளின்மீது வையுங்கள். இந்த நமது சகோதரரின் மரணத்தால் நமக்கு துக்க காரணத்தைக் கொடுத்ததற்காக கடவுளுக்கு ஸ்தோத்திரம். இவர் நம்மோடிருக்க

## நான்காம் வால்யம், மூன்றும் வால்ய

இரண்டாம் வால்யம், முதல் வால்யம்

# பூலோக விநோத

## கதைகள்.

என்னும்

அநுபவ ஞான நூல்

(படங்களுடன்.)

உலக நடவடிக்கைகளையும், ஆழ்ந்த இரகசியங்களையும், அ
னுபவ ஞானங்களையுமே திரட்டி, சென்னை மஹா விகட தூதன் ப
த்திராதிபரா லியற்றப்பட்ட இப்பெயர் பூண்ட புத்தகத்தின் நெ
வால்யங்கள் இப்போது விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இது
தற்காலம் பயன் தரத்தக்க தமிழ் நூல்களில் ஒன்றென்பதற்குச்
சந்தேகமில்லை. இதில் மானிடர்க்கு அவசியமான சகல கற்பனை
களும் புத்திப் போதனைகளும் கதைப்போக்காய்த் தெள்ளிய அ
லங்கார செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும்
இதைப் படித்தறியவேண்டியது அவசியம். வாசிப்பவர்களுக்கே
இதனருமை விளங்கும். புஸ்தகம் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில்
8 – பேஜ் சைசில் அச்சிட்டு அழகாக பயிண்டு செய்திருக்கிறது
விலை ரூபா 1-0-0.

வி. பி. போஸ்டில் முதல் வால்யம் 1—4—0

,, ,, இரண்டாம் வால்யம் 1—5—0

,, ,, மூன்றாவது வால்யம் 1—5—0

,, ,, நான்காவது வால்யம் 1—4—0

தெலுங்கு

## பூலோக விநோதக் கதைகள்.

முதல் வால்யம் மாத்திரம் அச்சிட்டுத் தயாராயிருக்கிறப
யால் எமது அன்பர்கள் எம்மீது தயவுபாராட்டி, தங்கள் தெலு
கு தெரிந்த நேசர்களுக்கு இதைப்பற்றித் தெரிவிக்கக் கேட்(
கொள்ளுகிறோம்.

விலை வி. பி. சார்ஜோடு 1—ரூபா.

Ed

மஹா விகட தூதன் ஆபீஸ்.—சென்னபட்டணம்.